
ISSN 1704-4353

அடிபணியுங்கள்; இல்லை
அழித்திடுவோம். அமெரிக்க வேதம்

# உலக தமிழோசை

சர்வதேச காலாண்டு தமிழ் சஞ்சிகை பெப்பிரவரி 2003
இதழ் 4




## சிதைந்த வாழ்வை புனரமைக்கத் துடிக்கும் மக்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற
2003


நகரின் மத்தியில் ஓர் வித்தியாசமான புடவை மாளிகை
MILLENNIUM
SAREE PALACE
AS USUAL SAREES
UNUSUAL SELECTIONS
2003ம் ஆண்டிற்கான புதிய வரவுகள்
PURE SILK WEDDING SAREES
CASUAL SAREES
SALWAR KAMEEZ
CHUDIHAR
GARARA
SHORT-TOP-TROUSER
SHORT-TOP-BELL BOTTOM
FISH CUT - SUITS
SEE IT - ANYWHERE
CHOOSE IT - SOMEWHERE
BUY IT - HERE
மிலெனியம்
சாறி பலஸ்
1245 Ellesmere Rd, Scarborough, ON.
(Midland & Ellesmere)
Tel:416.750.9613
மிலெனியம்
சாறி பலஸ்
வெகு விரைவில் திரைக்கு வருகின்றது
S.K. திசன் இன்
கலகலப்பு
முழுநீள நகைச்சுவைச் சித்திரம்

# உள்ளே...




சிதைந்த வாழ்வை புனரமைக்கத் துடிக்கும் மக்கள்




வணிகம் செய்திடுவோம் - இங்கிலாந்து




அடிபணியுங்கள்; இல்லை அழித்திடுவோம். அமெரிக்க வேதம்




உலகில் மொழிகள் சொல்லும் சோகங்கள்




புகலிட சினிமாவும் "வாய்ச்சொல்லில்" குறும்படமும்




சர்வதேச கிரிக்கட் கிண்ணம் - 2003


| | |
|---|---|
| ஊரும் உலகமும் | 04 |
| கண்வைத்தியர்களின் குறும்பார்வைக் கோளாறு | 06 |
| தொடரும் எயிட்ஸ் அனர்த்தம் | 07 |
| நியாயவிலை மருந்துக்கு முட்டுக்கட்டை | 08 |
| வட்டி: தேசத்தின் அளவுகோல் | 09 |
| தனியொருவனுக்கு... | 17 |
| ஜேர்மனி | 19 |
| மறைந்திருந்து கொல்லும் எதிரி | 23 |
| வேகம்.. வேகம்.. வேகம் | 25 |
| இலத்திரன் | 26 |
| உலகின் மோசமான இணையத் தணிக்கை | 27 |
| இந்திய எச்சில் திருட்டு | 28 |
| இலக்கினம் என்றால் என்ன | 29 |
| முடிச்சுப் போடுவது எப்படி | 34 |
| பெண்கள் அழகு சாதனத்தில் தாஜ்மஹால் நிவாரணம் | 35 |
| "நாளை" தென்னாபிரிக்காவின் முதல் படம் | 38 |
| எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின் | 44 |
| மீண்ட வாழ்வு | 49 |
| காதலர் தினம் | 51 |
| கவிதைகள் | 52 |
| சிட்னி மலர் | 56 |


Published by Ulakathamiloszai Publications - Canada

உலகத் தமிழோசை

தமிழர்களுக்கான சர்வதேச காலாண்டு சஞ்சிகை
இதழ் - 4, பெப்பிரவரி 2003

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்

பிரதம ஆசிரியர்: இ. செந்தில்நாதன்
editor@ulakathamiloszai.com

ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்

ஆலோசகர் குழு: சிவ ஞானநாயகன்
சி. விமலநாதன்
எஸ்.கே. தீசன்
இ. ஹரன்
பரம். ஜி

வடிவமைப்பு: யுஜி வரைகலை அமையம்

எழுத்தமைப்பு உதவி: சத்தியரூபி சபாரத்தினம்

வெளியூர் தொடர்பாளர்கள்: இ. செல்வநாதன் (யாழ்ப்பாணம் - 94.21.2928)
ச. இந்திரன் (யாழ்ப்பாணம் - 94.21.3528)
செ. மகேந்திரன் (மட்டக்களப்பு - 94.65.40619)
பரதன் கந்தசாமி (கல்முனை - 94.67.29903)
கே. ராஜேஷ் (சென்னை, இந்தியா - 91.44.486.1875)
ந. கருணாகரன் (அவுஸ்திரேலியா -61.2.98.964014)
இ. கந்தசாமி (பிரான்ஸ் -33.1.4685.0127)
மு. பற்குணராஜா (ஜேர்மனி - 49.30.4976.6526)
எஸ். மகாலிங்கம் (மாலி) (இங்கிலாந்து - 44.208.422.5541)
சூரி வடிவேல் (இங்கிலாந்து - 44.208.641.4771)
ம. செல்வகுமார் (நெதர்லாந்து - 31.76.541.2345)
க. ரவீந்திரகுமார் (நோர்வே - 47.702.1608)
எஸ். வவிச்சந்திரன் (டென்மார்க் - 45.978.555.88)
பி. பி. குமார் (அமெரிக்கா - 1.978.447.1550)
ஐ. நந்தன் (ஒட்டாவா, கனடா - 1.613.823.6667)
எஸ். கணேஷ் (வன்கூவர் 1.604.931.4707)

விநியோகம்: செ. விஜயபாலன் - 416.804.9555
செ. கண்ணன் - 416.282.8059
(விளம்பரம் பப்ளிகேஷன்ஸ், கனடா)

க. மகேசன்
(முருகன் புத்தகசாலை, கனடா - 416.285.9118)

குமார்
(மொன்றியல், கனடா 514.831.7996)

நிரு ஐரோப்பா லிமிட்டட்
(இலண்டன் -208.640.8228)

பூபாலசிங்கம் புத்தகசாலை
(கொழும்பு - 504.266)

ந. கருணாகரன்
(அவுஸ்திரேலியா -2.98.964014)

க. சதாநேசன்
(நியூசிலாந்து - 649.528.9396)

முகவரி: P.O.Box 37527, 31 Tapscott Rd.
Toronto, ON M1B 5P9, Canada

தொலைபேசி: 416.282.8059
தொலைநகல்: 416.282.4978
மின்அஞ்சல்: info@ulakathamiloszai.com
இணையத்தளம்: www.ulakathamiloszai.com

விலை:

| | |
|---|---|
| Canada | Can $ 2.50 |
| U.S.A. | US $ 2.00 |
| Europe | € 2.00 |
| Sri Lanka | Rs. 50.00 |
| India | Rs. 25.00 |
| Australia | $ 2.50 |
| New Zealand | $ 2.50 |



பதிப்புரிமை: 2002 உலகத்தமிழோசை பப்ளிகேஷன்ஸ்.
உலகத் தமிழோசையில் வெளிவரும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Copyright: 2002 Ulakathamilozai Publications.
Reproduction in whole or in part without written permission of the Editor is prohibited.
Ulakathamiloszai and Design are protected through trademark registration in Canada.


உலகத்தமிழோசை தொடர்பான ஆக்கங்கள், கருத்துக்களை வரவேற்கின்றோம்

# தமிழோசையின் நாதம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, அதேவேளை ஈழத்தமிழர் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்த வல்ல இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தை முடிவடைந்து, அவற்றின் பெறுபேறுகளை ஆராயும் தருணத்தில், தமிழோசையின் நான்காம் இதழ் உங்களை வந்தடைகின்றது.

சமாதானம் என்பது ஒரு சங்கிலிக் கோர்வை போன்றது. அதன் உறுதிக்கு இயல்பு நிலை, உயர் பாதுகாப்பு வலயங்களினுள் வாழ்ந்து பின்னர் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, வடக்கு, கிழக்கில் சேதமாக்கப்பட்ட இல்லங்கள், கல்வியகங்கள் உட்பட அனைத்துக் கட்டிடங்களின் புனரமைப்பு முதலியன உறுதுணை புரிகின்றன. அதாவது இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஒரு சங்கிலியில் ஓர் இடத்தில் நிலையின்மை காணப்படின், ஏனையவையும் பாதிக்கப்படும்.

இந்த உண்மையை இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துகொண்டு பேச்சுவார்த்தைகளில் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

உலகத்தமிழோசையின் பிரதான கட்டுரையும் இந்த உண்மை நிலையை பிரதிபலிக்கிறது.

உலகின் பல கலாசாரங்கள் மொழி சார்ந்தவையாக உள்ளன. அப்படியானால் அந்தமொழி பேசுபவரின் எண்ணிக்கை குறைந்து போகும் பட்சத்தில் அக்கலாசாரத்தின் எதிர்காலம் என்னவாவது? இன்று உலகில் பல மொழிகள் மறைந்து விட்டன; பல மறையும் நிலையில் உள்ளன. இவை பற்றிய கட்டுரையையும் பலதும் பத்தும் பகுதியில் நீங்கள் வாசிக்கலாம்.

அதுமட்டுமல்ல; வட்டிவீதங்கள் பற்றி நாங்கள் வாசித்திருக்கிறோம். அமெரிக்கா வட்டிவீதத்தை கூட்டினாலோ குறைத்தாலோ, அது இலங்கையிலும் கூட எதிரொலிக்கும். இது பற்றியும், கனடிய தமிழ் குறுந்திரைப்படமொன்று பற்றியும், இங்கிலாந்துடன் வர்த்தகம் செய்வது பற்றியும் பல எழுத்தாளர்கள் இந்த இதழில் அலசியுள்ளனர். வழக்கம் போல், கவிதைகளும், உங்களை மகிழ்விக்க இருக்கின்றன.

*பதிப்பாளர்*

அட்டைப் படம்: Reuters


# நீங்கள் தந்தவை



'உலகத் தமிழோசையின்" மூன்றாவது இதழின் தலைப்புக் கட்டுரை பல வாசகர்கள் கவனத்தை ஈர்த்திருந்தது. இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க எவ்வாறு நாசூக்காக தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு தடைக்கற்களைப் போடுகிறார் என்று கட்டுரையில் விபரிக்கப்பட்டிருந்ததைப் பல வாசகர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அதேபோல் 'வணிகம் செய்திடுவோம்' என்ற தலைப்பில் புதிய பகுதியொன்றை ஆரம்பித்து இந்தியாவுடன் வணிகம் செய்வது பற்றி எழுதியிருந்ததையும், சிந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம் பற்றிய கட்டுரையையும் பலர் விமர்சித்திருந்தனர்.

சென்ற இதழில் பிரசுரமாகியிருந்த "பாக்கு நீரிணையில் இராமர் கட்டிய பாலத்தின் சுவடுகள்" என்ற தலைப்பிலான கட்டுரையில் பிரசுரமான புகைப்படம் ஆபிரிக்க நாடான மொறொக்கோவின் வடமுனைக்கும் ஐரோப்பிய நாடான ஸ்பெயினின் தென்முனைக்கும் இடையிலுள்ள ஜிப்ராஸ்டார் நீரிணை (Strait of Gibraltar) ஐ நினைவுபடுத்துவதாக ரொறன்ரோ வாசகர் கனிஷ் ரங்கநாதன் எழுதியிருந்தார்.




நவம்பர் 2002ஆம் ஆண்டில் வெளிவந்த சஞ்சிகையில், விளையாட்டுத்துறை சம்பந்தமான கட்டுரை தவிர்க்கப்பட்டது என்னைப் போன்ற விளையாட்டுப் பிரியர்களிற்கு ஓர் ஏமாற்றம். தயவு செய்து இத் தவறை தொடர வேண்டாம் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

நிமல் முருகானந்தம்
கொழும்பு, இலங்கை.

********

முதல் மூன்று இதழ்களும் வாசித்து மகிழ்ந்தேன். மற்றவர்களையும் வாங்கி வாசிக்க உதவி புரிகின்றேன். இவ்வாறான சஞ்சிகையை வெளிக்கொணர்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை என்னால் உணரக் கூடியதாக உள்ளது. எனினும் இச் சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடுமாறு அன்பாகவும், பணிவாகவும் கேட்டு விடை பெறுகின்றேன்.

ஜெ. ஜெயமாலினி
அராலி, யாழ்ப்பாணம்.

********

உலகளாவிய ரீதியில் வெளிவரும் சஞ்சிகை எனக் கூறும் 'உலகத் தமிழோசை', DonMills & Eglinton (Toronto) இல் கிடைப்பதில்லை.

இரா. செல்வச்சந்திரன்
DonMills, Toronto

********

காலம் தவறாமல் சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருவதற்கு எமது பாராட்டுகள். தரம் அதிகரித்திருப்பதை அறிய மகிழ்ச்சியாக உள்ளது.

தரம் குறையாமல் தொடர்ந்து வரும் என எதிர்பார்க்கின்றேன்.

செ. விஜி
ஒட்டாவா, கனடா

********

எம் மக்களின் நலன் பேணும் நல்லதோர் சேவையை நீ செய்கிறாய். தமிழோசையே நீ தங்கத்தை விடவும் தரமானதாக எம்மிடத்தே தவழ்கிறாய். எம் மனதை கொள்ளை கொண்ட இன்பத் தமிழோசையே நீ தாங்கி வரும் எண்ணியார் திண்ணியர், ஊரும் உலகமும் சுகாதார வாழ்வு, அறிந்து கொள்வோம், உலக அரசியல் யாவும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

அனைத்து விடயங்களையும் உலகுக்கு அறியத்தரும் தமிழோசையே காலாண்டுக்கு ஒரு முறை ஒரு நாடு பற்றியும் அறியத்தர முடியுமா?

சு. பாஸ்கரன்
ரொறன்ரோ, கனடா

********

எங்கள் புதுவருடத்திற்கான விஞ்ஞான விளக்கம் தெரியாமல் தைப்பொங்கலை தமிழ் புதுவருடமாகக் கொண்டாடுமாறு ரொறன்ரோவில் தமிழ்ப் பத்திரிகைகளும் இந்தியாவிலிருந்து சில பத்திரிகைகளும் எழுதி வருகின்றன. எமது புதுவருடம் சமய சம்பந்தமில்லாது, விஞ்ஞான காரணங்களை மட்டுமே கொண்டது என உங்களது 2வது இதழில் விளக்கியதற்கு நன்றி.

அருணா
மொன்றியல்

********

தங்கள் தங்கம் சம்பந்தமான கட்டுரையை வாசித்த பின்பாக அதில் ஒரு குறிப்பிட்ட பணத்தை முதலிட்டேன். அப்பணத்தின் பெறுமதி அதிகரித்துள்ளது. பெரி. முத்துராமனுக்கு என் நன்றி.

தங்கள் சேவை தொடர வாழ்த்தும்

செல்வம்
Montreal, Canada




## பின்லாடனின் கப்பல்கள்



அமெரிக்காவின் பிரதான எதிரியான உசாமா பின்லாடன் ஒரு அசகாய பேர்வழி. நியூயோர்க்கில் இரு வானுயர் கோபுரங்களைத் தகர்த்தது மட்டுமன்றி, அதனையடுத்து தனது முழு வல்லமையையும் பாவித்து அமெரிக்கா தொடுத்த யுத்தத்தின் தீ தம்மை அணுகாமல் மறைந்து விட்டார்.

இன்று உலகில் எந்த மூலையில் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டாலும், அங்கு அவரின் கைவண்ணத்தை உள்ளூர் மற்றும் மேலைத்தேய புலனாய்வு அதிகாரிகள் பார்க்கின்றனர்.

இப்போது பின்லாடனும், அவரது அமைப்பான அல்கேடாவும் (தளம்) 15 கப்பல்களை வைத்திருப்பதாகவும் மேற்கத்தைய அதிகாரிகள் கூறுகின்றனர். தமது அதி நவீன இராணுவ செய்மதிகள் மூலமும் இந்த 15 கப்பல்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் தமது கண்காணிப்பில் வைத்திருந்தும் இடையிடையே அவை "டிமிக்கி" கொடுத்து விடுவதாக, அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இக்கப்பல்கள் அடிக்கடி தமது பெயரை மாற்றுவது மட்டுமல்லாமல், தமது வண்ணப் பூச்சை மாற்றியும் புலனாய்வுக் கண்களிலிருந்து தப்பி விடுகின்றன.

மேற்கத்தைய கண்களிலிருந்து தப்பிக்க இக் கப்பல்கள் பாவிக்கும் இன்னுமொரு யுக்தி பதிவு நாட்டை மாற்றிக் கொள்ளல். சைபீரியா, பனாமா போன்ற நாடுகளில் பணம் கொடுத்து யாரும் கப்பலை பதிவு செய்து கொள்ளலாம். உதாரணமாக, St. Vincent and the Grenadines என்ற சிறு கரிபிய நாட்டின் சனத்தொகை 110,000 மட்டுமே. ஆனால் இந்நாட்டில் 1.300இற்கு மேற்பட்ட கப்பல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கப்பல்கள் பொதுவாக சீமெந்து, எள்ளு போன்றவற்றைக் கொண்டு செல்லப் பயன்பட்டாலும் இடையிடையே அல்கேடா தீவிரவாதிகளையும் வெடிமருந்துப் பொருட்களையும் கடத்தவும் பயன்படுத்தப்படுவதாக இவ்வதிகாரிகள் கூறியுள்ளனர். உதாரணமாக, 1998ஆம் ஆண்டில் இரு ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க தூதரங்களைத் தகர்க்க இக்கப்பல்கள் மூலம்தான் வெடிமருந்துகள் கடத்தப்பட்டனவாம்.

## பிளாஸ்ரிக் மீது போர்




தாய்வானின் புதிய எதிரி பிளாஸ்ரிக். அதிகரிக்கும் பிளாஸ்ரிக் குப்பையால் கசந்து போன தாய்வானின் அரசாங்கம், பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட பைகள், கோப்பைகள், கரண்டிகள், கத்திகள் போன்றவற்றைத் தடை செய்ய சட்டம் பிறப்பித்துள்ளது.

உணவகங்கள் உட்பட வர்த்தக நிறுவனங்களும் பொதுமக்களும் பிளாஸ்ரிக் பாவனையை நிறுத்த 45 நாட்கள் அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த செயற்கைப் பொருளை உபயோகிப்பவர்களுக்கு 5,000 டொலர் வரை தண்டனை விதிக்கப்படும்.

தொண்ணூறாம் ஆண்டுகளில் தாய்வானில் பரவிய செங்கண்மாரி நோயையடுத்து அரசாங்கம் பிளாஸ்ரிக் பாவனையை ஊக்குவித்தது. குறிப்பாக, ஒரு முறை பாவிப்பு பிளாஸ்ரிக் கரண்டி, கத்தி போன்றவை சுகாதாரத்தைப் பேணுவது மட்டுமல்ல, உணவகங்களின் சுகாதார முறைகளில் நம்பிக்கையில்லாத பொதுமக்களுக்கும் உதவியாக இருந்தன.

எனினும் பிளாஸ்ரிக் பாவனை துரிதமாக அதிகரித்து வருவதால், அதனை சூழலுக்கு உகந்த முறையில் அழிக்க முடியாமல் இருப்பதால் இது பிரச்சினையாக மாறிவிட்டது.

## மரமேறி விழுந்தவனை மாடேறி....

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் இலட்சக் கணக்கான மக்கள் பஞ்சத்தால் வாட, உலகின் மிகப் பெரும் பாற்பொருள் நிறுவனமான நெஸ்லே (Nestle) அந்நாட்டின் முன்னாள் இராணுவ சர்வாதிகாரி செய்த "தவறு" களுக்காக ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கேட்டு நிற்கின்றது.

சுவிற்சர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்ட பெரும் செல்வந்த நிறுவனமான நெஸ்லேயின் இந் நடவடிக்கை சர்வதேச ரீதியில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

குறிப்பாக நெஸ்லேயின் இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கை இங்கிலாந்தில் பெரும் எதிர்ப்பைக் கிளப்பிய ஒரு சில மணி நேரத்திற்குள்ளேயே ஆயிரக்கணக்கான மின் அஞ்சல்கள் இந் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதாக சர்வதேச தொண்டர் நிறுவனமான ஒக்ஸ்பாம் (Oxfam) பேச்சாளர் ஒருவர் பிரித்தானியப் பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்தார்.

எதியோப்பியாவின் முன்னாள் இராணுவ அரசாங்கம் 1975ஆம் ஆண்டில் எதியோப்பிய கால்நடை அபிவிருத்தி நிறுவனத்தை அரசுடமையாக்கியது. இந்நிறுவனத்தில் பெரும்பான்மை பங்காளராக இருந்தது ஒரு ஜேர்மன்



நிறுவனம். இந்த ஜேர்மன் நிறுவனத்தை நெஸ்லே 1986ஆம் ஆண்டில் - அதாவது 11 ஆண்டுகளின் பின்னர் - விலைக்கு வாங்கியது. எனவே 1975ஆம் ஆண்டு அரசுடமை யாக்கப்பட்ட ஜேர்மன் நிறுவன சொத்துகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று நெஸ்லே கோரியுள்ளது.

எதியோப்பியாவின் தற்போதைய அரசாங்கம் இதற்கு உடன்பட்டுள்ளது. (முன்னர் தேசிய மயமாக்கப்பட்ட வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கும் பட்சத்திலேயே எதியோப்பியா புதிய முதலீடுகளை எதிர்பார்க்கலாம்.) எனினும் எதியோப்பிய அரசாங்கம் 1.5 மில்லியன் டொலர்களை (அதாவது சுவீகரிக்கப்பட்ட சொத்தின் பெறுமதியுடன் ஆறு வீத கூட்டு வட்டியும் சேர்த்து வரும் தொகையை) வழங்க முன்வந்துள்ளது. நெஸ்லேயோ அப்போது சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை இன்றைய டொலர் பெறுமதியில் தர வேண்டுமென்று நிற்கின்றது.

எதியோப்பியாவில் தொடர்ந்து நிலவும் கடும் வறட்சி காரணமாக சுமார் 11 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் இவ்வேளையில், கோடிக்கணக்கில் இலாபத்தை ஈட்டும் நெஸ்லே இக் காரியத்தில் இறங்கியிருப்பது பல தொண்டர் நிறுவனங்களின் ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது.

## உயிர் காப்பாற்றிய விஸ்கி

இது உண்மைக் கதை. நீர் என்று நினைத்து குளிர்காலத்தில் நீரை அல்லது பெற்றோலை உறையாமல் தடுக்கும் திரவத்தைக் (anti freeze) குடித்த பெண் ஒருவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமாயின் வைத்தியர்களுக்கு ஒரே ஒரு வழி தான் தெரிந்தது. அவர் மதுபானம் கணிசமான அளவில் அருந்த வேண்டும் என்பதே.



ஸ்கொட்லாந்தில் உள்ள அங்கஸ் நகரில் தனது உறவினர் ஒருவரின் வீட்டை அழகு செய்ய உதவி செய்த திருமதி கிளெனிஸ் மிட்டல்ரன் (Glennis Middleton), மேசையில் இருந்த போத்தலில் உள்ள திரவத்தை நீர் என நினைத்துக் குடித்தார். 'நீரின்' சுவை சிறிது வித்தியாசப்பட்டாலும், அது ஒன்றும் கைப்பாக இல்லாததினால் ஏதோ விசேட நீர் என நினைத்து இந்த 51 வயதான நகர சபை உறுப்பினர் அதனை அருந்தினார். விஷயம் அறிந்தவுடன் தனது குடும்ப வைத்தியரை நாட, வைத்தியர் உடனே அருகிலுள்ள வைத்தியசாலைக்கு செல்ல உத்தரவிட்டார்.

வைத்தியர்கள் கருத்துப்படி 100 மி.லீட்டர் - அதாவது பத்திலொரு லீட்டர் anti-freeze ஒருவரின் உயிரைப் போக்கவல்லது.

அங்கு அவருக்கு வைத்தியர்கள் மூன்று விதமான 'மருந்துகளில்' ஒன்றை தேர்ந்தெடுக்க உத்தரவிட்டனர். அவையாவன: ஜின், வொட்கா அல்லது விஸ்கி. பின்னர் உடனடியாக இரண்டு கோப்பை விஸ்ககியை அம் மாதுவுக்குப் பருக்கினர். அதன் பின்னர் பல மணி நேரத்திற்கு ஒவ்வொரு மணித்தியாலமும் விஸ்கியைப்பருக்கினர். Anti-freeze இன் விஷத்தின் தீவிரம் குறையும் வரை விஸ்கி பருக்கப்பட்டது.

## மரணமானவர் மாணிக்கமானார்

நகைகள், அதுவும் குறிப்பாக வைரங்கள் மீது உலகத்தவருக்கு மோகம் அளப்பரியது. இந்த மோகமும், நவீன தொழில்நுட்பமும் மனிதரையும் வைரமாக்க உதவிவிட்டன.

கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் வாழ்ந்த எட்னா மக்ஆர்தர் என்ற 80 வயதுடைய பெண்மணி இறந்தபோது அவரது அஸ்தி மூன்று கிராம் எடையுள்ள சாம்பலாக்கப்பட்டு இத்தாலிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இத்தாலிய நிறுவனமொன்று அதியுயர் வெப்பநிலையைப் பாவித்து, வைரங்களை பதப்படுத்த உபயோகப்படுத்தப்படும் காபனினுள் இந்த சாம்பலை புகுத்தியது.

விளைவு: 1/4 கரட் நிறையுள்ள வைரம். இதற்கான செலவு சுமார் 2,000 (அமெரிக்க) டொலர். வழமையான முறையில் புதையல் செய்வதைவிட இது விலை குறைந்த முறை என திருமதி மக்ஆர்தரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த வைரம் தற்போது காலமானவரின் மகளினதும், பேரப்பிள்ளையினதும் கைவச முள்ளது. தாம் இதனை மோதிரமொன்றில் பதிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



இறந்தவரின் அஸ்தியைக் கொண்டு செயற்கை முறையில் வைரம் தயாரிக்கப்பட்டது இது தான் முதற் தடவையாகும்.

இந்த மனிதரை மாணிக்கமாக்கும் நடவடிக்கையை ஒழுங்கு செய்து கொடுத்த ஈமக்கிரியைகள் செய்யும் நிறுவனத்திற்கு ஏற்கனவே மூன்று இம்மாதிரியான கோரிக்கைகள் கிடைத்து விட்டனவாம்.

## உலக அழிவு பற்றிய நியூட்டனின் 'புதிய விதி'

சேர் ஐசாக் நியூட்டனின் மூன்று விதிகளைப் பற்றித் தெரியாதோர் இல்லை. உண்மையில் இவைதான் சர்வதேச ரீதியில் அவரையும் பிரபலமாக்கியது.

கனடிய ஆய்வாளர் ஒருவர் இந்த விஞ்ஞான மேதையின் விஞ்ஞானத்திற்கு அப்-பாற்பட்ட, இறைவியல் சம்பந்தப்பட்ட சுவாரசி-யமான ஆய்வுகளை வெளிக்கொணர்ந்துள்-ளார்.

இவற்றில் முக்கியமானது இவ்வுலகம் 2060ஆம் ஆண்டில், அதாவது இன்னமும் 57 ஆண்டுகளில், அழிந்து விடும் என்ற தீர்க்க தரிசனமாகும்.

இறையியலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த நியூட்டன் தனது வாழ்நாளில் சுமார் 50 வருடங்கள் வரை விலியம் பற்றியும் உலகின் முடிவு பற்றியும் ஆய்வு செய்து 4500 பக்கங்கள் வரை தமது முடிவுகளைப் பற்றி எழுதி யிருந்தார்.

இவை பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டிருந்தன. உலகம் 2060ஆம் ஆண்டில் அழிந்துவிடும் என்று ஒரு சிறு பத்திரம் ஒன்றில் நியூட்டன் எழுதி வைத்திருந்தாராம்.

நியூட்டனின் இறையியல் ஆய்வுகளை நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்து வரும் கனடிய ஆய்வாளரான ஸ்ரீபன் ஸ்னோபெல் இப் பத்திரத்தை ஜெருசலேமிலுள்ள நூலகமொன்றில் கண்டெடுத்தார்.


# கண்வைத்தியர்களின் குறும்பார்வைக் கோளாறு

குறும்பார்வை உடையவர்களுக்கு உதவும் நோக்கில் பல கண் வைத்தியர்களும் கண்ணாடி விற்பனையாளர்களும் மேற்கொண்டு வந்த ஒரு நடவடிக்கை உண்மையில் கண்களைப் பாதிப்ப-தாக அமைகிறது என புதிய ஆராய்ச்சியொன்று உறுதிசெய்துள்ளது.

குறும்பார்வை உள்ளவர்களுக்கு அவர்களின் பார்வையை முற்றாக சரிப்படுத்தும் வில்லைகளைக் கொடுக்காமல், கண்பார்வையை ஓரளவு சரிப்ப-டுத்தும் வில்லைகளையே கொடுக்கும் பயிற்-சியே கண்களைப் பாதிப்பதாக பிரித்தானிய, மலேசிய நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குறும்பார்வை ஏன் ஏற்படுகிறது என்பது முற்றாக கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் மரபும், மிக நெருங்கிய தொலைவில் வைத்து வாசித்தலும் கண்பார்வை மங்குவதில் பங்கு வகிக்கின்றன என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

இவ்வாறு குறுகிவிட்ட பார்வையைச் சரிப்படுத்த சரியான வில்லைகளைக் கொடுப்பதற்குப் பதில் ஓரளவு சரிப்படுத்தும் வில்லைகளை வைத்தியர்கள் கொடுத்து வந்தனர். இதனால் பார்வையின் சக்தி மங்கும் வேகம் குறைக்கப்படும் என்ற அடிப்படையிலேயே வைத்தியர்கள் இதனைச் செய்தனர். ஜப்பானில் 30இற்கு மேற்பட்ட சிறுவர்களில் 1965ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவைக் கொண்டும், மற்றும் எண்பதாம் ஆண்டுகளில் கோழிகளிலும், குரங்குகளிலும் செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலுமே வைத்தியர்கள் இப்பயிற்சியை மேற்கொண்டனர்.



எனினும் இந்த நடைமுறை உகந்ததா என்பது பற்றி வைத்திய உலகில் சர்ச்சையாய் இருந்தது. இது உகந்தது தான் என்பதை நிரூபிக்க இங்கிலாந்தில் கேம்பிறிட்ஜ் நகரிலுள்ள Anglia Polytechnic University யைச் சேர்ந்த பேராசிரியர் டானியல் ஒலியரியும் (Daniel O'Leary) அவரது சக மலேசிய கண் வைத்திய நிபுணர்களும் ஆய்வுகளை மேற்கொண்டனர். இதற்காக அவர்கள் 96 சிறுவர்களை தேர்ந்தெடுத்து, அரைவாசிப் பேருக்கு சரியான வில்லைகளையும் ஏனையோருக்கு சிறிது வலுக் குன்றிய வில்லைகளையும் கொடுத்தனர். இச் சிறுவர்கள் ஒவ்வொரு ஆறு மாதமும் பரிசோதிக்கப்பட்டனர். ஆய்வின் முடிவு பேராசிரியர் ஒலியரியையும் அவரது சகாக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அவர்கள் எதிர் பார்த்தது போலன்றி, கண்பார்வை சரியாகத் திருத்தப்பட்டோரின் பார்வையை விட சரியாகத் திருதப்படாதோரின் பார்வை முப்பது வீதத்தினால் வேகமாக மங்கியது. இந்த கண்டுபிடிப்பினால் பேராசிரியர் ஒலியரி தமது ஆய்வை இடை நடுவில் நிறுத்தினார்.


“இந்த ஆய்வு மூன்று வருட காலம் நடத்தப்பட இருந்தது; ஆனால் (எமது ஆய்வு) சிறுவர்களின் கண்களைப் பழுதாக்குவதை அறிந்தவுடன் இரு வருடங்களிலேயே நிறுத்த வேண்டி வந்தது” என பேராசிரியர் ஒலியரி கூறினார். பேராசிரியர் ஒலியரின் முடிவுகள் மருத்துவ உலகுக்கு மிகவும் முக்கியமானவை. ஏனெனில் குறும்பார்வையுடையவர்களின் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகிறது.

அமெரிக்க ஆய்வாளர்களின் தரவுகளின் படி, 20சதவீதமான அமெரிக்கர் குறும்பார்வை உடையவர்களாக இருக்கின்றனர். குறும்-பார்வை தேசிய ரீதியில் வலுப்பெற்று வரும் கண்டம் ஆசியா ஆகும். அதிலும் குறிப்-பாக கல்வி, தொழில்நுட்பத் துறைகளில் முன்னேறி வரும் சிங்கப்பூர், தாய்வான் போன்ற கிழக்கு, தென்கிழக்காசிய நாடுகளில் குறும்-பார்வை உடைய சிறுவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகிறது. உதாரண-மாக, அரைவாசிக்கு மேற்பட்ட 12 வயதான சிங்கப்பூர் மாணவர்கள் கண்ணாடி அணிய வேண்டிய நிலையில் உள்ளனர்.

குறும்பார்வையுள்ளோர் தொலைவில் உள்ள ஒரு பொருளைப் பார்க்கும் போது அப்பொருளின் விம்பம் விழித்திரைக்கு முன்னால் குவிவதனால் அப்பொருள் மங்கலாகத் தோன்றும். தகுந்த வில்லையை உபயோகித்து விம்பத்தை விழித்திரையில் குவியப் பண்ண முடியும். ஆனால், இதனால் அண்மையில் உள்ள பொருட்களைப் பார்க்கும் போது, விம்பம் விழித்திரைக்குப் பின்னால் குவியும். இதனைச் சீர்படுத்த கண்மணி பின்னோக்கி வளையத் தொடங்கி நீளமாகும் தன்மை ஏற்படும். இதனால் தூரப் பார்வை இன்னமும் மங்கலாகுவதுடன், கண் நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

கண்மணி இவ்வாறு நீளமாவதைத் தடுக்கவும், நீளமாகும் வேகத்தைக் குறைப்பதற்கு கண்வைத்தியர்கள் சிறுவர்களுக்கு வலுக் குறைந்த கண்வில்லையை பரிந்துரை செய்து வந்தனர். வலுக்குறைந்த வில்லை, விம்பத்தை விழித்திரைக்கு சிறிது முன்னால் குவியப்படுத்துவதினால் கண்மணி விரைவில் நீளமாகுவதைத் தடுக்கலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் இவ்வாறு செய்தனர்.

குறும்பார்வையுடையோர் சதவீதம்




ஆதாரம்: Myopia International Foundation

# தொடரும் எய்ட்ஸ் அனர்த்தம்

உலகைக் கலக்கி வரும் எய்ட்ஸ் (AIDS) வியாதி கடந்த வருடமும் (2002ஆம் ஆண்டு) தனது பலியெடுப்பின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை.

ஐக்கியநாடுகள் சபையின் எய்ட்ஸ் பிரிவின் தகவல்களின்படி கடந்த ஆண்டில் மட்டும் மூன்று மில்லியன் (30இலட்சம்) மக்கள் எய்ட்ஸ் நோய்க்குப் பலியாகினர். இந்த அமைப்பின் தகவல்களின் படி 2001ஆம் ஆண்டிலும் மூன்று மில்லியன் மக்களை இந்நோய் பலிகொண்டது.


கடந்த வருடம் மாண்ட மூன்று மில்லியன் மக்களில் 0.6 மில்லியன் மக்கள் 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள்; 1.2 மில்லியன் மக்கள் பெண்கள் ஆவர்.

எயிட்ஸ் அவதானிகளின் கருத்துப்படி இந்நோயைக் கட்டுப்படுத்த சர்வதேச ரீதியில், குறிப்பாக ஆபிரிக்காவில் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் இன்னமும் வெற்றியளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் புதிய தரவுகளும் இதனைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

உதாரணமாக, கடந்த வருடம் எயிட்ஸ் நோய்க்குக் காரணியான HIV வைரஸினால் பீடிக்கப்பட்டோர் தொகை ஐந்து மில்லியன். இது 2001ஆம் ஆண்டில் இந்நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கைக்குச் சமம்.


மொத்தமாக 42 மில்லியன் மக்கள் (நான்கு கோடியே இருபது இலட்சம்) உலகெங்கும் AIDS /HIV இனால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதில் பெண்கள் தொகை 19.2 மில்லியன். 15 வயதிற்குட்பட்ட சிறுவர் 3.2 மில்லியன்.

எண்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் AIDS / HIV கண்டுபிடிக்கப்பட்டது முதல் சுமார் 25 மில்லியன் மக்கள் வரை இந் நோயினால் மாண்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எயிட்ஸின் உக்கிரத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கண்டம் ஆபிரிக்கா, குறிப்பாக உப - சகாரா (Sub-Sahara) என அழைக்கப்படும் உலகின் பெரும்பாலான வறிய நாடுகளைக் கொண்ட பிராந்தியமாகும். உலகின் மொத்த AIDS / HIV இனால் பீடிக்கப்பட்டுள்ள சனத்தொகையான 42 மில்லியன் மக்களில் சுமார் 70 சதவீதமானோர் (29 மில்லியன்) இப் பிரதேசத்திலேயே வாழ்கின்றனர். சில நாடுகளில் ஐந்திலொருவர் HIV இனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பொட்ஸ்வானா போன்ற நாடுகளில் வளர்ந்தோர் சனத்தொகையில் மூன்றிலொருவர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய அனர்த்தம் வறுமையின் நிமித்தம் கீழே தள்ளப்பட்டிருந்த ஆயுட்காலத்தை இன்னமும் கீழ் நோக்கித் தள்ளியுள்ளது. மாலாவி போன்ற சில நாடுகளில் ஆயுட்காலம் இதனால் சுமார் 20 வருடங்களினால் குறைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) மதிப்பிட்டுள்ளது.




ஆசியாவில் AIDS / HIV பெரிதளவில் பரவவில்லையாயினும் போதிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் விரைவில் இப் பிராந்தியத்திலும் இந்நோய் பூதாகரமாக வளர்ச்சியுறும் என சுகாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். ஆசியாவில் தற்போது AIDS / HIVஇனால் பீடிக்கப்பட்டோர் தொகை 7.2 மில்லியன். போதிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இல்லாத பட்சத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் இன்னமும் நான்கு மில்லியன் மக்கள் இதனால் தாக்கப்படலாம் என ஐ.நா. சபையின் எய்ட்ஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

Photo: United Nations




## பசுமையான சூழல் = நீண்ட ஆயுள்

இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழ் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருகையில், ஆயுட்காலத்திற்கும், சூழலுக்குமிடையிலான தொடர்பை ஜப்பானிய ஆய்வொன்று உறுதிப்படுத்தியுள்ளது.

ரோக்கியோவிலுள்ள மருத்துவ, பல் மருத்துவ கல்லூரியின் ஆய்வின் படி, பூங்காக்களுக்கும், பூங்கா போன்ற பசுமை நிறைந்த இடங்களுக்கும் அண்மையில் வாழும் முதியோர், வெறும் சீமெந்துக் கட்டிடத் தொகுதிகளில் வாழும் முதியோரைவிட நீண்ட காலம் வாழ்வர். கல்லூரியின் ஆய்வாளர்கள் 80 வயதினைத் தாண்டிய மூவாயிரத்திற்கு மேற்பட்ட முதியோரை தமது ஆய்வுக்காக ஐந்து வருடகாலம் அவதானித்தனர்.


இந்த ஆய்வுக்காலப் பகுதியில் 897 பேர் இறந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் ஓய்வாக நடந்து உடற்பயிற்சி பெறப் போதுமான மரங்கள் நிறைந்த வீதிகளோ பூங்காக்களோ இல்லாத "சீமெந்து கட்டிடக் காடுகளுக்குள்" வாழ்ந்தவர்களாவர்.

நீண்ட ஆயுட்காலத்திற்கு உறுதுணை புரிந்த இன்னொரு காரணி சூரிய வெளிச்சத்தை உள்விடக் கூடிய விதத்தில் கட்டப்பட்ட யன்னல்கள்.

# நியாயவிலை மருந்துக்கு அமெரிக்க முட்டுக்கட்டை

வறிய நாடுகளில் வாழும் மக்களுக்கு நியாய விலையில் மருந்துகள் கிடைப்பதை அமெரிக்கா தடுத்துவிட்டது.

மேலைத்தேய மருத்துவ நிறுவனங்களால் தயாரிக்கப்படும் முக்கிய மருந்து வகைகள் வறிய மக்களின் கைக்கு எட்டாமல் இருக்கின்றன. இதனால் உலக வர்த்தக அமைப்பு (World Trade Organization - WTO) அனுசரணையில், நியாய விலையில் மருந்துகளைக் கிடைக்க வகை செய்வது பற்றிய ஒப்பந்தம் பற்றி அரசாங்கங்களுக்கு இடையில் கடந்த சில மாதங்களாக பேச்சுகள் நடைபெற்று வந்தன. இப் பேச்சுகளின் போது, எய்ட்ஸ், மலேரியா போன்ற நோய்களைத் தடுக்க, குணமாக்க அல்லது நோயின் தீவிரத்தைக் குறைக்கவல்ல இம் மருந்து வகைகளை நியாய விலையில் வறிய நாடுகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதில் 143 நாடுகள் ஒன்றுபட்டு நின்றன. எனினும் ஒரு நாடு மட்டும் இந் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்தது.



அந்நாடு அமெரிக்கா.

இந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் நீரிழிவு, ஆஸ்துமா போன்ற "தொற்று நோய் வகையைச் சேராத பல நோய்களை"க் குணப்படுத்தும் மருந்துகள் நியாயவிலையில் வறிய நாடுகளுக்கு விற்கப்பட வேண்டி வருமென்று அமெரிக்க அதிகாரிகள் வாதாடினர். இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தால் நடைமுறையிலிருக்கும் சர்வதேச காப்புரிமைச் சட்டங்களுக்கப்பால் (international patent laws), தற்போது மேலைத்தேய, குறிப்பாக அமெரிக்க மருத்துவ நிறுவனங்கள் கைவசம் இருக்கும் காப்புரிமை பெற்ற மருந்து வகைகளை வேறு நிறுவனங்கள் மலிவு விலையில் தயாரித்து விற்கலாம். இதனால் மேலைத்தேய நிறுவனங்களுக்குக் கோடிக் கணக்கில் நட்டம் ஏற்படும்.

எனினும் மனித நேயத்தை இலாபத்துக்கு முன்னால் வைக்க வேண்டும் என்று பல அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் (non government organizations) சர்வதேச ரீதியில் நடத்திய போராட்டத்தின் விளைவே ஜெனிவா பேச்சுக்கள்.

முறிந்துவிட்ட இப்பேச்சுக்கள் இவ்வருடம் தொடரவுள்ளன. எனினும் இவற்றால் பலனேதும் கிடைக்கப் போவதில்லையென சர்வதேச தொண்டர் நிறுவனமான Medicins Sans Frontiers (MSF) கூறியுள்ளது.

## மீன் சாப்பிடுங்கள் = நலமாயிருங்கள்




இந்த புதிய வேதத்தை நாங்கள் பலமுறை கேட்டுள்ளோம். ஜப்பானிலும், மத்திய தரைக்கடல் நாடுகளிலும் இருதய நோய் குறைவாக இருப்பதற்கும் சில பிரதேசங்களில் மக்கள் நீண்ட காலம் வாழ்வதற்கும் கடலுணவு உறுதுணையாய் இருக்கிறது என்பதனை விஞ்ஞானிகள் அடிக்கடி உறுதிப்படுத்தினர். இப்போது பிரெஞ்சு ஆய்வொன்று வாரம் ஒரு முறையாவது மீன் அல்லது ஏனைய கடலுணவுகளை தமது உணவில் சேர்த்துக் கொள்ளும் வயோதிபர்கள் நோய்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

மீனிலுள்ள கொழுப்புகள் (fatty acids) முதியோரில் மூளைவீக்கம் அல்லது காயம் (inflammation) ஏற்படுவதைக் குறைப்பதாகவும், நரம்புக் கலங்களின் உற்பத்திக்கு உதவி செய்வதாகவும் இந்த ஆய்வாளர்கள் கண்டு பிடித்தனர். இதனால் ஆல்ஸ்ஹைமர் (Alzheimer) போன்ற வியாதிகள் வரும் சந்தர்ப்பங்கள் குறைகின்றன என்று 68 வயதுக்கு மேற்பட்ட 1,600 முதியோரை ஏழு வருட காலம் அவதானித்த இந்த மருத்துவர் குழு கூறுகிறது.

### இந்நாடுகளில் சுகாதார பராமரிப்பு

| நாடு | மருத்துவர்கள் (ஒரு இலட்சம் மக்களுக்கு) | தாதிகள் (ஒரு இலட்சம் மக்களுக்கு) |
|---|---|---|
| இலங்கை | 36.5 | 102.7 |
| இந்தியா | 48.0 | 45.0 |
| ஈராக் | 55.0 | 236.0 |
| எரித்திரியா | 3.0 | 16.0 |
| கனடா | 229.1 | 897.0 |
| நோர்வே | 413.0 | 1840.0 |
| கியூபா | 530.4 | 677.6 |



ஆதாரம்: உலக சுகாதார அமைப்பு (WHO)

# வட்டி
# தேசத்தின் அளவுகோல்

K.K. யோகநாதன்

வாழ்வில் ஒரு சிலரிற்கு மிகச் சந்தோஷத்தையும் பலரிற்கு மனக்கவலையையும் கொடுக்கும் ஒரு சொல் வட்டி. வட்டிக்கு கடன் கொடுக்கும் பலர் வட்டியும் முதலும் திரும்பும் வரை அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருப்பார்கள். அதனை வசூ-லித்த பின்பு மகிழ்ச்சியில் இருக்க வட்டி கொடுத்தவர்கள் வயிறெரியத் தொடங்குவார்-கள். இதுதான் அந்த வட்டியின் செயல்பாடு.

இந்த வட்டி முறையானது, எமது பண்டைய காலத்திலிருந்தே வெவ்வேறு உருவங்களில் நடைமுறையில் இருந்தது. உதாரணமாக ஒரு காலத்தில் பண்ணையார் என அழைக்கப்படும் கிராமத்து முதலாளிகள் தொழிலாளிகளிற்கு உதவி என்ற முறையில் பணமும், அத்துடன் சம்பந்தப்பட்ட வெவ்வேறான உதவிகளையும் செய்து, அதற்கு பிரதி உபகாரமாக அந்தத் தொழிலாளரிடமிருந்து மேலதிக வேலைகளை வாங்குகிறார்கள். இது வட்டியின் வேறு ஓர் உருவம். இதுவே வளர்ச்சியடைந்த நாடுகளில், வட்டி என்ற பெயரில் பணமாக அறவிடப்படுகின்றது.

வட்டி என்பது, கடன் கொடுத்தவரால் அவருடைய பணத்தை, கடன்பெற்றவர் உபயோகிப்பதற்காக அறவிடப்படும் கூலி ஆகும். கடனிற்கு கொடுக்கப்படும் விலை என்றும் இதனைக் கொள்ளலாம்.

வட்டி வீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கம் ஏனைய பொருட்களிற்கு உள்ளது போன்றே கடனிற்கு உள்ள தேவையையும் (Demand) கடன் கொடுப்பதற்கு கிடைக்கக் கூடிய பண இருப்பையும் (Supply) பொறுத்தேயுள்ளது.

ஒரு நாட்டின் வட்டிவீதம் அந்தந்த நாட்டின் மத்திய வங்கிகளினால் பொருளாதார, சூழ்நிலைகளையும், அரசியல் ஸ்திர நிலைகளையும் சீர்தூக்கி பார்த்து நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு நாட்டின் அரச வட்டி வீதம் குறைவாக இருக்குமானால் அந்த நாடு சீரான பொருளாதாரத்தையும், ஸ்திரமான அரசியல் நிலையையும் பணவீக்கமற்ற தன்மையையும் கொண்டுள்ளதாக கருதப்படும். மாறாக அரசவட்டி வீதம் அதிகமாக இருக்குமாயின் அந்நாடு சீரற்ற பொருளாதாரத்தையோ, ஸ்திரமற்ற அரசியல் நிலையையோ அல்லது அதிகமான பணவீக்கத்தையோ கொண்டுள்ளதாகக் கருதப்படும். வட்டி வீதம் குறைவாக இருக்கும் போது, கடனிற்குப் பணம் கொடுப்பவர்கள் பாதிப்படைவார்கள், இவர்களில் முக்கியமாக, சேமிப்பில் இருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள் பாதிப்பிற்கு உள்ளாவார்கள். அதே நேரத்தில் வட்டிக்கு கடன் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

பாரிய வர்த்தக ஸ்தாபனங்களிற்கு வட்டி குறைவாக இருக்கும் போது, வர்த்தக வளர்ச்சிக்கும், விஸ்தரிப்பிற்கும் பெறப்படும் பணம் இலகுவாக இருக்கும். அத்துடன் அவர்களால் கொடுப்பனவு செய்யப்படும் வட்டிப் பணம் குறைவாக இருப்பதால் மேலும் பணத்தை வட்டிக்கு பெற்று வியாபாரத்தை வளர்க்க முயற்சிப்பார்கள். வீட்டிற்குரிய பாவனைப் பொருட்களாக வீட்டுத்தளபாடங்கள், வீட்டுப் பாவனைக்குரிய மின் உபகரணங்கள், சாதனங்கள் மற்றும் வாகனங்கள் போன்றவற்றை கடனிற்கு பெறுபவர்களும் பயன் அடைவார்கள். கடன் பெற்று வதிவிடங்களை (land, house, cottage) உரிமையாக்குபவர்களும் இதன் மூலம் பயன்பெறுவார்கள்.

குறைந்த வட்டிவீதம் இருக்கும் போது ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகள் துரிதமாக இருக்கும். இதனால் பொருளாதார வளர்ச்சியையும் காணலாம். வட்டிக்குப் பணம் பெறுபவர்கள், வட்டிவீதம் குறைந்து இருந்தாலும் திருப்பிக் கொடுக்கும் வலு குறைந்தவர்களாக கணிக்கப்படும் இடத்து, அவர்களிற்கு அறவிடப்படும் வட்டிவீதம் அதிகமாக இருக்கும்.

பாரிய, ஸ்திரமான நிறுவனங்கள் குறைந்த வட்டிவீதத்தில் பணத்தை பெறக்கூடிய வாய்ப்பை கொண்டுள்ள அதேவேளையில், பொருளாதாரப் பின்புலம் குறைந்த தனிப்பட்டவர்களும், கடன்பெற்று திருப்பி கொடுப்பதனால் ஏற்படுத்தும் சரித்திரத்தை (credit history) உருவாக்காதவர்களும் அதிக வட்டி வீதத்திற்கே கடனைப் பெறவேண்டியிருக்கும்.

வட்டிவீதத்தை ஏற்றி இறக்குவதில் மத்திய வங்கிகள் பெரும் பங்கை வகிக்கின்றன. பணவீக்கம் அதிகரிக்கும் போது, அதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு வட்டிவீதத்தை அரசாங்கம் அதிகரிக்கும்.

ஏனைய நாடுகளில் வட்டிவீதம் அதிகரிக்கும் போது அந்த நாடுகளிற்கு முதலீடுகள் செல்வதைத் தடுப்பதற்காகவும், வட்டிவீதத்தை அதிகரிப்பது வழமையாகக் காணப்படும். ஒரு நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை தோன்றும் காலங்களில், அந்த நாட்டின் முதலீடுகள் பிற நாடுகளிற்கு செல்வத்தை தடுப்பதற்காகவும் வட்டிவீதம் குறிப்-பிட்ட நாட்டின் மத்தியவங்கியால் அதிகரிக்கப்-படுவது வழக்கம். உதாரணமாக கனடாவில் கியூபெக் பிரிவினைவாதம் எழுப்பப்பட்டு சர்வ-ஜன வாக்கெடுப்புகள் எடுக்கும் காலங்களில் வட்டிவீதம் அதிகரித்தது யாவரும் அறிந்ததே.

ஒரு நாட்டின் பணப்பெறுமதியை (Exchange Rate) குறையவிடாமல் ஸ்திரமாக வைத்திருப்பதற்காக அந்த நாட்டின் மத்திய வங்கி வட்டிவீதத்தை அதிகரிப்பதனையும் ஒரு தந்திரமாகக் கொண்டுள்ளது.

வட்டிவீத அதிகரிப்பு பொதுவாக பங்குச் சந்தைகளில் (Stock Market) விலைவீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. பங்குச் சந்தைகளில் உள்ள நிறுவனங்கள் முதலைப் பெறுவதற்குரிய கொடுப்பனவு அதிகரிப்பு காரணமாக இலாபத்தில் வீழ்ச்சி ஏற்படும். இலாப வீழ்ச்சி ஏற்படுவதை எதிர் நோக்குவதால் பங்குச் சந்தையில் பங்கின் விலைகள் வீழ்ச்சி அடைகின்றன.






குறைந்த வட்டிவீதத்தில் கடன்பெறுவதிலுள்ள வாய்ப்புகள் அரசாங்கங்களிற்கு அதிகமாக உள்ளன. குறித்த தவணைகளில் முதலையும், வட்டியையும் திருப்பி செலுத்தக் கூடிய சக்தி அரசாங்கங்களிற்கு நிறைய உண்டு. திறைசேரியில் பற்றாக்குறை ஏற்பட்டாலும், மத்திய வங்கிக்கு பணத்தை அச்சிடும்படி கட்டளையிடும் உரிமையை அரசு கொண்டுள்ளதால் இலகுவாக கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும். அரசாங்கங்கள் கடன்பெறுவதற்கு பாவிக்கும் வழிகளில் உதாரணமாக T-Bills (Treasury Bills)ஐ குறிப்பிடலாம். இதுவே குறிப்பிட்ட நாட்டில் குறைந்த வட்டிவீதத்திலுள்ள கடன்பத்திரங்களாக இருக்கும்.

வட்டிவீதம் அதிகமாக இருக்கும் நாடுகளின் சேமிப்புத் திட்டங்களில் சேமிப்பு செய்வதனையே யாவரும் விரும்புவது வழக்கம். எனினும் ஒப்பிடும்போது மிக அதிகமான வட்டிவீதத்தை கொடுக்கும் நாடுகளில் முதலீடு செய்வது பாதகமான விளைவுகளைத் தர அதிகமான வாய்ப்புகள் உள்ளன. வட்டிவீதம் அதிகமாக இருப்பதன் காரணம், அனேகமாக அந்த நாட்டிலுள்ள அரசியல் ஸ்திரமற்றதன்மை காணப்படுதலே ஆகும். இதனால் சேமிப்பில் வைப்பவர்கள் சொந்த முதலையே இழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

மேலும் அதிக பணவீக்கம் (inflation) இருப்பதும் வட்டிவீதம் அதிகரித்து இருக்கக் காரணமாக அமைவதால் அதிக வட்டி வருமானத்தைக் கொடுத்தாலும் பணத்தின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக பெறப்படும் பணத்தின் உண்மையான வாங்கும் சக்தி (Buying Power) குறைகின்றது. உதாரணமாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் இருப்பவர்கள் சேமிப்பில் வைப்பீடு செய்து, கூடிய வட்டி வீதத்தைப் பெற்றாலும் உண்மையான பணத்தின் வாங்கும் சக்தி மேற்கு நாடுகளில் சேமிப்பில் வைத்து வட்டி பெறுவதால் ஏற்படுவதைவிட குறைவாகவே காணப்படும். 1974ஆம் ஆண்டில் இலங்கையில் 1 ஸ்ரேலிங் பவுண்ட் (Sterling Pound) பெற 8 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதுமாகக் காணப்பட்டது. இப்பொழுது (2003 ஜனவரி) அதே ஒரு ஸ்ரேலிங் பவுண்ட் பெறுவதற்கு இலங்கை ரூபாய் 150 கொடுக்க வேண்டி இருக்கின்றது. எனவே 29 வருடங்களில், இலங்கை ரூபாவின் வாங்கும் சக்தி எவ்வளவிற்கு குறைந்துள்ளது என்பதனைக் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது.



*K. K. யோகநாதன், மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பயின்றவர். கனடாவில் நிதி ஆலோசகராக கடந்த 10 வருடங்களாக தொழில்புரிகிறார்.*

இந்தியாவில் சுற்றுலா, திருமண சேவைகளிற்கு
இந்தியா: 44.621.0294
கனடா: 416.267.0408

கனடாவில் 15 வருடங்களிற்கு மேலாக
**GNANAM'S STUDIOS**
தொடர்புகளுக்கு: கதிர்
**416.750.8118**

ஜெயா அண்ட் பிரதர்ஸ்
2396c Eglinton Ave. E Scarborough
Tel: (416) 759-9540
Fax: (416) 759-4819
(Kennedy & Eglinton)

CTR
www.ctr24.com
416.264.8798

கீதவாணி
24 மணி நேரத் தமிழ் வானொலி
416.267.1100
www.worldtamilradio.com

இப் பகுதியில் சிறு விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் உலகத் தமிழோசையுடன் தொடர்பு கொள்ளவும்.

# வணிகம் செய்திடுவோம்

# இங்கிலாந்து



பெரி. முத்துராமன்

நவீன வணிகத்தின் முன்னோடிகள் என்று ஆங்கிலேயரைக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. கடந்த நூற்றாண்டுகளில் வணிகம் செய்ய இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு விசா எதுவும் இன்றி, பல நாடுகளிலும் நுழைந்து, அந்நாடுகளையெல்லாம் அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்தவர்கள் அல்லவா ஆங்கிலேயர்?

தெற்காசியாவில் 1619இல் இந்தியாவில் உள்ள சூரத்தில் முதலாவது வணிக முகாமை நிறுவினர். பின்னர் அந்த நூற்றாண்டு முடிவதற்குள், சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் அன்றைய ஆட்சியாளர்களின் அனுமதியோடும், பாதுகாப்போடும் தங்கள் வணிகத்தை முறையாகத் தொடங்கினர். 1850இற்குள் தெற்காசியாவில் பெரும்பகுதியை ஆட்சி செய்யத் தலைப்பட்டு வெற்றியும் கண்டனர். 1857இல் இந்துக்களின் உணர்வுகளை மதிக்காது அவற்றில் ஆங்கிலேய அதிகாரிகள் தலையிட்ட போது சிப்பாய் கலகம் வெடித்தது. பல ஆங்கிலேய அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சியானது அரசியல் அதிகாரத்தை கிழக்கு இந்திய கம்பெனியிடமிருந்து, மகாராணியாருக்கு மாற்றமடையச் செய்தது. அன்றிலிருந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் வரை (1947) பிரிட்டிஷ் அரசாங்கம் நேரடியாக ஆட்சி செய்து வந்தது. விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் (1837-1901) ஏறத்தாழ உலக நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் கால் பாகத்தினர் ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டிருந்தனர். எங்கள் நாட்டில் சூரியன் மறைவதில்லை என்று ஆங்கிலேயர் மார்தட்டிய காலம் அது. இன்றைக்கு (வருடம் 2000) பிரிட்டனின் நிலப்பரப்பு: 24,300 சதுரகிலோ மீட்டர்கள். ஜனத்தொகை: 60 மில்லியன்.

1901இல் முடிவடைந்த விக்டோரியா மகாராணியின் காலத்தோடு மற்ற நாடுகளின் மேல் பிரிட்டனுக்கு இருந்த அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கமும் குறையத் தொடங்கியது. 1921இல் அயர்லாந்தின் பெரும் பகுதி பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைந்தது. 1947இல் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் சுதந்திர மடைந்தன. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தது. இதே காலகட்டத்தில் எகிப்து போன்ற நாடுகளும் போராட்டத்தின் மூலம் சுதந்திரமடைந்தன.

1926இல் பிரிட்டன் தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து நாடுகளுக்கு முழுமையான தன்னாட்சி உரிமையை வழங்கியது. ஆனால் இன்றைக்கும் பெர்முடா, கில்பர்டா, பால்க்லாண்ட் தீவுகள் போன்ற 13 பகுதிகள் சுதந்திரத்தை விரும்பாது, தொடர்ந்து பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றன. இவை பிரிட்டனின் கடல்கடந்த பிரதேசங்கள் (Britain OverSeas Territories) என்றழைக்கப்படுகின்றன.

சரி, பழங்கதையை விட்டு இன்றைய நிலைக்கு வருவோம்.

பிரிட்டனின் முன்னாள் காலணி நாடுகள் பொதுநலவாய (கமன்வெல்த்) கூட்டமைப்பில் ஒன்றாக இணைந்துள்ளன. காமன் வெல்த் நாடுகளுடன் நேச பாவத்-தைக் கடைபிடிக்கும் இங்கிலாந்தின் உற்ற நண்பராகத் திகழ்வது அமெரிக்காதான்.

வணிகத்தைப் பொறுத்த வரையில் பிரிட்டனின் 50வீத வணிகம் மற்ற ஐரோப்பிய நாடுகளுடனேயே அமைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளின் உறவுகளுக்கு வெளியில் பலம் மிக்க உறவாக இங்கிலாந்து கருதுவது அமெரிக்காவைத்தான். பிரிட்டனும், அமெரிக்காவும் இன்றைக்குப் பல உலக அரசியல் விவகாரங்களில் ஒன்றை ஒன்று கலந்தாலோசித்தே நடவடிக்கைகளை எடுக்கின்றன. பிரிட்டனும், தனது பாதுகாப்புத் தேவைகளுக்கான பல பொருட்களை அமெரிக்கக் கம்பெனிகளிடமிருந்தே பெறுகின்றன.

1980களில் வடக்கு மற்றும் ஐரீஸ் கடற்பகுதிகளில் எண்ணெய் மற்றும் வாயுப் பொருட்கள் பெருமளவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் அமெரிக்கா பெருமளவில் முதலீடு செய்துள்ளது. 1999இல் இங்கிலாந்தில் அமெரிக்கா செய்திருந்த முதலீடு 213பில்லியன் (billion) டாலர்கள். அமெரிக்காவில் இங்கிலாந்து செய்திருந்த முதலீடோ 183 பில்லியன் டாலர்கள்.




உலகிலேயே எழுதாத அரசியல் சட்டத்தைக் கொண்ட ஒரே நாடு பிரிட்டனாகத்தான் இருக்கும். முடியாட்சியின் கீழ் குடியாட்சி நடைபெறுகின்றது என்றாலும் 'ஜனநாயகங்களின் தாயகம்' என்று இங்கிலாந்தை வர்ணிப்பர். உலகிலேயே வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நான்காவது நாடாக இங்கிலாந்து கருதப்படுகின்றது. கடந்த 20 வருடங்களில் அந்நாட்டில் தனியார் மயமாக்குதலுக்கும், வரிகளைக் குறைப்பதற்கும், மிகுந்த முக்கியத்துவத்தை அடுத்தடுத்து வந்த அரசுகள் கொடுத்து வந்துள்ளன.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் வருடத்துக்கு வருடம் மிகுந்த பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வந்த இங்கிலாந்தில் இன்றைக்குத் தேக்க நிலை ஆரம்பமாகியுள்ளதோ என்று சந்தேகம் எழுகின்றது.

கால்நடைகளுக்கு வந்த பாதவாய் நோயும் அமெரிக்கப் பொருளாதாரம் சற்றே மந்த நிலையை அடைந்ததுமே, இதற்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

பிப்ரவரி 2001இல் வெளிப்பட்ட கால்நடைகளுக்கான பாதவாய் நோயின் காரணமாக 3.5மில்லியன் கால்நடைகள் கொல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலை நாட்டின் விவசாய வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளது.

அடுத்தது தொடரும் அமெரிக்க மந்த நிலைமை. இது இங்கிலாந்தையும் தொடர்ந்து பாதிக்கும் என்றே தோன்றுகின்றது. வேறு பல நாடுகளில் நிலவுவதைப் போன்று இங்கிலாந்திலும் மக்கள் பங்கு சந்தையில் முதலீடு செய்ய அஞ்சுகிறார்கள். கடந்த ஓராண்டில் சராசரி முதலீட்டாளர் தனது முதலீட்டில் 21சதவீதத்தை இழந்திருப்பதாக ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. இந்நிலையானது இங்கிலாந்தில் பொருள் உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இதற்கு மாறாக மகிழ்ச்சியளிக்கும் வகையில், நிலவும் குறைந்த வட்டியின் காரணமாக மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான நுகர்பொருட்கள் மற்றும் வீடுகளின் விற்பனை அதிகரித்துள்ளது. இந்நிலை பொருளாதாரத்துக்கு வலுவளிக்கின்றது. வங்கிகள் மற்றும் விமானம் போன்றவற்றின் சேவை ஏற்றுமதி அதிகரித்தாலும் பெருகி வரும் வணிகப் பற்றாக்குறை, இங்கிலாந்தை நிகரப் பற்றாக்குறை வணிகம் மிக்க நாடாகவே செய்துள்ளது.

பொருட்களின் வணிகத்தைப் பொறுத்த வரையில் ஏற்றுமதியை விட சமீப காலங்களில் எல்லாப் பிரிவுகளிலும் இறக்குமதியே அதிகரித்து வருகின்றது. விவரங்களை பெட்டிச் செய்தியில் பார்க்கலாம்.

ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய வணிகத் தொடர்புகளை இங்கிலாந்து கொண்டிருந்தாலும், யூரோ நாணயத்தை ஏற்பதில் மட்டும் ஒரு முடிவுக்கு வராமல் குழம்பிக் கொண்டிருக்கின்றது. 1973முதல் ஐரோப்பிய கூட்டமைப்பில் உறுப்பினராகத் திகழும் பிரிட்டன் 2003இல் பொது வாக்கெடுப்பின் மூலம் யூரோ நாணயத்தை ஏற்பதைப் பற்றி முடிவு செய்யும் என்று நம்பப்படுகின்றது.

2000இல் பத்து முக்கிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள்

1. இயந்திரங்கள் +
2. மின்இயந்திரங்கள் +
3. வாகனங்கள் -
4. எரிபொருட்கள் +
5. விலையுயர்ந்த கற்கள் மற்றும் உலோகங்கள் -
6. விமானங்கள் -
7. மருத்துவ உபகரணங்கள் *
8. மருத்துவப் பொருட்கள் +
9. பிளாஸ்டிக் பொருட்கள் -
10. இரசாயனப் பொருட்கள் *

+ ஏற்றுமதி, இறக்குமதியை விட அதிகம்.
- இறக்குமதி, ஏற்றுமதியை விட அதிகம்.
* ஏற்றுமதியும், இறக்குமதியும் ஏறத்தாழ சம அளவில்.

செப்டெம்பர் - நவம்பர் 2002இற்கான புள்ளி விபரச் செய்தி

மேலே கொடுத்துள்ள செய்திகளின் பின்னணியில் இங்கிலாந்துடன் வணிகம் செய்யத் தலைப்படுவோர்க்குச் சில உபயோகமான தகவல்களைத் தர விளைகின்றோம். உண்ணத் தயார் நிலையில் இருக்கும் உணவுப் பொருட்களுக்கும், மற்ற உணவுப் பொருட்களுக்கும் நல்ல வரவேற்பு இருந்தாலும், பிரிட்-

இங்கிலாந்தின் வெளிநாட்டு வணிக விவரம்
(பொருட்களும், சேவைகளும் உள்ளிட்டது)
வருடம் 2000. தொகை பில்லியன் பவுணில்

| | |
|---|---|
| ஏற்றுமதி | 254.35 |
| இறக்குமதி | 272.21 |

சமீப 6 மாதங்களின் ஏற்றுமதி இறக்குமதி விவரம்
(ஸ்டெர்லிங் பவுண் பில்லியனில்)

| | பொருட்களின் வணிகம் (Balance on trade in goods) | | | சேவை வணிகம் Bal on trade in services | மொத்த நிகரம் Net Balance |
|---|---|---|---|---|---|
| | EU | Non EU | World | | |
| 2002 | | | | | |
| ஜூன் | -0.6 | -2.0 | -2.6 | 1.0 | -1.6 |
| ஜூலை | -0.5 | -2.0 | -2.5 | 1.2 | -1.3 |
| ஆகஸ்ட் | -1.6 | -1.9 | -3.5 | 1.3 | -2.2 |
| செப்டெம்பர் | -0.9 | -1.8 | -2.7 | 1.4 | -1.4 |
| அக்ரோபர் | -1.2 | -2.4 | -3.6 | 1.1 | -2.5 |
| நவம்பர் | -0.9 | -3.1 | -4.0 | 1.2 | -2.8 |

(-) பெருகி வரும் நிகர இறக்குமதியைக் குறிக்கின்றது.

டானிய அரசு, தனக்கு ஏற்பட்ட அனுபவங்களின் காரணமாக உணவு இறக்குமதியில் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. தரம் மற்றும் அளவுக் கட்டுப்பாடும் இதில் அடங்கும்.

மருத்துவப் பொருட்களுக்கும், அழகு சாதனப் பொருட்களுக்கும் நல்ல வரவேற்பு உள்ளன. நோய் தடுக்கும் இயற்கைப் பொருட்களையும், இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்களையும் பிரிட்டானியர் வரவேற்கின்றனர். அழகு, உடல்-நலப் பராமரிப்பு, மற்றும் உணவுப் பொருட்களை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்ய விளைவோர் இச் செய்தியை மனதில் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், வித்தியாசமானதாகவும், தரமானதாகவும் உள்ள எந்தப் பொருளையும் பொதுவாக பிரிட்டானியச் சந்தையில் விற்க முடியும்.

தொலைதொடர்பு, மின்னியல், மற்றும் கணினி மென்பொருள் (கம்யூட்டர் சாப்ட்வேர்) ஏற்றுமதிக்கும் மிகுந்த வாய்ப்புகள் உள்ளன.

2001இல் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு புரிந்து வரும் தொழிலாளர் அரசு (Labour Government) எடுக்கும் பல நடவடிக்கைகள் வெளிநாட்டவர்க்கு பல தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி வருகின்றது. அரசுத் துறை நிறுவனங்களிலும் பொருள்களை வாங்க போட்டி முறையே கையாளப்படுகின்றது. வெளிநாட்டவர்க்கும், போட்டியில் கலந்து கொள்ள

### பயன்தரும் சில இணையத்தள முகவரிகள்

| அமைப்பின் பெயர் | முகவரி |
| --- | --- |
| 1. Dept. of Trade & Industry | www.dti.gov.uk<br>www.tradepartners.gov.uk<br>www.tradeuk.com |
| 2. National Statistics | www.statistics.gov.uk |
| 3. For Central & Local Govt sites | www.open.gov.uk |
| 4. HM.Customs & Excise | www.hmce.gov.uk |
| 5. General Information - UK | www.i-uk.com |
| 6. British Standards Online | www.bsi-global.com |
| 7. The British Chambers of Commerce | www.chamberonline.co.uk |
| 8. London Chambers of Commerce & Industry | www.londonchamber.co.uk |

சமவாய்ப்பு அளிக்கப்படுகின்றது. பிரிட்டானிய அரசின் மற்ற கொள்கைகளான தொடரும் தனியார் மயமாக்கல், தனியார் - பொதுத்துறை கூட்டு முயற்சிகள் ஆகியவையும் பல புதிய வாய்ப்புக்களை உருவாக்கி வருகின்-றது. இச் சூழ்நிலையை விருப்பமானோர் பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்துடன் வியாபாரத்தில் முன்னேறலாம்.

உணவு, புகையிலைப் பொருட்கள் போன்ற ஒன்றிரண்டு பிரிவுகளைத் தவிர மற்ற எல்லா இறக்குமதிகளுமே மிக அதிக அளவில் அதிகரித்தன.

வழக்கமாக ஏற்றுமதியாகும் கார், இயந்திரங்கள் போன்ற பொருட்களில் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளன.



பெரி. முத்துராமன், M.BA, M.Com, இந்திய வங்கி ஒன்றில் உயரதிகாரியாகப் பணியாற்றியபின் தற்பொழுது கனடாவில் பணியாற்றுகிறார். இவரது கட்டுரைகள் இந்தியாவிலும், கனடாவிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இது ஒரு விளம்பரம்.
விளம்பரத்திற்கு ஒரு விளம்பரம்

விளம்பரம் TM
VILAMBARAM TM
416-282-8059
416-282-4978
சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

13வது ஆண்டில்
கனடாவில் தொடர்ச்சியாக
மாதமிருமுறை இலவசமாக வெளிவரும்
சமூகமுன்னேற்றப் பத்திரிகை
"விளம்பரம்"

தொலைபேசி: 416.282.8059 தொலைநகல்: 416.282.4978

# அடிபணியுங்கள், இல்லை அழித்திடுவோம்
# அமெரிக்க வேதம்

பிறந்து விட்ட புதிய ஆண்டின் உலகநிலை 1991ஆம் ஆண்டின் ஆரம்பத்தை நினைவுக்கு கொண்டு வருகின்றது. அப்போதும் மத்திய கிழக்கை போர் மேகங்கள் சூழ்ந்திருந்தன.

ஒரு சிறு வித்தியாசம் - அப்போது அமெரிக்கா ஈராக் மீது தொடுக்க ஆயத்தம் செய்த போர் நியாயமானது என பெரும்பாலான மக்கள் நினைத்தனர். ஏனெனில் அண்டை நாடான குவெய்த் மீது படையெடுத்ததும், ஐ.நா. சபையின் ஆணைக்கு அடிபணிந்து அந்நாட்டை விட்டு விலக ஈராக்கிய தலைவர் சதாம் உசேன் மறுத்ததும் உலகின் மனச்சாட்சிக்கு நல்லதாகத் தோன்றவில்லை.

இப்போதோ அமெரிக்கா ஈராக் மீது தொடுக்க நினைத்திருக்கும் யுத்தத்திற்கு ஒரே ஒரு நாடுதான் ஒளிவு மறைவின்றி நேரடியாக ஆதரவு அளிக்கின்றது. அது பிரித்தானியா. பிரித்தானியப் பிரதமர் ரோனி பிளேயரைப் போன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இளையவரின் இராணுவக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பவர் வேறுயாருமில்லை.

ஏனெனில் ஈராக் மீதான அமெரிக்காவின் கடுமையான போக்குக்கு நியாயம் இருப்பதாகப் பலருக்குப் படவில்லை. சதாம் உசேன் தனது கொடுங்கோலாட்சியை மாற்றிக் கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் "உலக பாதுகாப்புக்கு" அச்சுறுத்தும் வகையில் இராணுவ, உயிரியல் மற்றும் அணு ஆயுதத் தயாரிப்பில் பெருமளவு ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையின் ஆணைப்படி ஈராக் தனது சகல இராணுவ இரசாயன, உயிரியல், அணு ஆயுதத் திட்டங்களை மட்டுமல்ல இராணுவ நோக்குக்கு அல்லாத சகல திட்டங்களையும் கையளிக்க வேண்டும். அதன்படி ஈராக்கும் 12,000 பக்கங்கள் நிறைந்த ஆவணத்தைக் கையளித்து விட்டது. பாதுகாப்புச் சபையின் கட்டளைப்படி ஈராக் தனது சகல இரசாயன, உயிரியல் அணுத் துறைத் திட்டங்களைக் கையளிக்காமல் விட்டாலோ, அல்லது கடந்த காலங்களில் இந்த மூன்று துறைகளில் தான் சேர்த்து வைத்திருந்த கையிருப்புகளை அழித்ததற்கான சான்றுகளைச் சமர்பிக்காவிடின், இக் கட்டளையை மீறியதாகக் கருதப்படும்.

ஈராக் கையளித்த ஆவணத்தில் புதிதாக ஒன்றுமில்லையென்று கூறியுள்ள வெள்ளைமாளிகை, உசேன் பாதுகாப்புச் சபையின் கட்டளையை மீறிவிட்டார் என்பதை மறைமுகமாகக் கூறியுள்ளது. பாதுகாப்புச் சபையின் கட்டளை மீறப்படும் பட்சத்தில் ஈராக் தாக்கப்படும் என்பது புஷ் - பிளேயரின் நிலைப்பாடு. எனினும் ஈராக்கைத் தாக்க வேண்டிய அவசியம் இருப்பதாகத் தான் கருதவில்லை என ஐ.நா.வின் செயலாளர் நாயகம் கோபி அனான் சாட்டையால் அடித்தாற் போல் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல, அமெரிக்கா போன்று இந்த 12,000 - பக்க ஆவணத்தைப் பெற்றுக் கொண்ட இரு பாதுகாப்புச் சபை உறுப்பினர்களான சீனாவும் ரஷ்யாவும் கூட கோபி அனானின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன.

ஈராக்கைத் தாக்குவது என்பது புஷ்ஷைப் பொறுத்த வரையில் முடிந்து போன விடயம். கடந்த வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் தற்போதைய ஜனாதிபதியின் தந்தையான ஜோர்ஜ் புஷ் முதியவர். தற்போதைய கடும் போக்கு அமெரிக்க அரசாங்கத்தின் நிலை தந்தை முடிக்காத காரியத்தை தனயன் முடிக்க வேண்டுமென்பது மட்டுமல்ல இன்னும் பல உள்ளன. "உலகத்தமிழோசை"யின் சென்ற இதழில் குறிப்பிட்டது போன்று உலகின் மிகக் கூடிய எண்ணெய் வளம் நிரம்பிய நாடு சவூதி அரேபியா. அதற்கு அடுத்த படியாக வருவது ஈராக். சவூதியின் மன்னர் குடும்பம் அமெரிக்காவின் கைகளில் உள்ளது. ஆனால் ஈராக்கில் அமெரிக்க எதிர்ப்புத் தலைவர் ஒருவர் இருப்பது, மலிவு விலை எண்ணெயில் உயிர் வாழும் உள்ளூர் எண்ணெய் உற்பத்தி குறைந்து வரும் அமெரிக்காவிற்குப் பிடிக்கவில்லை.

அதுமட்டுமல்ல, தற்போதைய வலதுசாரி அடிப்படை வாத புஷ் அரசின் பின்னால் நிற்கும் மூன்று சக்திகளில் ஒன்று எண்ணெய் நிறுவனங்கள். (ஏனைய இரு சக்திகள் - இராணுவ தளபாடங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள், தீவிரவாத வலதுசாரி போக்குடைய கிறிஸ்தவ அமைப்புகள்) அவை உலகின் நில எண்ணெய் வளத்தைத் தமது கையில் கொண்டு வருவதில் தீவிரமாயுள்ளன. ஆனால் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடன் என்ற கடப்பாடும் அமெரிக்காவின் தேசிய நலன்கருதி, உலகின் நில எண்ணெய் வளத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும் அதுமட்டுமல்ல புஷ் அரசின் கடுமையான இராணுவப் போக்குக்கான காரணங்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தம் பாரம்பரிய ஐரோப்பிய சக்திகளின் வீழ்ச்சியுடன் முடிவடைய உலகில் புதிய சக்தியாக அமெரிக்காவும், சோவியத் யூனியனும் உருவெடுத்தன.

அமெரிக்கப்படையினருடன் இணைந்து பயிற்சி பெறும் துருக்கியப் படையினர்

photo: US Military






photo: US Military

ஈராக் மீது தாக்குதல் நடக்கமாயின் 500 விமானங்கள் ஒரே நேரத்தில் குண்டு வீசலாம்

இன்று சோவியத்யூனியன் இல்லை; அதன் பிரதான வாரிசான ரஷ்யாவோ அணு ஆயுதங்களைக் கொண்ட வீரம் பேசும் ஏழை.

ஆகவே உலகின் ஒரே ஒரு வல்லரசு அமெரிக்காதான். ஆனால் அந்த அந்தஸ்து அமெரிக்காவின் வலதுசாரி சக்திகளுக்குப் போதாது. அவர்களைப் பொறுத்த வரையில் உலகின் சரித்திரம் இதுவரை கண்டறியாத மாபெரும் பேரரசாக அமெரிக்கா மாற வேண்டும்; அவ்வாறு ஏனையோரால் கருதப்பட வேண்டும்.

தன்னிகரில்லாத் தலைவன் என்ற கோட்பாட்டை ஏற்று அடிபணிய மறுக்கும் நாடுகளையும், இந்த கோட்பாட்டுக்கு இடையூறாக இருக்கும் நாடுகளையும், நபர்களையும் துவசம் செய்யும் பணியில் தான் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் (தலிபான்) இப் பணியின் முதற்படி ஈராக் இரண்டாம் படி. அடுத்தது யாரென்பது இன்னமும் கேள்விக்குறி. அமெரிக்காவின் இன்னொரு 'எதிரி' யும் மத்திய கிழக்கில் இருக்கிறது. அது ஈரான். ஆப்கானிஸ்தானில், ஈரானிய எல்லைக்கு அருகாமையில் அமெரிக்க இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். ஈராக்கில் அமெரிக்க சார்பு அரசாங்கம் நிலைகொண்டு விட்டால் இன்னொரு பக்கத்தாலும் ஈரான் வளைக்கப்பட்டு விடும்.


அமெரிக்க இராணுவ, அரசியல் கொள்கைகளுக்கு எதிராக இருந்த இரு பலம் வாய்ந்த நாடுகள் இந்தியாவும் சீனாவும் ஆகும். இதில் இந்தியா அமெரிக்க சார்பாகி விட்டது. சீனாவிற்கு அருகில் தென்கொரியாவிலும் ஜப்பானிலும் அமெரிக்கப் படைகள் ஏற்கெனவே நிலை கொண்டுள்ளன. இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் ஆசியாவில் அமெரிக்க இராணுவ நடமாட்டம் இன்னமும் அதிகரித்துள்ளது.

'அமெரிக்க நலன்களுக்கேற்றவாறு உலகை மாற்றியமைத்தல்' என்ற அடிப்படைக் கொள்கைக்கேற்ப, அரசியல் ரீதியிலும் தனது மேலாதிக்கத்தை நிறுவும் முகமாக சர்வதேச சட்டங்களைத் தனக்கேற்றவாறு எழுதவும், அது முடியாத விதத்தில் அவற்றை முற்றாகப் புறக்கணிக்கவும் (உதாரணம் பரீட்சார்த்த அணு ஆயுத வெடிப்புகளை தடுக்கும் ஒப்பந்தம் - TBT) அல்லது அவை தனக்கு ஆதரவான முறையில் மாற்றியமைக்கப்படும் வரை புறக்கணிக்கவும் (உதாரணம் சர்வதேச குற்றவியல் நீதிமன்று) அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் இந்தப் போக்குக்கு உலகெங்கும் பலத்த எதிர்ப்பு இல்லாமல் இல்லை. அமெரிக்க அமைப்பொன்றினால் அண்மையில் 44 நாடுகளில் நடத்தப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது பலர் அமெரிக்காவின் ஜனநாயகம், கலாசாரம் போன்றவற்றை வரவேற்றாலும், அதனை ஒரு சுயநல போக்குக் கொண்ட அடாவடிக் காரனாகப் பார்ப்பது தெரிய வந்தது.

உலகின் நலனைப் பற்றிக் கவலைப்படாமல், குறுகிய அமெரிக்க நலன்களிலேயே கரிசனம் கொண்ட நாடாக பல வெளிநாட்டவர் அமெரிக்காவைப் பார்ப்பதாக 2001ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழக பேராசிரியரான ஜோசப் நை (Joseph S. Ny) தனது புத்தகமான The Paradox of American Power இல் குறிப்பிட்டார்.


அமெரிக்காவின் இந்தப் போக்குக்கு, அந்நாட்டுடன் பல தசாப்தங்களாக நெருங்கிய இராணுவ, பொருளாதார, அரசியல் உறவுகளைக் கொண்டிருந்த (பிரித்தானியாவைத் தவிர்த்து) ஐரோப்பிய நாடுகளுக்குக் கூட சங்கடமாயுள்ளது. அமெரிக்காவைப் போன்று ஜனநாயகத்திலும், முதலாளித்துவத்திலும்,




# அமெரிக்காவின் அடுத்த இலக்கு?



photo: Iraqi Mission



அமெரிக்காவை இன்று ஏதாவதொரு வகையில் எதிர்த்து நிற்கக் கூடிய இரு நாடுகள் / அமைப்புகள் சீனாவும், ஐரோப்பிய ஒன்றியமும் தான். சீனா இராணுவ பொருளாதார ரீதியில் வளரும் வரை (2050 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவிற்கு அடுத்ததாக பொருளாதார பலம் நிறைந்த நாடாக வளர சீனாவுக்கு வாய்ப்புண்டு) பெய்ஜிங் அமெரிக்காவுடன் முண்டிக் கொள்ளாது.

மேலைத்தேய நாடுகளின் மேலாதிக்கத்திலும் நம்பிக்கை வைத்துள்ளன இவை. எனினும், அவர்கள் அமெரிக்க நலன்களை மட்டும் காப்பாற்ற அல்லது முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை ஆதரிக்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். (இப்போது எதிர்ப்புத் தெரிவித்தாலும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் மட்டுமல்ல சீனா, ரஷ்யா கூட இறுதியில் ஈராக் மீதான யுத்தத்திற்கு ஆதரவளிக்கத்தான் போகின்றன.)

அமெரிக்காவை இன்று ஏதாவதொரு வகையில் எதிர்த்து நிற்கக் கூடிய இரு நாடுகள் / அமைப்புகள் சீனாவும், ஐரோப்பிய ஒன்றியமும் தான். சீனா இராணுவ பொருளாதார ரீதியில் வளரும் வரை (2050 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவிற்கு அடுத்ததாக பொருளாதார பலம் நிறைந்த நாடாக வளர சீனாவுக்கு வாய்ப்புண்டு) பெய்ஜிங் அமெரிக்காவுடன் முண்டிக் கொள்ளாது. பொருளாதார ரீதியில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் அமெரிக்காவுடன் மோத முடியும். ஆனால் தற்போதைய 15 நாடுகளிடையே வெளிநாட்டுக் கொள்கையில் ஒற்றுமையில்லாதது அமெரிக்காவுக்குத் தான் சாதகமாயுள்ளது.

அமெரிக்க விருப்புகளுக்குத் தடைக்கற்கள் இல்லாமலும் இல்லை! ஆப்கானிஸ்தானில் பாவிக்கப்பட்ட அதிநூதன ஆயுதங்களாலும், இராணுவ செய்மதிகளாலும் பின்லாடனைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. சதாம் உசேனை பதவியிலிருந்து அகற்ற முடியுமா; அவரைக் கைப்பற்ற முடியுமா என்பது அமெரிக்கா மீதுள்ள சர்வதேசத்தின் மதிப்பைக் கணிப்பிட உறுதுணையாயிருக்கும் என்பது உறுதி.

# சந்தடியோடு சந்தடியாக....

உலகின் பார்வை மத்திய கிழக்கில் படிந்திருக்கும் இவ் வேளையில், மத்திய ஆசிய தலைநகரொன்றில் முக்கிய நிகழ்ச்சியொன்று இடம்பெற்றது.

துருக்மெனிஸ்தானிலுள்ள பாரிய நிலக்கீழ் இயற்கைவாயு (natural gas)ஐ அகழ்ந்தெடுத்து குழாய் மூலம் ஆப்கானிஸ்தான் ஊடாக பாகிஸ்தான் துறைமுகம் ஒன்றிற்கு எடுத்துச் சென்று ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் துர்க்மென், ஆப்கான், பாகிஸ்தான் தலைவர்கள் டிசம்பர் மாத இறுதியில் கைச்சாத்திட்டனர்.




சுமார் 1500 கி.மீ நீளமான இந்தக் குழாயை அமைக்க 2.5 பில்லியன் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

துருக்மெனிஸ்தான் தனது இயற்கை வாயுவை தற்போது ரஷ்யாவிற்கும் உக்ரேனுக்கும் ஏற்றுமதி செய்கிறது. தொண்ணூறாம் ஆண்டுகளின் ஆரம்பம் முதல் இந்த குழாய் அமைப்பது பற்றி துருக்மென் தலைவர் சபர்முறாத் நியாசொஸ் (Saparmurat Niya Zov)உம் அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களும் ஆலோசித்து வந்தனர். ஆயினும் ஆப்கானிஸ்தானில் நிலவிய சூழ்நிலை காரணமாக இத்திட்டம் நிறைவேறுவது கைகூடவில்லை. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆதரவு அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் குழாய் அமைக்கும் திட்டம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாயின.

இந்தக் குழாய் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் இயற்கை வாயுவின் முக்கிய பாவனையாளராக இந்தியா கருதப்படுகிறது. எனவே இந்தியாவும் இத்திட்டத்தில் முதலீடு செய்யலாம் என இந்திய சார்பு ஆப்கான் தலைவர் ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

த. சிவதாசன்



# தனியொருவனுக்கு...

ஈராக் மீது எந்த நேரத்திலும் குண்டுமழை பொழியலாம். ஐ.நா. சபையின் தீர்மானம் எதுவும் எதிர்பார்க்காமலே அமெரிக்கா தீர்ப்பை வழங்கியிருக்கிறது. வெள்ளை அரசுகள் அதற்கு ஆமாப் போடுகின்றன. 'எல்லாம் எப்போ முடிந்த காரியம்' என்று யோக சுவாமிகள் கூறியதன் அர்த்தம் இப்போ விளங்குகிறது.

செப்ரெம்பர் பதினொன்றின் தாக்கம் உலகம் முழுவதும் சர்வ வியாபகம் எடுத்திருக்கிறது. பலமுள்ளவர்கள் மார்தட்டிப் பீற்றிக்கொள்கிறார்கள். பலமற்றவர்கள் ஒதுங்க இடமின்றி அங்கலாய்க்கிறார்கள். பலநாடுகள் ஈராக் மீது அனுதாபப்படுகின்றன. ஈராக்கிய மக்களின் படுதுயர் மனதைப் பிழிகிறது. சதாம் உசேனின் கரங்கள் தூயனவல்ல என்பது மட்டும் நிதர்சனமானது. குர்திஷ், ஈரானிய மக்களைக் கொன்று குவித்து பாவத்தைத் தேடினார். அவர்கள் அரபு, இஸ்லாமிய மக்களாயிருந்தும் இப்படுகொலைகளை அவர் செய்தார். அமெரிக்காவும் அதன் வருடிகளும் வாளாவிருந்தனர். ஏனைய அரபு-இஸ்லாமிய நாடுகளும் வாளாவிருந்து துணைபோயின.

செப்ரெம்பர் பதினொன்று தாக்குதலுக்கு முன்னர் பிரித்தானிய பிரதமர் ரோனி பிளெயர் ஜனாதிபதி புஷ்ஷின் நண்பரல்லர். கனடியப் பிரதமர் ஜோன் கிரித்தியேன் கிளின்ரனுக்கு மிக வேண்டியவரென்பதால், இன்றுவரையும் ஜனாதிபதி புஷ்க்கு வேண்டியவரல்லர். ஜனாதிபதியினால் இதுவரையில் தனது பிரத்தியேக விடுமுறை வாடிக்கு அழைக்கப்படாத அயல் நாட்டுத் தலைவர் பிரதமர் கிரத்தியேன்தான். அப்படியிருந்தும் 'ஒருவனுக்கு விழுந்த அடி எங்கள் எல்லோருக்கும் விழுந்த அடி' என்று ஓலமிட்டுக்கொண்டு அல்கயீதா மீது பாய்ந்தார்கள். அவர்களது 'மைத்துன' உறவு அத்தனை பலம் வாய்ந்தது.

நமது 'மண்ணிற' மைத்துனர்களிடையே என்ன நடக்கிறது? இந்திய பாகிஸ்தான் மைத்துனர்கள் ஆள்மாறி தத்தமது அணுவாயுதத்தைத் தீட்டிக்கொள்கிறார்கள். மதங்களின் பெயரால் மக்களைக் கொழுத்திக்கொள்கிறார்கள். நாகரிகமாக, ஒற்றுமையாக பலம் வாய்ந்த நாடுகளைக் கட்டி எழுப்ப வேண்டியவர்கள் சாதிகளின் பெயர்களிலும் மதங்களின் பெயர்களிலும் சின்னாபின்னப்பட்டுப் போய் இருக்கிறார்கள். உலகில் பெரிய மக்கள் சந்தையை வைத்திருக்க வேண்டியவர்கள் உலகின் கொடிய வறுமைப் பிணிக்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள். ஏன் இதுவெல்லாம்?

பாவம் பாலஸ்தீனியர்கள். கடவுளாலேயே கைவிடப்பட்ட மக்கள் அவர்கள். அகதி முகாம்களிலே பல தலைமுறைகளைக் கண்ட பரிதாபம் இவர்களுக்கு. ஒரு வேளை சாப்பாட்டுக்கே யூதர்களை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இவர்களைச் சூழ்ந்துள்ள இவர்களின் அரபு மைத்துனர்களோ யூதர்களை ஒழித்துக்கட்டுகிறோம் பார் என்று விட்டு 'மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சர்' என்ற யூதர் கடையில் பல இலட்சம் டொலர்களை வாரி இறைத்துக் கொள்கிறார்கள். யூதர்களினால் அகதியாக்கப்பட்ட பாலஸ்தீனியர்களை விடவும் ஜோர்தான், எகிப்து, லெபனான் நாட்டு அராபிய 'மைத்துனர்'களினால் அகதியாக்கப்பட்ட பாலஸ்தீனியர்களே அதிகம்.

குர்திஷ் மக்கள் மட்டுமென்ன? ஈராக், ஈரான், துருக்கி என்று பன்னாட்டுப் பங்காளர்கள் இருந்தும் நாடின்றி அவலப்படுவதன் காரணமென்ன. உலகம் முழுவதும் ஒரு குடைக்கீழ் கொண்டு வரவேண்டுமென்ற மஹா இஸ்லாமிய சித்தாந்தத்தை வரித்துக் கொடுத்த அல்கயீதாவிற்கு தான தருமம் பண்ணிய சவூதி அரேபியா, யேமன், சிரியா போன்ற நாடுகளின் மைத்துனர்கள் ஏன் இந்த இஸ்லாமியரைக் கைவிட்டார்கள்?

கறுப்புக் கண்டம் இன்னும் எத்தனை வருடங்களோ? சஹாரா போன்ற பாலைவனங்கள் ஒரு காலத்தில் சோலைகளாகவிருந்தன என்கிறார்கள். வரட்சியோ அல்லது யுகத்தின் புரட்சியோ சரஸ்வதியாறு நம்மை விட்டு ஓடிவிட்டது. அக்கினி பகவானின் வேண்டுகோளிற்கிணங்கி கிருஷ்ணனும் அருச்சுனனும் காண்டக வனத்தை 'கறுப்பின' நாகர்களோடு சேர்ந்து எரித்த கதை மீண்டும் கறுப்புக் கண்டத்தில் அரங்கேறுகிறது. வெள்ளை இனத்தின் இந்திரப்பிரஸ்தம் அங்கு எப்போதும் உருவாகலாம். எரிந்து கருகிய மரங்களை உருவகிக்கும் மெலிந்து வதங்கிய பெண்கள். கிளைவிட்ட மரங்கள் போல அவர்கள் இடுப்பில் 'குத்தி'யிருக்கும் எலும்புக் குழந்தைகள். யார் செய்த பாவம்?


இவ்வளவும் சொல்லிவிட்டு எங்கே 'நம்ம கதையை விட்டு விடுவேன்' என்று நினைக்கிறீர்களா? 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கவிதை பாடினோமா? இன்னும் பாடிக்கொண்டேதானிருக்கிறோம். தனியொருவனுக்கு மட்டும் உணவின்றிப் போயிருந்தால் பாரதியின் பெயரால் தமிழகம் சிங்களத்தைத் துவம்சம் செய்திருக்கும். பலபேரிற்கு உணவில்லை எனில் 'ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி பாடவில்லைத்தானே? பாவம் பாரதியை குறை சொல்லமுடியாது. திராவிடத்துவம் பலமுள்ளதாயிருந்திருந்தால் எங்கள் தலைநகரம் மொஹஞ்சதாரோவிலோ ஹரப்பாவிலோ இருந்திருக்கும். காந்தாரம் (ஆப்கானிஸ்தான்) எங்களுக்கு மைத்துன தேசமாக இருந்திருக்கும். அமெரிக்கர்களும் அவர்களது மைத்துனர்களும் திராவிடர்களிடம் அடி வாங்கிக் கொண்டு ஓடியிருப்பார்கள்.

'தூங்கெயில்' என்று மணிமேகலையில் கூறப்படும் விமானத்தை உருவாக்கிய தேவதச்சன் மாயன் மன்னாரின் மாதோட்டத்தைச் சேர்ந்தவன் என்கிறார்கள். சிலவேளை அவன் சந்ததியினர் எங்கோ ஒரு மூலையில் ஓர் ஈழத்தைச் செதுக்கிக் கொண்டிருக்கலாம். அதுவரையில்.....

....தனியொருவனுக்கு உணவில்லையெனில்...

பல்லவி... அனுபல்லவி... சரணம்...

எல்லாமே அதுதான்!


வெகுவிரைவில்
கதிரின் தயாரிப்பில்
வெளிவர இருக்கும்
குடும்பச் சித்திரம்



# ஜேர்மனி

தொழில்நுட்பத்தில் பாண்டித்தியம் பெற்றோரை ஜேர்மனிக்குக் குடிவரவாளர்களாக அழைப்பது பற்றிய அரசின் திட்டத்தை அந்நாட்டு அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இச்சட்டம் இவ்வருட ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வருவதை ஜேர்மனிய அதி உயர் நீதிமன்றம் தடுத்ததையடுத்தே சோஷலிச ஜனநாயகக் கட்சியை (SPD) சேர்ந்த அதிபர் கேர்ஹர்ட் ஷ்றோடர் (Gerhard Shroeder) இந்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

கணினித்துறையிலும், ஏனைய தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களை குடிவரவாளர்களாக ஜேர்மனிக்கு அழைக்கும் இச் சட்டத்தை அமுலாக்க ஜேர்மனிய ஜனாதிபதி திரு. யொகானஸ் ரவ் (Johannes Rau) கடந்த வருடம் ஜுன் மாதத்தில் அனுமதியளித்திருந்தார். எனினும் இச் சட்ட மூலம் சட்ட விரோதமான முறையிலேயே ஜேர்மனிய மேல் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என பிரதான எதிர்க்கட்சியான கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றியக் கட்சி (CDU) புகார் செய்திருந்தது. ஜேர்மனியச் சட்டப்படி, அந்நாட்டின் 16 மாகாணங்களினதும் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் மேல் சபையில், ஏதாவதொரு மாகாணத்தின் பிரதிநிதிகள் கட்சிபேதமின்றி சட்டமொன்றை ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தால், அம் மாகாணம் அச்சட்ட மூலக் கணக்கெடுப்பில் கலந்து கொள்ளக் கூடாது.

இந்தக் குடிவரவாளர் சட்டம் மேல் சபையில் கடந்த மார்ச் மாதம் வாக்கெடுப்புக்கு வந்த போது பிராண்டன் பேர்க் (Brandenburg) மாகாணத்தின் SPD - CDU பிரதிநிதிகளால் ஒருமித்து வாக்களிக்க முடியவில்லை. எனினும் பாராளுமன்ற சபாநாயகர் குடிவரவாளர் சட்டத்திற்கு ஆதரவான SPD உறுப்பினர்களின் வாக்குகளைப் பதிவு செய்து விட்டார். இந்த நீதிக்குப் புறம்பான நிலையை ஜனாதிபதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளத் தவறியதை அடுத்தே CDU உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற 'பச்சை அட்டை' (Green Card) போன்று ஜேர்மனியும் 2001ஆம் ஆண்டு முதல் கணினித்துறை நிபுணர்களுக்கு விசேட குடிவரவாளர் அனுமதிப் பத்திரங்களை வழங்கி வருகின்றது. ஐயாயிரம் இந்தியர் உட்பட சுமார் 10,000 மக்கள் வரை ஏற்கனவே வேலை நிமித்தம் குடிபெயர்ந்துள்ளதாக ஜேர்மனிய உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வாறு வேலைவாய்ப்புடன் குடிபெயரும் குடிவரவாளருக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்க இச்சட்டம் வழிவகுக்கவுள்ளது.


எனினும் இந்தப் புதிய சட்டத்திற்கு CDU உட்பட பல பழமைவாத (Conservative) கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. நாட்டில் நான்கு மில்லியன் (40 இலட்சம்) மக்கள் வேலையில்லாமல் இருக்கையில், ஏன் புதிய தொழிலாளர்களை இறக்குமதி செய்ய வேண்டும் என CDU கேள்வி எழுப்பியுள்ளது. அத்துடன், குடிபெயர அனுமதிக்கப்படும் தொழில்நுட்ப நிபுணர்களின் எண்ணிக்கையை சட்ட மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் இக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய சட்டத்தின் பிரகாரம், தொழில்-துறை நிலைமைக்கு ஏற்பவே எண்ணிக்கை வருடா வருடம் நிர்ணயிக்கப்படவுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு "விருந்தினர் தொழிலாளர்" (Guest Worker) என்ற பதத்தை ஜேர்மனி உலகுக்கு அறிமுகம் செய்து 40 ஆண்டுகள் ஆயின. இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் ஏற்பட்ட அகோர அழிவுகளிலிருந்து மீண்டும் அந்நாடு துரிதமாக வளர்ச்சியடைந்து வருகையில் ஜேர்மனியர் செய்ய விரும்பாத வேலைகளைச் செய்யவென துருக்கி நாட்டிலிருந்து ஜேர்மனி தொழிலாளர்களை 1961ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்யத் தொடங்கியது.

இவர்கள் "விருந்தினர்"களாகத் தங்கியிருந்து ஒரு சில வருடங்களின் பின்னர் மீண்டும் தாய்நாட்டிற்குக் குடிபெயர்ந்து விடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அவர்கள் ஜேர்மனியிலேயே தங்கிவிட்டனர். இதனால் இவர்களுக்குக் குடியுரிமை வழங்குவது முதல், இவர்களை சம அந்தஸ்து உள்ளோராக ஏற்றுக்கொள்வது வரை பல பிரச்சினைகளுக்கு ஜேர்மனி இன்னமும் சரியான தீர்வைக் காணவில்லை.

ஜேர்மனியின் மொத்த சனத்தொகை: 82 மில்லியன்
இதில் வெளிநாட்டவர்: 7.3 மில்லியன் (8.9%)

ஒரு சில நாட்டவர்களின் எண்ணிக்கை




ஆதாரம்: குடிவரவு, வெளிநாட்டவர்களுக்கான மத்திய ஜேர்மனிய அலுவலகம் / 2000

யாழ். அரசாங்க அதிபரின் அறிக்கை ஒன்றின்படி யாழ். குடாநாட்டிலுள்ள சுமார் 80 சதவீத இல்லங்கள் ஏதோ ஒரு வகையில் சேதமாக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய நகரங்களுக்கோ, மாவட்டங்களுக்கோ இந்த அண்ணளவான மதிப்பீடு கூட இருப்பதாகத் தெரியவில்லை.

Photo: Reuters



# சிதைந்த வாழ்வை புனரமைக்கத் துடிக்கும் மக்கள்



Photo: Reuters

யாழ்ப்பாண வீதி. மக்கள் சுமுக வாழ்க்கைக்கு திரும்ப முயல்கின்றனர்.

இயல்பு நிலை, சகஜநிலை, மீள் குடியேற்றம், புனருத்தாரணம், அபிவிருத்தி - இவை இலங்கையிலும், இலங்கைக்கு வெளியில் வாழும் தமிழரிடையேயும் இன்று அதிகமாகப் பாவிக்கப்படும் சொற்பதங்கள். இவையில்லாமல் அமைதியில்லை, அமைதியில்லாமல் இவையில்லை என்றாகிவிட்டது.

இந்தச் சொற்பதங்களைக் கூட வரிசைப்படுத்த முடியாது. இயல்பு நிலை மீண்ட பின்னர் மீள்குடியேற்றமா, இல்லை மீள்குடியேற்றம் தான் இயல்பு நிலைக்கு வழிகோலுமா? புனருத்தாரணம் எக்கட்டத்தில் வரும்? இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எவ்வளவு குழப்பமான சிக்கலான நிலையிலுள்ளன என்பதனையே இது குறிக்கின்றது.

இதனை உணர்ந்துதான் நான்காம் சுற்றுப் பேச்சின் போது இலங்கையின் சமாதான தீர்வுக்கான அரசியல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்துடன், மக்களின் அன்றாட வாழ்க்கையில் முன்னேற்றமும் முக்கியம் என்பதனை இரு சாராரும் வலியுறுத்தினர். துப்பாக்கிகளின் முழக்கம் நின்று ஓராண்டு கழிந்துவிட்ட போதிலும், வடக்கு கிழக்கில் சுமுக நிலை இன்னமும் திரும்பி விடவில்லை என்பதை இலங்கை அரசாங்கம் கூட ஏற்றுக் கொண்டுள்ளது என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

உண்மை என்னவெனில், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலுள்ள வர்த்தகர்களுக்கு இயல்பு நிலை திரும்பி விட்டது. குறிப்பாக கொழும்பிலுள்ள பல சிங்கள வர்த்தகர்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதாவது, தமது வர்த்தகத்தை அவர்கள் விரிவாக்கியுள்ளனர். அதுபோன்று கொழும்பை மையமாகக் கொண்டுள்ள பல நிறுவனங்கள் தமது கிளைகளைத் திறக்கும் பணிகளில் உற்சாகமாக ஈடுபட்டுள்ளன. எனினும் யாழ். வர்த்தகர்கள் தமது வியாபாரத்தை விஸ்தரிக்கும் முயற்சிகளில் ஈடுபடாதது குறிப்பிடத்தக்கது என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான திரு. ந. குமரகுருபரன் கூறுகிறார். "கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்படுவதுதான் இயல்பு நிலையென்றால் (யாழ்ப்பாணத்தில்) இயல்புநிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அங்கு வாழும் மக்களுக்கு இயல்பு நிலை மீண்டு விட்டதாவென்றால் இல்லை என்றே கூறவேண்டும்", என சிரேஷ்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் ஒருவர் கூறுகின்றார்.


நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் இயல்பு நிலை, மீள்குடியேற்றம், புனருத்தாரணம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஆனால் எது முதலில் வரவேண்டுமென்பதில் உறுதியில்லை. எனினும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது இல்லங்களுக்கு மீள்வது என்பது சமாதானத் திட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். அதுமட்டுமல்ல, இது அம்மக்களின் அடிப்படை உரிமையுமாகும்.

ஆப்கானிஸ்தானில் 1979ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற அனர்த்தங்கள், ஆபிரிக்காவில் அங்கோலா, சீரா லியோன் போன்ற நாடுகளின் உள்நாட்டு யுத்தங்கள் ஏற்படுத்திய அவலங்களைப் போன்று இலங்கையின் உள்நாட்டு யுத்தம், உலகின் குறிப்பாக மேலை நாடுகளிலுள்ள சக்திவாய்ந்த ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கா விட்டாலும் கூட, உலகில் மிக மோசமான உள்நாட்டு யுத்தங்களிலொன்று என்பது மனித நேய அமைப்புக்களின் கருத்து.

உலகவங்கி மற்றும் ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் கணிப்பின்படி, இந்த உள்நாட்டு யுத்தத்தினால், ஏழு இலட்சம் மக்கள் இலங்கையை விட்டு அகதிகளாக வெளியேறினர். இன்னுமொரு எட்டு இலட்சம் மக்கள் உள்நாட்டு அகதிகளாக (internally displaced persons) ஊர் விட்டு ஊர் பெயர்ந்தனர். அதுமட்டுமல்ல, இந்த யுத்தம் 30,000 கணவனை இழந்த பெண்களையும், மூன்று இலட்சம் பெற்றோரை இழந்த சிறுவர்களையும் உருவாக்கியுள்ளதாக உலகவங்கி அறிக்கையொன்று கூறுகிறது.

இவ்வாறு குடிபெயர்ந்த மக்கள் மீண்டும் மீள்வதற்கான வசதிகளை செய்து கொடுப்பது பற்றி இரு தரப்பினரும் ஆராய்ந்து வருகின்றனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட வீடுகளை திருப்பிக் கொடுத்தல் (உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியிலுள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ நிலையங்களில் ஒவ்வொன்றையும் அண்டியுள்ள 5-10 வீடுகள் வரை இராணுவ தேவைக்காக பாவிக்கப்பட்டு வருகின்றன), குடிபெயர்வதற்கு நிதியுதவி அளித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

எனினும் பலர் இந்த உயர்மட்ட பேச்சுக்களின் முடிவுக்காகக் காத்திருக்கவில்லை. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய தரவுகளின்படி



எமது சிறப்பு செய்தியாளர்

இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டோர் தமது இல்லங்களுக்கு திரும்பி விட்டனர்.

ஆனால் இவர்கள் திரும்புவது தமது நிர்மூலமாக்கப்பட்ட இல்லங்களுக்கே. "தென்மராட்சியில் சில பகுதிகளுக்குப் போனால் ஆளளவு வளர்ந்த புதர்கள் தானுள்ளன, வேறொன்றுமல்ல" என்று 'உலகத்தமிழோசை'க்கு அளித்த பேட்டியில் கூறுகிறார் தமிழ்க் காங்கிரசின் குமரகுருபரன்.

யாழ். அரசாங்க அதிபரின் பழைய அறிக்கை ஒன்றின்படி யாழ். குடாநாட்டிலுள்ள சுமார் 80 சதவீத இல்லங்கள் ஏதோ ஒரு வகையில் சேதமாக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய நகரங்களுக்கோ, மாவட்டங்களுக்கோ இந்த அண்ணளவான மதிப்பீடு கூட இருப்பதாகத் தெரியவில்லை. யாழ். குடாநாட்டில் கூட வீதிகள், தொலைதொடர்பு கட்டிடங்கள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட சேதம் பற்றிய விபரங்களில்லை என்பதை யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரான திரு. சு. பரமநாதன் 'உலகத் தமிழோசை' க்கு சுட்டிக்காட்டினார். வடக்கு, கிழக்கு மாகாணங்களை புனரமைப்புச் செய்யவென சர்வதேச ரீதியில் நிதி உதவக் கோரப்படும் இவ் வேளையில் புனருத்தாரணத்திற்குத் தேவைப்படும் பணம் பற்றிய மதிப்பீடு இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பலவீனத்தை உணர்ந்து வடக்கு, கிழக்கு அரச அதிகாரிகள் தற்போது சேதங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி வருகின்றனர். உதாரணமாக, யாழ், குடாநாட்டில் மீளக் குடியேறும் மக்கள், திருத்தப்படும் வீடுகள் பற்றிய விபரங்களைத் திரட்டுமாறு யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் கிராம சேவையாளர்களே போகமுடியாத நிலையில், இவ் விபரங்கள் இவ் வலயங்களுக்கு வெளிப் பகுதிகளில் மட்டுமே திரட்டப்படவுள்ளன. தமது இல்லங்களுக்கு மீளச்சென்று வீடுகளைத் திருத்த விரும்புவோரும் அல்லது திருத்த நிதி உதவி நாடுவோரும் முதலில் அப்பகுதி வாக்காளர் பட்டியலில் தமது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதை கிராம சேவையாளருக்கு உறுதிப்படுத்திவிட்டு, பின்னர் அரச பொறியலாளர் ஒருவரின் துணைகொண்டு சேதத்தை மதிப்பிட வேண்டும்.

சேதம் பற்றிய முழுவிபரங்களும் இன்னமும் திரட்டப்படவில்லையாயினும், ஒன்று மட்டும் உண்மை; வடக்கு, கிழக்கைப் புனரமைக்க பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் தேவை.

ஆயினும் இதுவரை கடுகளவே வடக்குக் கிழக்கினுள் சென்றிருக்கிறது. கடந்த வருட இறுதிப் பகுதியில் நோர்வேயில் நடைபெற்ற



Photo: Reuters

உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பின் போது சுமார் 70 மில்லியன் டொலர்கள் மட்டுமே உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது. ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் அமைப்புகள் "பொறுத்திருந்து பார்ப்போம்" என்ற நிலையைக் கடைப்பிடிப்பதாக தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த திரு. குமரகுருபரன் உலகத் தமிழோசைக்கு ரொறன்ரோவில் அளித்த பேட்டியில் கூறினார்.

இந்த பொறுத்திருந்து பார்ப்போம் யுக்தி ஒரு வகையில் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் அழுத் தத்தைக் கொடுக்கும் ஒரு தந்தி ரோபாயம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அதாவது, சமாதான பேச்சுக்களில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் வரை நிதியுதவி அளிப்பதில்லை என்பதே இந்த யுக்தி. இவ்வருட நடுப்பகுதியில் ஜப்பானில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறும் போது பேச்சுக்களின் முன்னேற்றத்தைக் காணக் கூடியதாக இருக்கும் எனவும், அதனால் மேலதிக நிதியுதவி கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிஷ்டவசமாக இந்த 'பொறுத்திருந்து பார்ப்போம் யுக்தியின் அபாயத்தை ஜப்பானின் சிரேஷ்ட ராஜதந்திரியும், இலங்கைக்கான விசேட தூதுவருமான திரு. யசூஷி அகாசி புரிந்து கொண்டுள்ளார். பாதிக்கப்பட்ட

மக்களின் வாழ்க்கையில் வெகுவிரைவில் முன்னேற்றம் காண உதவி வழங்கப்படாவிட்டால், தற்போதைய அமைதி நிலை மாறலாம் என தெரியவந்தது நிதி வழங்கும் நாடுகளின் செவிகளுக்கு நிச்சயமாக எட்டியிருக்கும்.

அனைத்துமே சின்னா பின்னமாக்கப்பட்டுள்ள இந்நிலையை பாவித்து உண்மையில் ஒரு சிறந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நிலையில் வடக்கு, கிழக்கு மக்கள் உள்ளனர். உதாரணமாக, வடக்கு, கிழக்கிலுள்ள பல பிரதான வீதிகள் பல தசாப்தங்களுக்கு முன்னர் அதாவது வாகனப் போக்குவரத்து மிகவும் ஐதாக இருந்த காலத்திற்கேற்றவாறு கட்டப்பட்டன. ஆனால் அதன் பின்னர், வாகனப் போக்குவரத்து பல மடங்கு பெருகிவிட்டது.

இப்போது கிடைக்கவுள்ள நிதியுதவியை உபயோகித்து, எதிர்கால வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு வீதிகளை அமைக்கலாம். அதேபோன்று, குறைந்து போகும் நிலக்கீழ் நீர் பாவிப்பதைக் குறைக்கும் வகையில் பொருளாதாரத்தை விருத்தி செய்யலாம்.

"வடக்கு கிழக்கு பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முதலில் தேவைப்படுவது உள்ளூர் துறைசார் திறமையை (capacity building) அதிகரித்தல்", என்கிறார் யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரான திரு. சு. பரமநாதன். வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உள்ளூர் திறமையை வளர்க்கும் பட்சத்திலேயே தன்னிறைவு காணலாம் என திரு. பரமநாதன் "உலகத் தமிழோசை"க்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

இயல்பு நிலை, மீள்குடியேற்றம், புனருத்தாரணம் என்ற சங்கிலிக் கோர்வையின் வரிசை பற்றி பலர் குழம்புகையில், திரு. பரமநாதனை பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தியின் படிகள் வரிசைப்படுத்தக் கூடியன. முதலில் வருவது மீள்குடியேற்றம், பின்னர் வீதிகள், மின்சாரவசதி, தொலைதொடர்பு போன்ற அபிவிருத்திக்கு இன்றியமையாத துறைகளின் (infrastructure) அபிவிருத்தி, இறுதியாக நீண்டகால அபிவிருத்தி திட்டம்.

Photo: Reuters



# மறைந்திருந்து கொல்லும் எதிரி

நிலக்கீழ் கண்ணி வெடிகள் மீளக் குடியேறும் மக்களுக்குப் பிரதான எதிரியாக மாறிவருகின்றன.

கண்ணிவெடிகள் என்றால் பலர் மனதிற்கு வருவது கம்பூச்சியா, அங்கோலா போன்ற நாடுகள். உள்நாட்டு யுத்தம் முடிந்து பல வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் இந்த மனிதரைத் தாக்கும் நிலக்கீழ் கண்ணிவெடிகள் (anti personal mines) இன்னமும் பல உயிர்களைக் குடித்தும், பலரை முடமாக்கியும் வருகின்றன.

இலங்கையில் தொண்ணூறாம் ஆண்டுகளில் பரவலாக சிதறி விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருவதனை பல உள்ளூர் வெளியூர் மனிதநேய அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

உலகவங்கி மற்றும், கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கான சர்வதேச அமைப்பு (International Campaign to Ban Landmines) ஆகியவற்றின் தரவுகளின்படி சுமார் ஆறு இலட்சம் முதல் 18 இலட்சம் கண்ணிவெடிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றினால் மாதந்தோறும் 15 பேர்வரை காயப்படுவதாக ஐ.நா.சபையின் கண்ணிவெடி அமைப்பு (U.N. Mine Action) கூறுகிறது.



கடந்த வருட இறுதியில் கண்ணிவெடி உபயோகத்தைத் தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு கோரும் பதினொரு இலட்சம் இலங்கையரின் கையொப்பங்கள் அடங்கிய மனுவை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடமும், இலங்கை அரசின் பேச்சு வார்த்தைகளுக்கான தலைவர் கலாநிதி ஜி. எல். பீரிஸிடமும் இலங்கையிலும் கண்ணிவெடிகளைத் தடைசெய்யக் கோரும் அமைப்பு கையளித்திருந்தது.

தற்போது உள்ளூர், வெளியூர் அமைப்புக்களினால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.





# Niru BRAND®

'நிரு' தயாரிப்புக்கள்'

கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

## No.1

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

## தரம்
## No. 1

Manufacturers & Distributors of
Niru Brand® Products

**NIRU ENTERPRISES INC.**
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com

# வேகம்... வேகம்... வேகம்...

கணினித்துறையில் வேகம் முக்கியம். அதாவது cpu வினால் ஒரு செக்கனில் எத்தனை இலட்சம் கணிப்புகளைச் செய்ய முடியும் என்பது ஒரு கணினியில் செயற்திறனை, சக்தியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று. நாம் இன்று உபயோகிக்கும் கணினிகள் ஆரம்ப கால கணினிகளை விட பன்மடங்கு சக்தி வாய்ந்தவையாக இருந்தாலும் கூட, ஒரு செக்கனில் கோடிக்கணக்கான கணிப்புகளைச் செய்யக் கூடிய அதி சக்தி கணினிகளை (super computers) அரசாங்கங்கள் மட்டுமே வைத்திருக்கின்றன. அதிலும், மேலைத்தேய நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில், உற்பத்தி செய்யப்படும் இக் கணினிகளை தனது நட்பு நாடுகளுக்கு மட்டுமே அமெரிக்க அரசாங்கம் விற்பனை செய்ய இடமளித்திருக்கிறது.

கடந்த வருடம் அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு ஓர் அதிர்ச்சி தரும் செய்தி கிடைத்தது. அதாவது உலகின் மிகவும் சக்திவாய்ந்த கணினியை உடையவர் என்ற பெருமையை ஜப்பானிய அரசாங்கம் தட்டிச் சென்றது தான் இச் செய்தி.

ஜப்பானிய அரச அனுசரணையுடன் நடத்தப்படும் Earth Simulator Center (ESC) பாவிக்கும் இந்த அதி சக்தி கணினி ஒரு செக்கனில் 3,560 கோடி (35,600 மில்லியன்) கணிப்புகளைச் செய்ய வல்லது. அமெரிக்காவிலுள்ள உலகின் இரண்டாவது அதிசக்தி கணினியைவிட இக் கணினி ஐந்து மடங்கு சக்தி வாய்ந்தது மட்டுமல்ல, அமெரிக்காவிலுள்ள அதி சக்தி வாய்ந்த ஐந்து கணினிகளின் மொத்த சக்தியை விட ESCஇற்கு சக்தி அதிகம்.

**அமெரிக்காவிலுள்ள உலகின் இரண்டாவது அதிசக்தி கணினியைவிட இக் கணினி ஐந்து மடங்கு சக்தி வாய்ந்தது மட்டுமல்ல, அமெரிக்காவிலுள்ள அதி சக்தி வாய்ந்த ஐந்து கணினிகளின் மொத்த சக்தியை விட ESCஇற்கு சக்தி அதிகம்.**





Photo: ESC

இந்த கற்பனைக்கு அப்பாற்பட்ட சக்தியைக் கொண்டு ஜப்பானிய விஞ்ஞானிகள் கடல் வெப்பநிலை மாறுதல், மழைவீழ்ச்சி, இயற்கை அழிவுகள் போன்றவற்றைத் துல்லியமாக அளவிடவுள்ளனர்.

கடல்நீரின் வெப்பநிலை மாறுதல் மற்றும் ஆழ் சமுத்திர நீரோட்டம் போன்ற மிகவும் சிக்கல் வாய்ந்த இயற்கை சக்திகளை அளவிடுவது என்பது இதுவரை காலமும் இயங்கி வந்த அதி சக்தி கணினிகளுக்குக் கூட கடினமாயிருந்துள்ளது.

இந்தக் கணினியின் சக்தியைக் கொண்டு எரிமலை வெடிப்புகளைக் கூட கட்டியம் கூறமுடியும். ஆனால் பூமியதிர்ச்சி இடம்பெறவிருக்கும் மையங்களை இதனால் கண்டுபிடிக்க முடியுமாயினும், எப்போது பூமி அதிரும் என்பது இக் கணினிக்கும் அப்பாற்பட்ட விடயம் என ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செய்மதிகள் மூலமும், வேறு வழிகள் மூலமும் பெறப்படும் புகைப்படங்கள் போன்ற தரவுகளை ஆராய்ந்தே இக் கணினிகள் தமது முடிவுகளை தெரிவிக்கும். இதில் கடினமான விடயம் சிக்கலும் கடினமும் நிறைந்த இத் தரவுகளை ஆராய்வது தான்.

இந்த ஜப்பானிய அதி சக்தி கணினி ESCகட்டிடத்தின் நான்காவது தளத்தில் நிறுவப்பட்டுள்ளது. மூன்றாவது தளம் முழுவதும் இக் கணினி செவ்வனே இயங்குவதற்குத் தேவையான சுமார் 3,000 கி.மீ. நீளமான மின்கம்பிகள் (wire) உள்ளன. அதற்குக் கீழுள்ள தளங்களில் இக் கணினியில் சூட்டைத் தணிப்பதற்கான பாரிய குளிரூட்டிச் சாதனங்களும், கணினி இயங்குவதற்கான மின்சார உபகரணங்களும் உள்ளன.

**உலகின் 10 அதிசக்தி கணினிகள்**

| இடம் | நாடு | கணிப்புச் சக்தி (கோடிக்கணிப்புகள்/செக்கன்) |
|---|---|---|
| 1 | ஜப்பான் | 3560 |
| 2 | அமெரிக்கா | 772 |
| 3 | அமெரிக்கா | 772 |
| 4 | அமெரிக்கா | 722 |
| 5 | அமெரிக்கா | 570 |
| 6 | அமெரிக்கா | 447 |
| 7 | பிரான்ஸ் | 398 |
| 8 | அமெரிக்கா | 334 |
| 9 | இங்கிலாந்து | 324 |
| 10 | அமெரிக்கா | 316 |

# இலத்திரன்

## சி. விமலநாதன்

இன்று நாம் வாழும் இவ்வுலகம் இலத்திரன் உலகம் எனக் கூறினால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு நமது வாழ்க்கையில் இலத்திரன் பங்களிக்கிறது. என்று மனிதன் இலத்திரனை சரியாக இனம் கண்டு கொண்டானோ அன்றில் இருந்து உலகமானது மிகத் துரித கதியில் வளர்ச்சியடையத் தொடங்கிவிட்டது: இன்னமும் வளர்கின்றது. இன்று நாம் பாவிக்கும் அத்தனை பொருட்களிலுமே இலத்திரனின் செயற்பாடு உள்ளதென்றே கூறிவிடலாம்.

### இலத்திரன் என்றால் என்ன?

இலத்திரன் என்பது அணுவின் அடிப்படைத் துகள்களில் ஒன்று. இது அணுக் கருவைச் சுற்றி பல்வேறு ஒழுக்குகளில் தனித்தனியாக அணுக் கருவை வலம் வருகின்றது. அணுவினுள் இருக்கும் வரை இலத்திரன் சாது என்றுதான் சொல்ல வேண்டும். அணுவில் உள்ள சில இலத்திரன்கள் சில சமயங்களில் அணுவை விட்டு வெளியே வருகின்றன. இவற்றைச் சுயாதீன இலத்திரன்கள் என்பர். இப்படி வெளிவருகையில் பெருமளவு சக்தியையும் கொண்டு வருகின்றது. இவ் இலத்திரன்களே மனிதகுலத்திற்கு உதவியாக (சில சமயங்களில் உபத்திரவமாக) இருக்கின்றன. இயல்பாகவே எதிர் ஏற்றம் கொண்ட இலத்திரன்களை சக்தியைக் காவும் துகள்கள் என்று கூறுவோம்.

### இலத்திரனின் செயற்பாடு

இலத்திரனின் செயற்பாடு இரண்டு வகைகளில் காணப்படுகிறது. ஒன்று இலத்திரன்கள் ஒன்றாகச் சேர்ந்திருந்து செயற்படுவது; இதனை நிலைமின்னியல் என்போம். மற்றையது இலத்திரன்களின் தொடர்ச்சியான ஓட்டம் காரணமாக ஏற்படுவது; இதனை ஓட்டமின்னியல் என்போம். இவையிரண்டையும் சேர்த்து மின்னியல் என்போம்.

### நிலைமின்னியல்

இங்கு பல இலத்திரன்கள் ஒன்றாகத் திரண்டு இருப்பதால் பெருமளவு சக்தி ஒரே இடத்தில் தேங்கிக் காணப்படும். இச் சக்தியினை சரியான முறையில் கையாள்வதன் மூலம் இலத்திரனின் பயனை நாம் சரியாகப் பெறலாம். எதிர் ஏற்றம் பெற்ற இலத்திரன்கள் நிலையாக நிற்கும் போது அவற்றைச் சுற்றி வலிமையான மின்புலம் தோன்றுகின்றது. இம் மின்புலம் ஆபத்தானதாகக் கூட அமையலாம். இயற்கையில் நாம் அனுபவிக்கும் (நிலை மின்) இலத்திரன் தாக்கங்களில் இடி-மின்னல் பிரசித்தமானது. முகிற்கூட்டம் ஒன்றில் சேகரிக்கப்பட்ட பெரும் தொகை இலத்திரன்கள் தமக்கு அருகில் உள்ள இன்னொரு முகிற் கூட்டத்திற்கோ அல்லது நமது புவியிற்கோ பாய்கின்றன. இவ்விதம் பாய்கையில் பெருமளவு சக்தியை வெளிவிட அச்சக்தி மின்னலாகவும் இடிமுழக்கமாகவும் வெப்பமாகவும் மாறுகின்றது.

### ஓட்ட மின்னியல்

இலத்திரன்கள் தகுந்த ஊடகம் ஒன்றின் ஊடாக ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு பாய்ந்து செல்லக் கூடியன. இதனையே நாம் மின்னோட்டம் என்கின்றோம். கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் இலத்திரன் பாய்ந்து செல்வதனால் மிக விரைவிலே இலத்திரன் மூலமாக சக்தியை இடம் மாற்ற முடியும்.

ஊடகம் ஒன்றின் ஊடாக பாய்ந்து வரும் இலத்திரன்களுக்கு தகுந்த தடுப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் சக்தியைப் பெறமுடியும். இம் முறையை பயன்படுத்தியே நாம் அதிக அளவு சக்தியைப் பெறுகின்றோம். நாம் பாவிக்கும் சகல மின்சாதனப் பொருட்களுக்கும் (மின்) சக்தியானது இவ்விதம் வழங்கப்படுகிறது.

நிலையாக உள்ள இலத்திரனைச் சுற்றி மின்புலம் இருப்பது போல் ஓடுகின்ற இலத்திரனைச் சுற்றி காந்தப்புலம் ஒன்று காணப்படும்.

இன்று உலகிற்கு அதிக அளவில் பயனாகவுள்ள இலத்திரன் பற்றி கொஞ்சமேனும் அறிந்திருத்தல் அவசியம் அல்லவா!



சி. விமலநாதன் (கனிமாஸ்டர்) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெற்றவர். கடந்த பத்து வருடங்களாக வானொலிகளிலும் கடந்த நான்கு வருடங்களாக 'விளம்பரம்' பத்திரிகையிலும் முறையே 'சிந்துவெளி நாகரிகம்', 'விண்வெளி', மற்றும் 'விஞ்ஞான ஆய்வு' விவரணங்கள் செய்து வருகின்றார்.



## பெரியதும் சிறியதும்...

அப்பிள் கணினி நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ள இரண்டு லப்ரொப் கணினிகள். இடது புறமுள்ளது உலகின் மிகச் சிறிய, சகல வசதிகளுமுடைய லப்ரொப் கணனி எனக் கூறப்படும் இது 12.1" கணினித் திரையுடன் கூடியது. இரண்டாவதாக இருப்பது 17" திரையுடன் கூடியது. உலகின் பெரிய திரையுடன் கூடிய லப்ரொப் கணினி என நம்பப்படுகிறது. இதில் DVD களை எழுதக் கூடிய வசதியுமுள்ளது. இதிலுள்ள விசைப்பலகை புறச் சூழல் இருளாகத் தொடங்கும்போது தாமாகவே ஒளிரத் தொடங்கும். முற்றிலும் இருளான இடமொன்றிலும் இவற்றைப் பாவிக்கலாம். பிரபலமாகி வரும் Bluetooth தொழில்நுட்பத்தினூடாக அண்மையிலுள்ள Bluetooth கருவி ஒன்றுடன் (கைத்தொலைபேசி, Pocket PC, Palm) இவை தொடர்புகொள்ளவும் கூடியவை.

# உலகின் மோசமான இணையத் தணிக்கை....

இந்தப் பெருமை சீனாவைச் சாரும். வளர்முக நாடுதானென்றாலும், அதி நவீன தொழில்நுட்பத்தைப் பாவித்து அரசாங்கத்தின் கொள்கைகளையும், கம்யூனிசத்தையும் பாதிக்கும் உள்ளடக்கத்தைக் கொண்ட இணையத் தளங்களை சீன மக்களின் பார்வையிலிருந்து மறைப்பதில் சீன அரசு சாதனை புரிந்து வருகிறது.

இந்த முடிவுக்கு பிரசித்தி பெற்ற ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரி வந்துள்ளது.

ஆறுமாத காலமாக சீனாவின் பல பாகங்களிலுமிருந்து நடத்தப்பட்ட ஆய்வின் பின்னரேயே சட்டக் கல்லூரி இம் முடிவுக்கு வந்துள்ளது. இந்த ஆய்வுக்கென சுமார் இரண்டு இலட்சம் இணையத் தளங்கள் சீனாவிலிருந்து அணுகப்பட்டன. இவற்றில் சுமார் 50,000 தளங்கள் - அதாவது 25 சதவீதமானவை - நிரந்தரமாகவோ அல்லது அவ்வப் போதோ தணிக்கை செய்யப்பட்டன. இவற்றில் ஜனநாயகம், தாய்வான், தீபெத் சம்பந்தப்பட்ட செய்தித் தளங்கள் மட்டுமன்றி கல்வி மற்றும் சமய தளங்களும் அடங்கும். சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), Human Rights Watch ஆகியவற்றின் இணையத் தளங்களும் தணிக்கை செய்யப்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் இன்னுமொரு படிமேலே போய், இணையத் தளங்களை பாவனையாளர் உபயோகித்து / வாசித்துக் கொண்டிருக்கும் போதே தணிக்கை செய்யுமளவிற்கு சீன அரசின் தொழில்நுட்பம் வளர்ந்து விட்டதாக ஹார்வார்ட் சட்டக் கல்லூரி கூறுகிறது. உதாரணமாக, ஒருவர், சர்ச்சைக்குரிய இணையத் தளச் செய்தியை வாசித்துக் கொண்டிருக்கையிலேயே, அத்தளத்திலுள்ள இணைப்புகளை - அதாவது அங்கிருந்து சம்பந்தப்பட்ட ஏனைய தளங்களுக்கு வாசகர்களை அழைத்துச் செல்லும் links - சீன அரசின் தணிக்கையாளர்கள் அழித்து விடுகின்றனர். அதே நேரம் தணிக்கை செய்யப்பட்ட தளங்களை அணுகுபவர்களுக்குத் தண்டனையாக அவர்கள் இணையத்தை பாவிப்பதிலிருந்து தடை செய்வதிலும் சீன அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

எனினும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பாலியல் சம்பந்தப்பட்ட தளங்களில் 15 சதவீதமானவற்றைத் தான் சீனா தணிக்கை செய்துள்ளது. இணையத் தணிக்கையில் ஆர்வம் காட்டும் இன்னொரு நாடான சவூதி அரேபியாவிலோ 85 சதவீதமான பாலியல் தளங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன.

# இதேவேளை அமெரிக்காவில்....



சீனாவின் இணையத் தணிக்கை மற்றும் கட்டுப்பாடுகளைக் குறைகூறும் அமெரிக்காவின் புஷ் அரசாங்கம் இணையத்தை அவதானிக்கவென புதியதொரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. நகலாக மட்டுமே அறிமுகம் செய்யப்பட்டுள்ள இத் திட்டம் இணையத்தையும், இணையத்தைப் பாவிப்பவர்களையும் அவதானிக்கும் அதிகாரத்தை வெள்ளை மாளிகைக்கு வழங்குகின்றது.

அமெரிக்க காங்கிரஸ் இந் நகலை அங்கீகரிக்கும் பட்சத்தில், தேசிய இணைவலை கட்டுப்பாட்டு நிலையமொன்று நிறுவப்பட்டு, அதன் மூலம் "சந்தேகத்துக்கிடமான" நடவடிக்கைகள் அவதானிக்கப்படும் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கணினித் தொகுதிகளைத் தாக்கும் வைரஸ்களும், பயங்கரவாத நடவடிக்கைகளும் இணையம் மூலம் திட்டமிடப்படும் பட்சத்தில் அவற்றை முன் கூட்டியே அறிந்து பாதுகாத்துக் கொள்ளல் இந்தப் புதிய இணைய கட்டுப்பாட்டு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மின்அஞ்சல் போன்ற இணையச்சேவைகளை வழங்கும் இணையச்சேவை வழங்குபவர்கள் (Internet Service Providers) தமது ஆளுமைக்குட்பட்ட பகுதியை மட்டுமே கவனிக்க முடிகிறது. உலகளாவிய ரீதியில் பரிமாணித்திருக்கும் இணைய வலையை ஒட்டுமொத்த ரீதியில் நோக்கும் வல்லமை படைத்த நிறுவனமோ, தனிமனிதரோ இல்லை.

இதனால் வைரஸ் போன்ற தாக்குதல்கள் நடத்தப்படும் பட்சத்தில் ISP மற்றும் அரசாங்கங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் காலங் கடந்த பின்னரேயே நிலைமை விளங்குகிறது என சிரேஷ்ட வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் ஜனாபதி ஜோர்ஜ் புஷ்ஷின் புதிய திட்டத்திற்கான தேவை பற்றி விளக்குகையில் தெரிவித்தார். இணையத்தில் கருத்துச் சுதந்திரத்திற்காக வாதாடும் பல அமைப்புகள் இத் திட்ட-த்திற்கெதிராகப் போர்க் கொடி தூக்கியுள்ளன.

இணையத்தின் மூலம் நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்க வேண்டுமெனின் இணையப் பாவனையாளர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கக் கூடிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு பாவிக்கப்பட வேண்டும். இது "நியாயமான கட்டுப்பாட்டு நடவடிக்கை" என்ற நிலையை மீறி புலனாய்வு நடவடிக்கையாக மாறி பாவனையாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகி விடும் என்று இந்த அமைப்புகள் மட்டுமன்றி பல ISP களும் கருதுகின்றன. அத்துடன் இத் தொழில்நுட்பம் துஷ்பிரயோகம் செய்யப்படும் வாய்ப்பும் உண்டு எனப் பலர் கரிசனம் தெரிவித்துள்ளனர்.

....




# இந்திய எச்சில் திருட்டு

இந்தியரின் எச்சிலை இந்திய அரசின் அனுமதியின்றி ஐரோப்பாவுக்குக் கொண்டு போனது பற்றி இந்திய விஞ்ஞானிகள் கரிசனம் தெரிவித்துள்ளனர்.

பிரசித்தி பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழகமும் ஜேர்மனியின் முன்ஸ்டர் பல்கலைக்கழகமும் தான் இந்த 'எச்சில் திருட்டுத்தனத்தில்' ஈடுபட்டதாக சிரேஷ்ட இந்திய விஞ்ஞானியொ-ருவர் சர்வதேச விஞ்ஞான சஞ்சிகை ஒன்றிற்குத் தெரிவித்தார்.

நாம் அனைவரும் இயற்கை கதிரியக்கத்தின் மத்தியில் வாழ்ந்து வருகிறோம். எனினும் உலகின் சில பாகங்களில், குறிப்பாக கேரள மாநிலத்தின் சில கரையோரப்பகுதிகளில் வாழ்வோர், அப்பிரதேசங்களில் காணப்படும் உயர்ந்த இயற்கைக் கதிரியக்கத்தின் மத்தியில் வாழ்கின்றனர். அந்தக் கரையோரத்தில் காண-ப்படும் தோரியம் நிறைந்த மணலே இதற்குக் காரணம். இந்த உயர்ந்த (இயற்கைக்) கதிரியக்கம் மனிதரில் ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராயவே இரு ஐரோப்பிய பல்கலைக்கழக-ங்களும் 988 கரையோர வாசிகளின் எச்சிலின் மரபணுக்களை (DNA) ஆராய்ந்தனர்.



எச்சிலை வழங்கிய தொண்டர்களினதும், கேம்பிறிட்ஜ் பல்கலைகழக அறக் (ethics) குழுவினதும் அனுமதியின் பின்னரேயே இந்த எச்சில் தொகுதி ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் மக்டொனால்ட் கல்லூரி (Mcdonald Institute)யைச் சேர்ந்த கலாநிதி பீட்டர் பொஸ்ரர் தெரிவித்தார். அத்துடன் இந்த ஆய்வின் முடிவுகள் வியாபார நோக்குக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் ஓய்வுபெற்ற விஞ்ஞானியான கலாநிதி பவான் சௌஹான் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியச் சட்டங்களுக்கு அமைய, இந்திய அரசின் அனுமதி பெற்றே இத்தகைய மாதிரிகள் நாட்டை விட்டுக் கொண்டு செல்-லப்படலாம் எனத் தெரிவித்தார்.

இந்தியாவில் பல இனக் குழுமங்கள் வாழ்வதால் இக் குழுமங்களைச் சேர்ந்த மக்கள் வியாபார நோக்குடன் நடத்தப்படும் ஆய்வு-களுக்குப் பயன்படுத்தப்படலாம் என இந்திய விஞ்ஞானிகள் கரிசனை கொண்டுள்ளனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய அரசினால் அமுலாக்கப்பட்ட சட்டத்தின்படி, உயிரியல் மாதிரிகள் மத்திய சுகாதார அமைச்சின் உத்தரவுடனேயே வெளியே கொண்டு செல்லப்படலாம். எனினும் இச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதற்கு நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதை இச்சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது எனவும் இந்திய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சிவ ஞானநாயகன்

# இலக்கினம் (Ascendant) என்றால் என்ன?

ஒரு சாதகத்தில் (Birth Chart) ஒருவர் பிறக்கும் போது அக் கணத்தில் ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி (சுக்கிரன்), சனி மற்றும் இராகு (North Node), கேது (South Node) ஆகிய ஒன்பதும் வானசாத்திரப்படி நிற்கின்ற இடங்கள் குறிக்கப்படுகின்றன.

இந்த ஒன்பது கிரகங்களும் வானவீதியில் பூமி நிற்கும் இடத்தில் தங்கியிராமல் சுயாதீனமாக சுற்றுகின்றன. இதனால் ஒரு சாதகத்தில் இவை ஒன்பதும் நிற்கும் இடங்கள் பூமியில் ஒருவர் பிறந்த இடத்தில் (நாடு) தங்கியிருக்காது. அதாவது ஒரு குறிப்பிட்ட கணத்தில் பூமியில் எந்த இடத்தில் ஒருவர் பிறந்திருந்தாலும் இவை ஒன்பதும் வானத்தில் நிற்கும் இடங்கள் ஒன்றாகவே இருக்கும். எனவே இந்த ஒன்பது கிரகங்களும் ஒரு சாதகத்தில் நிற்கும் இடங்கள் ஒருவர் பிறந்த நேரத்தில் மட்டுமே தங்கியிருக்கும். அவர் பிறந்த இடத்தில், தங்கியிராது.


இந்த ஒன்பது கிரகங்கள் நிற்கும் இடங்களை கணிப்பதும் இலகுவானது. பல புத்தகங்களில் (பஞ்சாங்கங்கள், Ephemeris) இவை ஒவ்வொன்றும் நிற்கும் இடங்கள் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் கணித்து வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய ஒன்பது கிரகங்களையும் விட இன்னும் ஒன்று சாதகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் அவதானித்திருக்கலாம். அது இலக்கினம் (Ascendant) ஆகும். இந்த இலக்கினம் சாதகத்தில் இருக்குமிடம் பூமியின் இடத்திற்கு இடம் வேறுபடும். ஒருவர் பிறந்த நேரம், பிறந்த இடத்தின் அகலக்கோடு (Latitude), நெடுங்கோடு (Longitude) என்பன தெரிந்தாலே இதை கணிக்க முடியும்.

## இலக்கினம் என்றால் என்ன?

இலக்கினம் என்பது ஒருவர் பிறக்கின்ற நேரத்தில் அவர் பிறந்த இடத்தில் கீழ்வானமும் (Eastern Horizon) பூமி சூரியனை சுற்றும் பாதையின் தளமும் (Ecliptic) வெட்டும் புள்ளி (Point) ஆகும். இதை வேறு விதமாக சற்று இலகுவாக சொல்லுவதானால் ஒருவர் பிறக்கின்ற நேரத்தில் உதிக்கின்ற இராசி (Rising Sign) என்றும் கூறலாம். உண்மையில் இலக்கினம் என்பது முதலில் கூறியது போல் ஒரு புள்ளி (Point) ஆகும். ஆனால் இந்த புள்ளி நிற்கின்ற இராசியை (Zodiac Sign)யே ஒருவர் பிறந்த இலக்கினம் என்று கூறுவார்கள். உதாரணமாக சூரியன் உதிக்கும் போது பிறந்த ஒருவரின் சாதகத்தில் சூரியனும் இலக்கினமும் ஒரே இராசியில் இருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

ஒரு சாதகத்தில் இலக்கினம் இருக்கும் இடத்தை (Zodiac Sign) முதலாவதாக கொண்டே வீடுகள் (First House) எண்ணப்படுகின்றன.




ஒருவர் பிறந்த இடத்தின் அகலக்கோடு (Latitude) நெடுங்கோடு (Longitude) கள் தெரியாமல் ஒரு சாதகம் கணிக்கப்பட்டிருந்தால் அது தவறாகும். இக்கணிப்பை இலகுவாக்குவதற்காக பஞ்சாங்கங்கள் ஒவ்வொரு இடத்திற்கு (இலங்கை, மலேசியா, ரொரன்ரோ) ஏற்ப கணித்து வெளியிடப்படுகின்றன.

உ+ம்


ரொரன்ரோவிற்கு என கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தில் ரொரன்ரோவில் பிறக்கும் பிள்ளைகளுக்கு இலகுவாக (Longitude, Latitude இல்லாமல்) இலக்கினம் கணிக்க முடியும். ஆனால் இதே பஞ்சாங்கத்தை உபயோகித்து வேறு ஓர் இடத்தில் (அல்பேட்டாவில்) பிறந்த ஒருவருக்கு சாதகம் கணிக்கும் போது அவர் பிறந்த இடத்தின் Longitude உம் Latitude உம் தேவை. இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், ரொறன்ரோவிற்கெனக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தை ரொரன்ரோவைவிட மற்றைய கனடாவில் உள்ள இடங்களுக்குப் பாவிப்பதற்கு அவர்கள் பிறந்த இடத்தின் அகல, நெடுங்கோடுகளின் பாகைகள் தேவை.

ஒரு சாதகம் என்பது ஒருவர் பிறக்கும் போது மேற்கூறிய பத்தும் வானசாத்திரப்படி விண்வெளியில் நிற்கும் இடங்களாகும். இவற்றை கணிப்பதற்கு ஒருவர் பிறந்த நேரமும், அவர் பிறந்த இடத்தின் அகல, நெடுங்கோடுகளின் பாகைகளும் முக்கியமாகும்.

ஒருவருடைய சாதகம் என்பது முற்றுமுழுதாக விஞ்ஞான முறையில் கணிக்கப்பட்ட கிரகங்களின் நிலை குறித்த ஓர் அட்டவணை ஒன்று என்பதனை தற்போது நீங்கள் விளங்கிக் கொண்டு இருப்பீர்கள்.



*சிவ ஞானநாயகன், M.Sc., P.Eng. இவர் கனடாவின் Georgian College இல் Astrology கற்றவர்.*



# உலகின் மொழிகள் சொல்லும் சோகங்கள்

அனா நெல்சன் ஹரி 83 வயதான மாது. அவர் கதைக்கையில் குரல் தழுதழுக்கிறது. அவரது சோகத்திற்குக் காரணமில்லாமலில்லை. ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கும் இம் மாது மூவாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த ஒரு மொழியின் இறுதி ஆவணம். இவர் மாண்டு விட்டால், எயாக் (Eyak) என்ற இந்த அலஸ்கா பூர்வீக மொழியை சரளமாகப் பேசுபவர் இவ்வுலகிலேயே இல்லாமல் போய் விடுவார்.

*தென் மத்திய அலஸ்காவில் எயாக் ஒரு கரையோரக் கிராமம். இக் கிராமத்தின் குடிகள் எயாக் பூர்வீக மக்கள். இன்று அமெரிக்காவில் வாழும் 100இற்கு மேற்பட்ட எயாக் மக்களில் 50இக்கும் குறைவானோரே தமது தாய்மொழியை கொஞ்சமாவது பேசத் தெரிந்தவர்கள். திருமதி நெல்சன் ஹரிக்கு மட்டுந்தான் சரளமாகப் பேசத்தெரியும்.*

*மொழியியலாளர்களினதும், ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம், கலாசார அமைப்பின் (யுனெஸ்கோ - UNESCO)*

இ. செந்தில்நாதன்

கருத்துப்படி எயாக் மொழி இன்று எதிர் நோக்கும் பிரச்சினை அம் மொழிக்கென தனித்துவமானதல்ல.

இவ்வுலகில் இன்று பேசப்படும் 6,000இற்கும் 7,000இற்கும் இடைப்பட்ட மொழிகளில் 50வீதமானவை மறைந்து போகும் நிலையிலுள்ளன என அவர்கள் அஞ்சுகின்றனர்.

பூமிக்கும் சந்திரனுக்குமிடையிலான தூரத்தை அளந்த மனிதரின் விஞ்ஞான திறமையால், அணுவைப் பிளக்கத் தெரிந்த மனிதரால், தமது சக மனிதரால் பேசப்படும் மொழிகளின் சரியான எண்ணிக்கையை உத்தியோகபூர்வமாக அளவிட முடியாதது, இப் பிரச்சினையை அளந்து காட்டுகிறது. இதுவரையில், அமெரிக்காவிலுள்ள SIL என்ற அமைப்பு மட்டுமே உலகில் பேசப்படும் மொழிகளின் தொகை 6809 எனக் கூறுகிறது.

நமக்குத் தெரிந்தது என்னவென்றால் காலம் காலமாக பேசப்பட்டு வந்த பல மொழிகள் மறைகின்றன என்பது தான். எயாக்கைப் போன்று, ஆபிரிக்க நாடான கமரூனில் பிக்யா என்ற மொழியை நன்றாக பேசக் கூடியவர் ஒருவர்தான் உள்ளார். இன்னும் மூவருக்கு இம்மொழி ஓரளவு பேசத் தெரியும். அதேபோல் வட கனடிய மாகாணமான யூகோனின் (Yukon) தென்பகுதியில் உள்ள சுமார் 400 பேரடங்கிய தாகிஷ் (Tagish) இன பூர்வீகக் குடிகளில் இருவருக்கே அம்மொழியை நன்றாகப் பேசமுடியும்.

உலகில் பேசப்படும் மொழிகளை அட்டவணைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அமைப்பான SIL இன் கணிப்புப்படி, உலகில் பேசப்படும் 6809 மொழிகளில் 52 வீதமானவை ஆசியாவிலும் (ரஷ்யா, மத்திய ஆசியா, இஸ்ரேல், மத்திய கிழக்கு ஆகிய உப பிராந்தியங்களை உள்ளடக்கிய பிரதேசம்) பசுபிக் பிராந்தியத்திலுமே பேசப்படுகின்றன. ஆபிரிக்காவில் 2058 மொழிகளும் (30%), வட, தென் அமெரிக்காவில் 1,013 மொழிகளும் (15%), ஐரோப்பாவில் 230 (3%) மொழிகளும் பேசப்படுகின்றன.

மிக அதிகமான மொழிகளைக் கொண்ட நாடு என்ற பெருமை பபுவா நியுகினி (Papua New Guinea)யைச் சேரும். இந்த ஒரு நாட்டில் மட்டும் 820 மொழிகள் பேசப்படுகின்றன.

**ஒவ்வொரு வருடமும் பத்து மொழிகள் வரை அழிகின்றன. ஒரு மொழி வாழ்வதற்கு அம் மொழியைப் பேசுவதற்குக் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள் இருக்க வேண்டும்**

## மறையும் கலாசாரங்கள்

உலக சரித்திரத்தில் பல்வேறு மொழிகளின் ஆதிக்கம் காணப்பட்டிருந்தாலும் இலத்தீன், தமிழ், அரபு, சீனம், கிரேக்கம் போன்ற ஒரு சில மொழிகள் தான் கடந்த 2000 வருடங்களுக்கு மேலாக நிலைத்திருக்கின்றன.

உலகின் சரித்திரத்தில் இதுவரை காலமும் எத்தனை மொழிகள் தோன்றின என்பது எக்காலத்திலும் கணிப்பிடக் கூடிய வாய்ப்பு வருமா என்பது கேள்விக் குறியே.

அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகளினால் (aboriginals) பேசப்பட்ட மொழிகளில் ஒன்றான ஜிவார்லி (Jiwarli)யைப் பேசிய கடைசிக் குடிமகன் 1976ஆம் ஆண்டில் இறந்து விட்டார். SIL அமைப்பின் தகவல்களின் படி இலங்கையிலும் இந்தோ-போர்த்துக்கேய மொழி, இலங்கை-மலாயன் கிறியோல் (Sri Lankan Malay Creole) மற்றும் வேடர்களின் தாய்மொழி ஆகியவை அழியும் தறுவாயில் உள்ளன.

மிக விரைவில் அழிந்து விடக்கூடிய அபாயமுள்ள மொழிகளில் பெரும்பாலானவை (157 மொழிகள்) அவுஸ்திரேலியாவை உள்ளடக்கிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ளன. வட, தென் அமெரிக்காவில் 160 மொழிகளும், ஆசியாவில் 55 மொழிகளும் (இவற்றில் நான்கு இந்தியாவில்), ஆபிரிக்காவில் 37 மொழிகளும், ஐரோப்பாவில் ஏழு மொழிகளும் உள்ளன என இவ் அமைப்பு மேலும் கூறுகிறது.

பிரெஞ்சு மொழியியல் வல்லுனரான ரங்கா ஜோச் -பாபிச் இன் கணிப்பின்படி, ஒவ்வொரு வருடமும் பத்து மொழிகள் வரை அழிகின்றன. ஒரு மொழி வாழ்வதற்கு அம் மொழியைப் பேசுவதற்குக் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள் இருக்க வேண்டும் என புவாரியே பல்கலைக்கழகத்தினைச் (University of Poitiers) சேர்ந்த இந்த அறிஞர் யுனெஸ்கோ சஞ்சிகை ஒன்றில் வரைந்த கட்டுரையில் தெரிவித்தார். அதே போன்று ஒரு சமூகத்தின் பிள்ளைகளில் குறைந்தது முப்பது சதவீதமானோராவது அச் சமூகத்தில் தாய்மொழியைப் பேசாவிடின் அம்மொழி மறையும் பாதையில் செல்வதாகக் கொள்ளலாம் எனவும் மொழியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## அழிவின் காரணங்கள்

ஒரு மொழியின் அழிவுக்கு காரணங்கள் என்ன?

இனக் குழுமங்களிடையிலான போர்களும் அதனால் ஏற்படும் இனப்படுகொலைகளும் மட்டுமல்ல, குழுமங்களிடையே இடம்பெறும் கலப்பு மணம், இதனால் தோன்றும் வாரிசுகள் ஒரு மொழியை விட்டு இன்னுமொரு மொழியைப் பேசுதல் ஆகியவையும் காலம் காலமாக மொழிகளின் வளர்ச்சிக்கெதிராக செயற்பட்டு வருகின்றன. ஆனால் இவையெல்லாவற்றையும் விட 15ஆம் நூற்றாண்டு முதல் இடம்பெற்ற காலனித்துவ ஆட்சி முறை பூர்வீகக் குடிகளின் பண்பாட்டுக்கு சாவுமணி அடிப்பவையாக அமைந்தன என்றால் அது மிகையாகாது. உதாரணமாக பிறேசில் நாட்டில் பேசப்படும் 700இற்கு மேற்பட்ட மொழிகளில் 75 சதவீதமானவை 153ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் அழிந்துபோயின. அதேபோல் அவுஸ்திரேலியாவில் 18ஆம் நூற்றாண்டில் பேசப்பட்ட சுமார் 250 மொழிகளில் தற்போது எஞ்சியிருப்பவை 20 மட்டும் தான்.

**உலகின் மொழிகள்**

| | |
|---|---|
| ஆசியா | 2,197 (32%) |
| ஆபிரிக்கா | 2,058 (30%) |
| பசுபிக் | 1,358 (20%) |
| அமெரிக்கா | 1,013 (15%) |
| ஐரோப்பா | 230 (3%) |
| மொத்தம் | 6,856 |

மொழிகள் அழிந்து போவதற்கு இன்னொரு காரணி 19, 20ஆம் நூற்றாண்டுகளில் வலுப்பெற்ற தேசியம் (nation-state) என்ற பதத்தைச் சார்ந்த அரசியற் கொள்கை. தேசிய ஐக்கியத்தையும், இறைமையையும் பாதுகாக்கும் பொருட்டு ஒரு மொழிக் கொள்கைகள் ஆதரிக்கப்பட்டன. இதனால் பொதுவாக நாட்டில் பலம்பெற்ற மொழியைத் தவிர ஏனைய மொழிகள் புறக்கணிக்கப்பட்டன; அல்லது அம்மொழி பேசுபவர்கள் வலுக்கட்டாயமாக தமது மொழியை மறக்க நிர்பந்திக்கப்பட்டனர். உதாரணமாக துருக்கி நாட்டில் வாழும் குர்திஷ் சிறுபான்மையின மக்களின் மொழி, இன உரிமைகளை அந்நாடு ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக "மலைவாழ் துருக்கியர்" என அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.



**பலமொழிகள் அழிந்துவிட்டன. பல அழியும் தறுவாயிலுள்ளன. அதிர்ஷ்ட வசமாக, மொழிகளைக் காப்பாற்றவென சர்வதேச, பிராந்திய, தேசிய ரீதியில் பல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.**

மொழிகள் அழிந்து போவதற்கு மற்றுமொரு காரணி தற்போது பரவலாக விவாதிக்கப்பட்டு வரும் உலக மயமாக்கல் (globalization) மக்களிடையிலான தூரம், நவீன போக்குவரத்து மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலம் குன்றிப் போய்விட்டால் பல்வேறு மொழி பேசும் மக்களும் ஒருவருடனொருவர் தொடர்பு கொள்ள ஒரு பொது மொழியைத் தேடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே உலகை இணைப்பதற்கான மொழி ஒன்று தேவை என பல மேலைத்தேய நாடுகளில் உலவி வந்த கருத்தின் காரணமாக பல செயற்கை மொழிகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் முதலாவது வொலாபக் (Volapuk). எனினும் இன்று வரை ஏதோ ஒருவகையில் நிலைத்து நிற்கும் மொழி எஸ்பரான்தோ (Esperanto).

வொலாபக்கினாலும், எஸ்பரான்தோவினாலும் சாதிக்க முடியாததை ஆங்கில மொழி சாதித்து விட்டது. குறிப்பாக உலகின் இராணுவ பொருளாதார வல்லரசாக அமெரிக்கா இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் வளர்ச்சியுற்றதையடுத்து ஆங்கிலத்தின் ஆட்சி உலகின் எல்லா திக்குகளிலும் கொடி கட்டிப் பறக்கிறது.

மொழி அழிவை வரவேற்காதோரும் இல்லை. ஜோன் மில்லர் என்ற அமெரிக்க வலது சாரி எழுத்தாளர் சில காலத்திற்கு முன்னர் வலது சாரிப் பத்திரிகையான Wall Street Journal இல் எழுதும் போது, மொழிகளின் அழிவில் சமூகங்களிடையிலான நெருங்கிய தொடர்புகளுக்கு இருந்த தடைக்கல் அகல்வதனால் அது வரவேற்கத்தக்கது என்றார். அமெரிக்காவில் வலது சாரி சக்திகளின் கையோங்கும் போதெல்லாம் ஆங்கிலம் மட்டுமே அந் நாட்டின் மொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு மொழி அழிவதனால் ஒரு சிறந்த கலாசாரமே அழிந்து விடுகிறது. பல பூர்வீகக் குடிகள் மூலிகைகளின் உதவியினால் பல நோய்களைக் குணப்படுத்த அறிந்து வைத்துள்ளனர். எழுத்து வடிவில்லாத-தினால், வாய்மொழி வாயிலாகவே தலைமுறை தலைமுறையாக இந்த விஞ்ஞான அறிவு காக்கப்பட்டு வருகின்றது. ஆகவே மருத்துவ அறிவைக் கொண்ட ஒரு பூர்வீகத் தலைமுறை மருத்துவரின் அறிவை விளங்கிக் கொள்ள அச் சமூகத்தின் அடுத்த தலைமுறையினரால் முடியாதெனில் மனித குலத்தைக் காப்பாற்ற-வல்ல அந்த அறிவும் அழிந்து விடும்.

அதுபோல இந்த உலகில் மிகவும் நூதனமான படைப்புகளில் ஒன்றான மூளையின் செயற்பாடுகளை அறிந்து கொள்ளவும் மொழிகள் வழிவகுக்கின்றன என்பது பல மொழியியலாளர்களின் கருத்து.

பல மொழிகளில் ஒரே சொல், வெவ்வேறு அர்த்தங்களுக்காக உபயோகப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, கமரூன், நாட்டில் பேசப்படும் ஷாங் (Dschang) என்ற மொழியில் ஒரு சொல் பத்துவித அர்த்தங்களைக் கொண்டிருக்கும். அந்தச் சொல் உச்சரிக்கப்படுகையில் பேசுபவரின் தொனியைக் கொண்டு மற்றையவரின் மூளை அதன் அர்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளும்.

பலமொழிகள் அழிந்துவிட்டன. பல அழியும் தறுவாயிலுள்ளன. அதிர்ஷ்ட வசமாக, மொழிகளைக் காப்பாற்றவென சர்வதேச, பிராந்திய, தேசிய ரீதியில் பல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.




இவற்றில் முக்கியமானது 2000ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம்

## இலங்கையில் மொழிகள்

| | |
|---|---|
| சிங்களம் | 13.4 மில்லியன் |
| தமிழ் | 3 மில்லியன் |
| ஆங்கிலம் (தாய்மொழியாகக் கொண்டவர்கள்) | 97 ஆயிரம் |
| இலங்கை-மலாயக் கிறியோல் (SriLankan - Malay Creole) | 50,000 |
| இந்தோ - போர்த்துக்கீசம் (Indo-Portuguam) | 30 |
| வேடர் | 300 |

ஆதாரம்: Ethnologue / SIL



21ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தாய்மொழி தினமாகும். யூனெஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இத் தினத்தன்று மொழிகளைக் காப்பாற்றவும், கௌரவிக்கவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட பல ஐரோப்பிய நாடுகள் தமது மொழியை (ஆங்கிலத்திடமிருந்து) பாதுகாக்கவென பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை பிரெஞ்சு மொழி மக்களின் சர்வதேச அமைப்பாகும். இதன் மாநாட்டில் சுமார் 125 மில்லியன் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100 நாடுகள் கலந்து கொள்கின்றன. இதே போன்று டச் மொழி பேசும் மக்கள் அமைப்பு, துருக்கி மொழி பேசும் மக்களின் அமைப்பு, போர்த்துக்கீச மொழி பேசும் மக்களின் அமைப்பு போன்றவை தமது மொழியை ஆதரிக்கும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று வருவதும் தெரிந்ததே.

தேசிய ரீதியில் கனடாவின் பல்கலாசாரக் கொள்கையும், இந்தியாவின் பன்மொழிக் கொள்கையும், பல மொழிகளை அழிந்து போவதிலிருந்து தடுத்துள்ளன.

எனினும் பல சமூகங்களில் அச் சமூகத்தில் தாய் மொழியைப் பேசத் தெரிந்தவர்கள் ஒரு சிலரே இருக்கையில், அவர்களும் முதியோராக இருக்கையில் இந்நூற்றாண்டு அஸ்தமிக்கையில் 6809இல் எத்தனை மொழிகள் மிகுதியாக இருக்கும் என்பது ஒருகேள்விக் குறியே.



இ. செந்தில்நாதன், இலங்கையிலும் ஐரோப்பாவிலும் பத்திரிகையாளராகக் கடமையாற்றிய பின்னர் தற்போது கனடாவில் ஆசிய, சர்வதேச ஊடகங்களுக்கு பணிபுரிகிறார்.

# ஒரு மொழி தந்த ஔடதம்

மொழி சொல்லும் சங்கதிகள் பலவென்பதற்கு நல்ல உதாரணம் மேற்கு சமோவாவில் இருந்த திருமதி பெலா லியோ.

திருமதி லியோவின் மொழி பேசுபவர் தொகை குறைந்து வருகின்றதெனினும் அதிஸ்டவசமாக, ஓர் அமெரிக்க "இனக்குழும- தாவரவியல்" (ethno - botanist) நிபுணரால் மேற்கு சமோவாவில் வாழ்ந்த ஒருவரின் மருத்துவ ஞானம் இன்று இவ்வுலகிற்கு உதவாமற் போவது தடுக்கப்பட்டு விட்டது.

கலாநிதி போல் கொக்ஸ் (Paul Cox) பல்லாண்டு காலமாக அமெரிக்காவிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையில், பிஜி தீவுக்கு கிழக்குப்புறமாக அமைந்துள்ள மேற்கு சமோவாவில் வாழ்ந்தது மட்டுமன்றி, திருமதி லிலோவின் தாய்மொழியையும் நன்கறிந்தவர் ஆவார்.

இவர் காலஞ்சென்ற திருமதி லியோவினதும் அவரைப் போன்ற இன்னொரு பாரம்பரிய மருத்துவரான (traditional healer) திருமதி எபனேசா மௌவிகோ (Epenesa Mauigoa) வினதும் மூலிகை சார்ந்த மருத்துவ ஆற்றலை விளங்கி அவற்றினை எழுத்து வடிவில் கொண்டு வந்தார்.

திருமதி மௌவிகோவை முதன் முறையாகச் சந்தித்தபோது அவருக்கு மூலிகை வைத்தியம் ஏதும் தெரியுமா என்று கலாநிதி கொக்ஸ் கேட்டார். அதற்கு ஆம் 'கொஞ்சம்' தெரியும் என்று கூறினார். ஆனால் திருமதி மௌவிகோவின் கொஞ்சம் என்ற பதத்தின் விளக்கமே வேறு. பல வாரங்களின் பின்னர் கலாநிதி கொக்ஸ் இந்த மருத்துவருடனான தனது கலந்துரையாடலை முடித்துக்கொண்ட போது தொண்ணூறு வகையான தாவரங்களில் இருந்து தனக்குத் தெரிந்த 121 மருந்துகள் பற்றிய விபரங்களை இந்த மாது அவருடன் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்து கொண்ட 37 ஆவது மருந்து கலாநிதி போல் கொக்ஸின் கவனத்தை மிகவும் ஈர்த்தது. ஏனெனில் அது செங்கண்மாரி நோயைத் தீர்க்க வல்ல மருந்து.

அமெரிக்க ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைத் தீவிரமாக்கவும் இந்த மருந்து பயன்படும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இப்போது உலகில் தீவிரமாகப் பரவி வரும் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த இம் மருந்தைப் பாவிப்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. கலாநிதி கொக்ஸின் உந்துதலால் இம் மருந்து வெற்றிகரமாக உபயோகிக்கப்படும் தறுவாயில் கிடைக்கும் வருமானத்தில் 20 சதவீதத்தை மேற்கு சமோவா அரசிடம் ஒப்படைக்க இம்மருந்தைத் தயாரிக்கவுள்ள அமெரிக்க நிறுவனமான Aids Research Alliance உறுதியளித்துள்ளது. அதே போன்று திருமதி லியோவும், திரு. கொக்ஸிற்கு நோய் எதிர்ப்புச் சக்திக்கு உதவும் முக்கியமான மருந்துகள் பற்றிய அறிவைப் பகிர்ந்தார்.



## தமிழர் உலகம்

மலேசியாவில் இந்திய, இலங்கை பாரம்பரிய மரபினரான தமிழர்கள் 1.5 மில்லியன் பேர் நூற்றாண்டாக வாழ்கிறார்கள். தமிழ் நாளேடுகள் மூன்று வெளிவருகின்றன. 73 ஆண்டுகளாக தமிழ்நேசன், மலேசிய நண்பன் மற்றும் தினமுரசு மற்றவை, சங்கமணி, வானம்பாடி, மக்கள் ஓசை ஆகிய மூன்றும் கிழமை ஏடுகள். இதயம், சூரியன் மற்றும் பல மாத ஏடுகள் வெளிவருகின்றன. சங்கமணி என்ற தொழிலாளர் ஏடு ஐம்பதாண்டாக பாடாற்றுகிறது. தமிழ்ப்பள்ளிச் சிறுவர் ஏடு திருமகள். இவ்வாறு தமிழில் வெளிவரும் தமிழக்கலை, தொலைக்காட்சி ஏடுகள் இருபது உண்டு. தமிழ் பேசத் தெரிந்த தமிழர்கள் 90%, மலேசியப் பல இன மக்களின் தொகை இரண்டு கோடி, (இருபது மில்லியன்)

நன்றி, ஆறாவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

மலேசியத் தொழில்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமி வேலு அவர்கள்

# முடிச்சுப் போடுவது எப்படி?



## ஒரு கணிதமேதையின் கண்டுபிடிப்பு

சப்பாத்து நாடாவைப் பலவிதமாகக் கோர்த்து முடிச்சுப் போடலாம். அவற்றுள்ளே திறமான முறை எது?

இப்படியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதென்றால் கணித, கணினியியல் வல்லுனர்களுக்கு அல்வா சாப்பிடுவது போல் ஆகும். இந்த சப்பாத்து நாடாக் கேள்வியைப் பற்றி மண்டையை உடைத்துக் கொண்டவர்களில் ஒருவர் அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகப் பேராசிரியர் புர்கார்ட் பொல்ஸ்டர் (Burkard Polster). இவரது கண்டுபிடிப்பு Nature விஞ்ஞான சஞ்சிகையின் டிசம்பர் இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

வழக்கமாகச் சப்பாத்தின் முன்பகுதியிலுள்ள "வாயில்" நாடா கோர்க்கும் துளைகள் இரண்டு நிரைகளாகப் போடப்பட்டிருக்கும். நாடாவைக் கோர்க்கும் போது அது ஒன்றுவிடாமல் ஒவ்வொரு துளைக்குள்ளாலும் போய்வர வேண்டும். அத்தோடு சப்பாத்தின் வாயை மூடுவதற்கு ஒவ்வொரு துளையும் பங்களிக்கவும் வேண்டும். இதற்கடங்கப் பலவாயிரம் வழிகளில் நாடா கோர்க்கலாம். உதாரணமாக, ஐந்து சோடி துளையுள்ள சப்பாத்துக்கு நாடா கோர்க்கக் கிட்டத்தட்ட 37,58,400 வழிகள் உள்ளன! இவற்றுள் திறமானது எது என்று எப்படிக் கண்டுபிடிப்பது? பொல்ஸ்டர் இந்தக் கேள்வியைக் கணிதத் தத்துவங்களைப் பிரயோகித்து ஆராய்ந்தார்.

வண்ணாத்திப்பூச்சி



நாடாவின் நீளத்தைக் குறைப்பதுதான் நோக்கமென்றால் வண்ணாத்திப்பூச்சி கோர்ப்பு முறை திறமானது என்று பொல்ஸ்டர் கண்டுபிடித்திருக்கிறார். இந்த முறை மிகவும் அரிதாகத்தான் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

குறுக்கு-நெடுக்கு முறை



ஆனால் முடிச்சின் உறுதிதான் நோக்கமென்றால் எல்லோருக்கும் தெரிந்த "குறுக்கு-நெடுக்கு" கோர்ப்பு முறைதான் திறம் என்றும் பொல்ஸ்டர் கண்டுபிடித்திருக்கிறார். நூற்றுக்கணக்கான வருடங்களாக முயற்சி செய்து மனிதர் கண்டுபிடித்த இந்த முறை இப்போது கணித பூர்வமாகக் கூட ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.

நாடா கோர்த்தால் மட்டும் போதாது. அதற்குப் பிறகு உறுதியான முடிச்சும் போடவேண்டும். பலரும் போடுவது "பாட்டி" முடிச்சு. இடது முனை வலது முனைக்கு மேல்; இடது முனையைக் கீழால் எடுத்து மீண்டும் இடது முனை வலது முனைக்கு மேல்; இடது முனையை கீழால் எடுத்து இழுத்து இறுக்க வேண்டும். இந்த முடிச்சு இலகுவாக அவிழ்ந்து விடும். ஆனால் மனங்கலங்க வேண்டாம்! இதை உறுதியான "கடலோடி"முடிச்சாக்க ஒரு சிறிய மாற்றம் தான் தேவை. இடது முனை வலது முனைக்கு மேல்; இடது முனையைக் கீழால் எடுத்துப் பிறகு வலது முனை இடது முனைக்கு மேல்; வலது முனையைக் கீழால் எடுத்து இறுக்க வேண்டும்.


**ஆறு சோடி துளையுள்ள சப்பாத்துக்கு நாடா கோர்க்கக் கிட்டத்தட்ட முப்பத்தி ஏழாயிரத்து ஐம்பத்தியெண்ணாயிரத்து நானூறு வழிகள் உள்ளன!**

மேற்கொண்டு அறிய:
http://www.maa.org/mathland/mathtrek_12_23_02.html



ந. அசோகன் - பின்லாந்தில் வாழ்ந்து வரும் இவர் ஒரு கணினிப் பொறியியலாளர்.

ந. அசோகன்
பின்லாந்து



# பெண்களின் அழகு சாதனத்தில் தாஜ்மகால் நிவாரணம்

மாசுபடிந்த தாஜ்மகாலின் கோபுரங்களை எவ்வாறு பொலிவுறச் செய்வது என மண்டையை உடைத்துக் கொண்டிருந்த விஞ்ஞானிகள் இப்போது பெருமூச்சு விடலாம். பண்டைய காலத்தில் இந்திய, பாகிஸ்தான் பெண்கள் பாவித்த முக அழகுக் கலவை காதலுக்குச் சின்னமான தாஜ்மகாலின் அசுத்தத்தைப் போக்குமென கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

முல்தானி மிற்றி (Multani Mitti) அல்லது முல்தான் சகதி என்று அழைக்கப்படும் இக் கலவை தாஜ்மகாலில் பிடித்துள்ள சல்பேற்றுக்களையும் காபனேற்றுக்களையும் அழிக்கவல்லதாம்.

சுற்றுப் புறத்திலுள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் இரசாயன வாயுக்கள் உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலின் பளிங்குக் கற்களில் படிந்து அவற்றின் வெண்மையைப் பறித்துவிட்டன. மண்ணிறம் படிந்து விட்ட தாஜ்மகாலை இந்த இரசாயன வாயுக்களிலிருந்து காப்பாற்ற இந்திய மத்திய, மாநில அரசுகள் எடுத்த முயற்சிகள் இதுவரை முற்று முழுதாக பலனளிக்கவில்லை.

தாஜ்மகாலின் புனிதத்தை மீண்டும் வெளிக்கொணருவது பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள், புதிய தொழில்நுட்பம் பற்றி ஆராய்வதை விடுத்து பண்டைய இந்திய, பாகிஸ்தான் கலாசாரங்கள் பக்கம் தம் பார்வையைத் திருப்பினர். பண்டைய காலத்தில் சேற்றுக் கலவையொன்றைப் பாவித்து இப்பிராந்தியங்களிலுள்ள கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்டனவாம். எனினும் இக்கலவை பற்றி மேலதிக விபரங்கள் அவர்களுக்குக் கிடைக்காத நிலையில் முல்தான் கலவை பக்கம் அவர்கள் தம் பார்வையைத் திருப்பினார். மண், தானியங்கள், பால் மற்றும் சுண்ணாம்பு நிறைந்த இச் சேற்றுக்கலவையை குறிப்பாக சுண்ணாம்பு நிறைந்த பாகிஸ்தானிய பிராந்தியமொன்றில் வாழ்ந்த பெண்கள் தமது முகப் பொலிவை நீடிக்கச் செய்யப் பாவித்து வந்தனராம்.

இக்கலவை ஏற்கனவே தாஜ்மகாலின் உட்புறத்தில் வெற்றிகரமாகப் பாவிக்கப்பட்டுவிட்டது. தூரிகை மூலம் இக் கலவை பூசப்பட்டு, 24மணிநேரத்தின் பின்னர் வெந்நீரால் கழுவ, அழுக்குகள் அகன்று பளிங்கு மீண்டும் பளிச்சிடத் தொடங்கியது.

இச் சேற்றுக் கலவையின் மகிமையை அறிந்து கொண்ட இத்தாலிய விஞ்ஞானிகள், ரோமிலும் புளோரன்ஸ் நகரிலும் அழுக்கினாலும், இரசாயன வாயுக்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள பளிங்குச் சிலைகளைப் பாதுகாக்க இதனைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# வால் நட்சத்திர அபாயம்


பாரிய வால்நட்சத்திரமொன்று பூமியைத் தாக்கி பெருத்த சேதங்களை விளைவிக்கலாம் என்ற அச்சம் பொதுமக்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கங்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் கூட உண்டு.

ஆனால் அத்தகைய பாரிய அனர்த்தம் நடைபெறும் சாத்தியக் கூற்றை மிகவும் குறைவாக எடைபோட்டுள்ளனர் கனடிய விஞ்ஞானிகள்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செய்மதித் தரவுகளை ஆராய்ந்த மேற்கு ஒன்ராரியோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பாரிய வால் நட்சத்திரமொன்று பூமியைத் தாக்கும் சாத்தியக் கூறு ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறையே உண்டு எனக் கணிப்பிட்டுள்ளனர். முன்னர், இத்தகைய சாத்தியக் கூறு 200 - 300 வருடங்களு-க்கு ஒரு முறை இடம் பெறலாம் எனக் கணிப்பிடப்பட்டிருந்தது.

பூமியை வருடந்தோறும் பல வால்நட்சத்திரங்கள் தாக்குகின்றன, ஆனால் 1908-ஆம் ஆண்டில் தாக்கிய நட்சத்திரம் ஒன்று சைபீரியாவில் 2000 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசத்தை நிர்மூலமாக்கியது. இத்தகைய வால்நட்சத்திரங்களே ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை பூமியைத் தாக்கும் என மேற்கு ஒன்ராரியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீட்டர் பிரௌன் பிரித்தானிய விஞ்ஞான சஞ்சிகை ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.






# புகலிட சினிமாவும் "வாய்ச் சொல்லில்" குறும்படமும்

-ம. ரகுநாதன் (ரதன்)




1896இல் இருந்து இன்று வரை சினிமா என்னும் அற்புதமான மொழியானது பல வடிவங்களுக்கூடாக புதிய பாதை ஒன்றில் பாய்ந்து செல்கிறது.

மௌனத் திரைப்படங்கள்
பேசும் திரைப்படங்கள்
பரீட்சார்த்த முயற்சிகள்
நவயதார்த்தவாத சினிமாக்கள்
யதார்த்தவாத சினிமாக்கள்
கலைப் படைப்புக்கள்
மசாலாப் படைப்புக்கள்
செய்திப் படங்கள்
குறும்படங்கள்

என பல்வேறு பிரிவுகளிலும் வடிவங்களிலும் நாங்கள் காணலாம். சார்லி சப்ளின், விக்ரோரியா டி சிகா, சத்யஜித்ரே, ரித்விக் கட்டக், ஸ்ரீபன் ஸ்பில்பேர்க், ஒலிவர் ஸ்ரோன், ஆனந் பட்வர்த்தன் என்ற பல உதாரண புருஷர்களுக்கு ஊடாக இந்த சினிமா மொழி வளம் பெற்றுள்ளது. அநந்தை நாராயணன் - கலைப்படங்கள் என்பதற்கு அழகான உதாரணத்தை 17-09-88இல் வெளிவந்த "திரைச் சுவை" இதழில் குறிப்பிட்டுள்ளனர்.

*செயற்கையான சந்தோஷங்கள்*
*செயற்கையான சோகங்கள் இது "மூன்றாம் பிறை"*

*இயற்கையான சந்தோஷங்கள்*
*இயற்கையான சோகங்கள் இது "வீடு"*

இது தான் கலைப்படம் (Art Film). இவ்வாறே நாங்கள் இந்தக் குறும்படத்தையும் நோக்கலாம். ஆரம்பகாலங்களில் செய்திப்படங்கள் என்ற (Documentary Film) பிரிவிலிருந்து மெருகூட்டப் பெற்ற வடிவமே இந்தக் குறும்படம். தலையீடற்ற

வாழ்வை படம் பிடிப்பதே (Life Caught Unawares) இந்த செய்திப் படங்கள். இவற்றைத் தாண்டி கதைகள், சம்பவங்களுடன் கைகோர்த்து செல்வதே குறும்படம்.
எழுபதுகளின் பின் பகுதியில் வெளிவந்த "That Cold day in the Park" என்ற குறும் படத்தின் கதை இது:

ஒரு பூங்காவில் ஓர் இளைஞன் தூங்கிக் கொண்டிருக்கின்றான். இதனை யன்னல் ஊடாக நடுத்தர வயது பெண் மணி கவனிக்கிறாள். விருந்தினர் அவளது வீட்டிற்கு வந்து செல்கின்றனர். அவர்கள் போன பிறகும் அவள் இதனைக் கவனிக்கிறாள். இளைஞனிடம் நேரே சென்று கேட்கிறாள்.

"என்னோடு உடலுறவு கொள்ள வருகிறாயா?"

அவன் மறுத்து விடுகிறான். அவனது தூக்கம் தொடர்கிறது. திடீரென அவள் வீதிக்கு சென்று ஓர் இளம் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து அந்தப் பையனையும் பெண்ணையும் ஓர் அறையில் அடைத்துப் போடுகிறாள்.

இதுவே படம். இந்தப் படத்தில் என்ன செய்தி உண்டு என்று கேட்கலாம்.

1. தூங்குபவன் - சமூகத்திலிருந்து அந்நியமாகிப் போனவன்.

2. நடுத்தர வயது பெண்மணியின் விருப்பம் மறுக்கப்படும் பொழுது, இரண்டு பேர்கள் கொள்ளப்போகின்ற உடலுறவின் மூலம் நிறைவு கொள்ள முயற்சிக்கிறாள்.

இந்தப் படத்தை இயக்கியவர் Robert Altman.

முல்லையூர் பாஸ்கர் இயக்கியுள்ள (கதை, வசனம், எடிட்டிங், பாடல்கள், இசை, நெறியாள்கை) "வாய்ச் சொல்லில்"..... இவ்வாறான ஒரு படமே. மொத்தம் 10 நிமிடம்.

முதலில் கார் பார்க் ஒன்றில் ஒரு பெண்ணும் ஆணும் உரையாடுகிறார்கள். இதனை மற்றொரு பெண் மறைந்து நின்று பார்க்கின்றாள். பின்னர் அவள் ஆணின் காரின் முன்பாக வந்து நின்று காரில் ஏறிக் கொள்கிறாள். கார் போய்க் கொண்டிருக்கிறது. மௌன மொழியிலிருந்து பேச்சுக்குப் படம் மாறுகிறது. யார் இந்தப் பெண்? கேள்வியும் விடையும் தொடர கார் வேறொரு காரில் மோதுகிறது. விளைவு காதலன் உயிர் துறக்கின்றான். காதலி கத்துகிறாள்.

கவலையீனமாக கார் ஓட்டுதலை மையமாகக் கொண்டு இப்படம் எடுக்கப்பட்டாலும் அதனையும் மீறி கவலையீனத்துக்கான காரணங்கள் சந்தேகம்.... எல்லைகளற்ற சந்தேகங்கள் எனத் தொடர்கிறது. பாஸ்கரின் திறமை பல இடங்களில் பளிச்சிடுகிறது. தனி மனிதனாக அனைத்தையும் சிறப்பாக கையாண்டுள்ளார். ஒலி, ஒளி, அளவு, ஒளிப்பதிவு, இயல்பான நடிப்பு என பல பாராட்டுக்கள். ஏற்கனவே வானொலியில் "குரல் நாடகம்" என்ற மூன்று நிமிட நாடகங்களை தயாரித்தளித்தவர்.

இங்கும் சில விடயங்களை சுட்டிக் காட்டுவது தவறல்ல

1. ஆரம்ப காட்சிகளில் பெண் மறைந்து நின்று பார்ப்பது சற்று அதிகமாகவே காட்டப்படுகிறது.
2. சீரான திரைக்கதை மேலும் இறுக்கத்தைக் கூட்டும்.
3. தென்னிந்திய திரைப் படங்களின் பாதிப்பு - பாஸ்கரையும், கங்கா, சின்மயியையும் பாடல்களை பாடச் செய்துள்ளன. (பாடல்கள் இந்தியாவில், தென்னிந்திய பாடகர்களால் பதிவுசெய்யப்பட்டுள்ளன.)

இவை சாதாரண குறைபாடுகளே. ஆரம்பத்தில் மௌனமாக மிகவும் இறுக்கமாக படத்தை நகர்த்தியவர், ஏன் தீடீரென பேச்சுக்குத் தாவினார் என்ற கேள்வியும் எழாமல் இல்லை. மௌனம் என்பது ஒரு வகை சவாலே. இதுவே நிஜமான உத்தியுமாகும். இதனை பாஸ்கர் தொடர்ந்திருந்தால் இப் படம் பல மைல்களை கடந்திருக்கும்.

புலம்பெயர்ந்த மக்களிடையே குறும்படம் பிரபல்யமானது. பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜேர்மனி, சுவீடன், நோர்வே போன்ற நாடுகளில் இவ்வாறான பல படங்கள் வெளிவந்துள்ளன. கனடாவில் இதுவே முதல் முயற்சியாகும். இதற்கு முன்பாக உதிரியாக சில படங்கள் வெளிவந்துள்ளன. பொன்.



முல்லையூர் பாஸ்கரன்

சுதாவின் Insight என்ற படத்துக்கு ஒன்ராரியோ விருதும் கிடைத்துள்ளது. இவை வரவேற்கத்தக்க முயற்சிகளே. இந்தியாவில் இவ்வாறான சில விழாக்கள் நடைபெற்றுள்ளன.

இன்று எம்மிடையே ஒரு வீடியோக் கமராவை வாங்குமளவிற்கு பணமுண்டு. வீடியோக் கமரா இருந்தால் சுழற்றி அடிக்கலாம். படம் எடுக்கலாம். பலரைப் பார்க்கச் செய்யலாம். இந்த அபாயம் ஒன்று உண்டு. பத்து நிமிடங்களில் எடுக்கப்படுவனவெல்லாம் குறும்படங்களா என்ற கேள்வி எழும் இத்துறையில் முன்னேற விரும்புபவர்களிற்குப் பல கல்லூரிகளில் பயிற்சி வகுப்புக்கள் உள்ளன.

புலம்பெயர்வு எமக்கு புதிய வடிவமொன்றைத் தந்துள்ளது. பாஸ்கர் போன்ற இளைஞர்கள் நம்மிடையே உள்ளார்கள். நம்பிக்கையுடன் காத்திருப்போம்.



ம. ரகுநாதன், ரதன், வானரன் என்ற புனைபெயர்களில் சிறுகதைகள், கவிதைகள், சினிமா விமர்சனக் கட்டுரைகள், அரசியல் / இலக்கிய விமர்சனக் கட்டுரைகளை சஞ்சிகை, பத்திரிகைகளுக்கு எழுதிவருகிறார்.




## 'கலைமாமணி' வி.கே. ராமசாமி மறைவு

கடந்த வருடம் தமிழக சினிமாத் துறை சந்தித்த மிகப் பெரும் இழப்பு குணச் சித்திர நடிகர் வி.கே. ராமசாமியின் மறைவு தான்.

'நாம் இருவர்' என்ற ஏ.வி. எம் நிறுவனத்தின் 1947ஆம் ஆண்டுத் திரைப்படத்துடன் தனது திரையுலக வாழ்க்கையை ஆரம்பித்த 79 வயதுடைய திரு. ராமசாமி 500இற்கு மேற்பட்ட படங்களில் நடித்திருந்தார்.

ஐந்து தலைமுறை நடிகர்களுடன் நடித்த இவரது கலையுலக சேவையைப் பராட்டி தமிழக அரசு 1970ஆம் ஆண்டில் கலைமாமணி விருதை இவருக்கு அளித்தது.



Karasi Pillay

# "நாளை"

## தென்னாபிரிக்காவில் முதல் தமிழ்ப் படம்

தென் ஆபிரிக்காவில் ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் இருப்பது தெரிந்த விடயம். இவர்கள் மத்தியிலிருந்து முதலாவது தமிழ்த் திரைப்படம் இப்போது வெளிவந்துள்ளது. "நாளை" என்ற இத் திரைப்படத்தை டர்பன் (Durban) நகரில் வாழும் 'பிள்ளை' குடும்பத்தினர் தயாரித்துள்ளனர்.


காதல், குடும்பம், நவீனத்துவம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய இப் படத்தில் தயாரிப்பாளர் திரு. டீஸ் பிள்ளை (Dees Pillay). இவரின் இளைய மகளான கரசி பிள்ளை (Karasi Pillay) (model) பிரதான வேடமேற்று நடிக்கிறார். இந்தியாவில் பிரபலமான supermodel ஆக உயர்ந்துவிட்ட பெண்ணின் வாழ்க்கை, காதல், மாமியார்களின் ஆதிக்கம் பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் இடையிலான சர்ச்சைகளே நகைச் சுவையுடன் கூடிய இப் படத்தின் கதை.

இருபத்தி நான்கு வயதான கரசியும், அவரது சகோதரி பிரியலோசினியும் சென்னையிலுள்ள திரைப்பட, தொலைக்காட்சி கலைக் கல்லூரியில் பயின்றவர்கள். அவர்களது சகோதரன் பாடல்களை எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டிலும், தென்னாபிரிக்காவிலும் படப்பிடிப்புக் காட்சிகள் இடம்பெற்ற இத் திரைப்படத்தின் கதாநாயகன் குஷ்புவின் சகோதரர் அப்துல்லா கான். 'மால்குடி' சுபா, எஸ்.பி. பாலசுப்பிரமணியம், அனுராத ஸ்ரீராம் ஆகியோர் பின்னணியில் பாடியுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக எடுக்கப்பட்ட அயராத முயற்சிகளின் விளைவே "நாளை". தென்னாபிரிக்காவில் பல்லாயிரக்கணக்கான தென்னிந்தியர் (தமிழர்) வாழ்ந்தும் கூட, அந் நாட்டின் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தென்னிந்தியருக்கான நிகழ்ச்சிகள் இல்லையென்பதைக் காட்டுவது தமது நோக்கங்களிலொன்று என கரசி பிள்ளை தென்னாபிரிக்க பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்தார்.

'நாளை' விரைவில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் கனடாவிலும் திரையிடப்படவுள்ளது.




# இணையத்தில் துணை தேடும் பிரசாந்த்

'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் 1990ஆம் ஆண்டில் திரையுலகுக்கு அறிமுகமானவர் பிரசாந்த். அதன் பின்னர் 2002இல் வெளிவந்த வெற்றிப் படமான 'தமிழ்' உட்பட 40 திரைப்படங்களில் நடித்துவிட்டார். அதுமட்டுமன்றி, பிரசாந்த் தமிழக அரசிடமிருந்து 'கலைமாமணி' கௌரவத்தையும், பல சினிமா ஆர்வலர்களிடமிருந்து 'காதல் இளவரசன்' பட்டத்தையும் பெற்றுவிட்டார். இப்போது 29 வயது நிரம்பிய இந்த காதல் இளவரசன் தனது இளவரசியைத் தேடுகிறார்.

தமிழகமெங்கும் தமது மகனுக்குரிய துணையைத் தேடி வலை வீசியிருந்தனர் பிரசாந்தின் பெற்றோர். எனினும் நடிகர் மகனுக்கு ஏற்ற துணை கிடைக்காத-தால் இப்போது இணையத்தின் துணையை நாடியுள்ளனர். www.tamilmatrimony.com என்ற தமிழ் தளத்தில் பிரசாந்தின் துணை வேட்டை பற்றிய தகவல் உள்ளது.

கராட்டி, சிலம்பு போன்ற தற்காப்பு முறைகளில் மட்டுமல்ல குதிரை ஓட்டம், படகோட்டம் மற்றும் நீச்சல் போன்றவற்றிலும், பரத நாட்டியத்திலும் தேர்ச்சி பெற்ற பிரசாந்த் இங்கிலாந்திலுள்ள Trinity College of Music இல் இசையும் பயின்றார்.

www.tamilmatrimony.com/alliance/prasanth.html.



சுமா ரங்கநாத்

# ஏ. ஆர். ரகுமான் சோகம்

ஏ. ஆர். ரகுமான் இந்தியாவில் மட்டுமல்ல பல மேலைத்தேய இசை இரசிகர்களின் மனதிலும் இடம் பிடித்துவிட்டார்.



அவர் இசையமைத்த Bombay Dreams (பம்பாய் கனவுகள்) என்ற இசை நாடகம் இங்கிலாந்தில் சக்கை போடு போடுகிறது. அண்மையில் பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய நிதி சேர்ப்பு வைபவத்தின் போது இந் நாடகம் திரையிடப்பட்ட போது முன் வரிசையில் அமர்ந்து இரசித்தவர்களில் பிரித்தானிய மகாராணியாரும் அடங்குவார். எனினும் இந்தியாவிலே அவரது இசையமைப்பில் உருவாகிய பல படைப்புகள் இன்னமும் வெளிவரவில்லையென்பதில் ரகுமானுக்குக் கவலை.

கடந்த இரு வருடங்களில் தாம் இசையமைத்த திரைப்படங்களில், 70 வீதமானவை இன்னமும் வெளிவரவில்லை என ரகுமான் கடந்த வருட இறுதியில் தெரிவித்தார். இவற்றில் ஒன்பது இந்தித் திரைப்படங்களும் இரு தமிழ்த் திரைப்படங்களும் அடங்கும்.

"மக்களுக்கு எனது இசை மிகவும் பிடித்திருக்கையில் இந்நிலை மிகவும் வேதனைக்குரியது" என கவலைப்படுகிறார் பிரித்தானியாவின் பத்தாவது பணக்கார ஆசியர் ரகுமான்.

# ரஜினியின் 'நான் எங்கே போகிறேன்'


'பாபா' பரபரப்பை ஏற்படுத்துவதற்கு பதில் இரசிகர்களையும் பெரும் இலாபத்தை எதிர்பார்த்திருந்த விநியோகத்தர்களையும், திரையரங்க உரிமையாளர்களையும் ஏமாற்றிவிட்டது என்பது புதிய செய்தியல்ல.

இதனை சரிக்கட்ட புதிய படம் ஒன்றை தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள 'பாபா' ரஜினி, இடையே தனது சுய சரிதையையும் எழுதிவிட்டாராம். தனது 53வது பிறந்த தினத்தைக் கொண்டாடி விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில்தான் தனது வாழ்வை, தனது இளமைப் பிராயத்தை, பஸ் நடத்துனர் அனுபவங்களை, நடிகரான அனுபவத்தை - எழுதத் தொடங்கினாராம். அதுமட்டுமல்ல தனது அரசியல் கொள்கையையும் ஆன்மீக அனுபவங்களையும் இச் சுயசரிதையில் பகிர்ந்து கொள்கிறாராம். புத்தகத்தின் பெயர் 'நான் எங்கே போகிறேன்'.

தனது எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றியும் ரஜினி இப் புத்தகத்தில் கூறியிருக்கிறாராம்.

சுப்பர் ஸ்ராரின் இறந்த, நிகழ்கால பதிவுகளைவிட எதிர்கால சிந்தனைகள் தான் தமிழகத் தலைவர்களைக் குலுக்கப் போகின்றது.





# கொலிவூட் - பொலிவூட்

பொதுவாக ஹொலிவூட்டை காப்பியடிப்பது பொலிவூட் வழக்கம். அங்கு நன்றாக ஓடும் ஆங்கிலப் படங்கள் இந்தியில் வெளிவரும். அதே போல் இந்திப் படங்களைத் தமிழ்த் திரையுலகம் காப்பி அடிப்பதுண்டு. தமிழ்த் திரைப்படங்கள் தெலுங்கு, கன்னடத் திரையுலகங்களினால் காப்பியடிக்கப்படும்

இப்போது இந்த காப்பியடிப்புத் திசையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டு இந்திப் படவுலகிற்கு ஒரு மோசமான ஆண்டு. வெளிவந்த 100இற்கு மேற்பட்ட திரைப்படங்களில் 98 சதவீதமானவை தோல்வியைத் தழுவிக் கொண்டன. இந்நிலையில் தமிழில் நன்றாக ஓடிய படங்களை காப்பியடிக்க இந்திப்படவுலகு புறப்பட்டுள்ளது.

பொலிவூட் AVM நிறுவனத்தாரின் மகத்தான வெற்றிப் படமான ஜெமினி இந்தியில் தழுவப்படவுள்ளது. காதல் கதையான அலை பாயுதே 1999இல் வெளிவந்த ஒரு வெற்றிப்படம். அது தான் இந்தியில் தற்போது சாந்தியா என வெளிவந்துள்ளது. அதேபோல் தில் (Dhil) இந்தியில் டும் (Dum) ஆக வெளிவரவுள்ளது. விக்ரம் நடித்த காசி, சேது ஆகியனவும் இந்தியில் தயாரிக்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டின் வெற்றிப் படங்களான ரன், அழகி ஆகியவற்றை இந்தியில் தயாரிப்பது பற்றியும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.



# சர்வதேச கிரிக்கெட் கிண்ணம் 2003

சில காலம் தோல்விகளைத் தழுவிய இலங்கை அணி 1996ஆம் ஆண்டின் சாதனையை மீண்டும் சாதிக்குமா? இல்லை 1999ஆம் ஆண்டைப் போல் அவுஸ்திரேலியா தான் வெற்றியடையுமா? இல்லை "சுப்பர்" துடுப்பாட்டக்காரர் சச்சின் தெண்டுல்கரைக் கொண்டுள்ள இந்திய அணி வெற்றி பெறுமா?

தென்னாபிரிக்காவிலும், சிம்பாவேயிலும், கென்யாவிலும் சர்வதேச கிரிக்கெட் கிண்ணம் - 2003 போட்டி ஆரம்பித்துள்ள இவ்வேளையில் கிரிக்கெட் ஆர்வலர்கள் மிக ஆவலுடன் விடை தேடி நிற்கும் கேள்விகள் இவை.

உலகின் மிக முக்கிய கிரிகெட் நாடுகளான அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் மேற்கு இந்திய தீவுகள் தமது திறமையான விளையாட்டாளர்களை இந்த எட்டாவது சர்வதேச கிண்ணத்திற்காக தெரிவு செய்துள்ளனர்.

மொத்தம் 14 நாடுகள் பங்கு பற்றும் இக் கிண்ணத்திற்கான முதற் போட்டி பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தென்னாபிரிக்க நகரான கேப் நகரில் ஆரம்பிக்கும். கிரிக்கெட்டுக்கான சர்வதேச போட்டியில் சாதனை படைக்குமளவில் இம்முறை 54 போட்டிகள் இடம் பெறவுள்ளன.

மிக முக்கியமான போட்டிகள் உட்பட பெரும்பாலான போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறும். ஆறு போட்டிகள் சிம்பாவேயிலும் இரு போட்டிகள் கென்யாவிலும் நடைபெறும். இறுதிப் போட்டி மார்ச் 23ஆம் திகதி ஜொகானஸ்பேர்க்கில் நடைபெறும்.

முன்னணி அணிகள் இம்முறை கிண்ணத்தைத் தட்டிச் செல்லும் நோக்கில் முழு முயற்சிகளுடன் ஈடுபட, ஒரு பந்தயம் கட்டும் நிறுவனம் (betting company) அவுஸ்திரேலியாவே வெற்றி பெறும் சாத்தியக் கூறு அதிகம் இருப்பதாகக் கூறுகிறது. Bet 365 என்ற இந் நிறுவனத்தின் கணிப்பின்படி, அவுஸ்திரேலியா வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறு 15 இல் எட்டாகும். அடுத்து வருவது 10/3 உடன் தென்னாபிரிக்காவாகும். இந்தியா, பாகிஸ்தானுக்கு தலா 13/2 உம், இலங்கைக்கு 9/1 உம், இங்கிலாந்திற்கு 12/1 உம் என Bety 365 கூறுகிறது. சாத்தியக்கூறு குறைந்த அணி கனடிய அணியாகும். இதன் சாத்தியக் கூறு ஆயிரத்தில் ஒன்று.

## போட்டியின் அமைப்பு





Photo: Reuters

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையேயான போட்டியில் முதலாவது ஓவரிலேயே 4 விக்கட்டுகளைக் கைப்பற்றி சாதனை படைக்கிறார் சமிந்த வாஸ்




கனடாவின் இஷ்வார் மராஜின் விக்கட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் இலங்கையின் பிரபாத் நிசங்கா. உலகக் கிண்ண வரலாற்றில் அதிகுறைந்த ஓட்ட எண்ணிக்கையில் கனடா இலங்கையிடம் சுருண்டது




இந்தியாவின் ராகுல் திராவிட்டை வீழ்த்துகிறார் அவுஸ்திரேலியாவின் ஜேசன் கிலஸ்பி. அவுஸ்திரேலியா தனது அபாரமான ஆட்டத் திறனைக் காண்பிக்கிறது.

முதற் சுற்றில் ஒவ்வொரு அணியும், தனது குழுவில் (pool) உள்ள ஏனைய ஆறு நாடுகளுடன் விளையாடும். மொத்தமாக 42 போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு அணியும் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவிலும் திறமையான மூன்று அணிகள் super six எனப்படும். இரண்டாவது சுற்றில் பங்கு பற்றும் இந்த super six இலிருந்து நான்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டு அரை இறுதியாட்டத்திற்குச் செல்லும்.

| Group A | Group B |
| --- | --- |
| Australia | South Africa |
| Pakistan | Sri Lanka |
| India | New Zealand |
| England | West Indies |
| Zimbabwe | Bangladesh |
| Netherlands | Kenya |
| Namibia | Canada |

## சர்வதேச கிரிக்கெட் கிண்ணம்: ஒரு வரலாறு

*கிரிக்கெட்டுக்கான சர்வதேச போட்டியொன்றை உருவாக்கும் முயற்சிகள் 1912ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தன. அவ் ஆண்டில் ரெஸ்ட் கிரிக்கெட் விளையாடிய மூன்று நாடுகளான அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகியவை தமக்கிடையே முக்கோண ரெஸ்ட் போட்டிகளை நடத்தின. இங்கிலாந்து அணி விளையாடிய ஆறு போட்டிகளில் நான்கை வென்றும், இரண்டை வெற்றி தோல்வியின்றி முடித்தும் முதலிடத்தைத் தட்டிச் சென்றது. எனினும் பல்வேறு காரணங்களுக்காக இம் முயற்சி தொடரவில்லை. பின்னர் எழுபதாம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளின் வெற்றியைத் தொடர்ந்து 1975ஆம் ஆண்டில் ஆறு ரெஸ்ட் நாடுகளும் (அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், நியுசிலாந்து, மேற்கு இந்திய தீவுகள்) மற்றும் இலங்கையும் கிழக்கு ஆபிரிக்காவும் இணைந்து முதலாவது சர்வதேச கிரிக்கெட் கிண்ணப் போட்டியை இங்கிலாந்தில் நடத்தின. இதன் மகத்தான வெற்றி ஏனைய போட்டிகளுக்கு வழிகோலியது.*




பந்து தடுப்பில் தென்னாபிரிக்க இவன் அலன் டொனால், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் பிரையன் லாராவும் காணப்படுகிறார்.

### கிரிக்கெட் super six, அரை இறுதியாட்ட, இறுதியாட்ட தினங்கள்

| திகதி | அணி Vs | அணி |
| --- | --- | --- |
| மார்ச் 07 | 1st/PoolA | 1st/PoolB |
| மார்ச் 07 | 2nd/PoolA | 2nd/PoolB |
| மார்ச் 08 | 3rd/PoolA | 3rd/PoolB |
| மார்ச் 10 | 2nd/PoolA | 1st/PoolB |
| மார்ச் 11 | 1st/PoolA | 3rd/PoolB |
| மார்ச் 12 | 3rd/PoolA | 2nd/PoolB |
| மார்ச் 14 | 2nd/PoolA | 3rd/PoolB |
| மார்ச் 15 | 3rd/PoolA | 1st/PoolB |
| மார்ச் 15 | 1st/PoolA | 2nd/PoolB |

### அரையிறுதி ஆட்டங்கள்

| | | |
| --- | --- | --- |
| மார்ச் 18 | 1st - Super Six | 4th Super Six |
| மார்ச் 20 | 2nd Super Six | 3rd Super Six |

இறுதி ஆட்டம் மார்ச் 23

இந்தியாவின் ராகுல் திராவிட்




### இதுவரை நடைபெற்ற போட்டிகளின் வெற்றியாளர்கள்

| ஆண்டு | போட்டி நடைபெற்ற நாடு | வெற்றி பெற்ற அணி |
| --- | --- | --- |
| 1975 | இங்கிலாந்து | மேற்கு இந்திய தீவுகள் |
| 1979 | இங்கிலாந்து | மேற்கு இந்திய தீவுகள் |
| 1983 | இங்கிலாந்து | இந்தியா |
| 1987 | இந்தியா, பாகிஸ்தான் | அவுஸ்திரேலியா |
| 1992 | அவுஸ்திரேலியா நியுசிலாந்து | பாகிஸ்தான் |
| 1996 | இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் | இலங்கை |
| 1999 | இங்கிலாந்து, நெதர்லாந்து | அவுஸ்திரேலியா |

# எண்ணியர் திண்ணியராகப் பெறின்

- இராகவன் -

"எவனொருவன் தன் வாழ்க்கைக் காலத்தில் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் கொண்டவனாயிருக்கிறானோ அவனுக்காக வெற்றியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின்றன. அதேவேளை, எவனொருவன் தன் வாழ்க்கைக் காலத்தில் ஏற்பட்டுக் கொள்கின்ற சோதனைகளையும், வேதனைகளையும் கண்டு தளர்ச்சியுற்று வருந்துகிறானோ, அவனுக்காக தோல்வியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின்றன. "என்பது உலகளாவிய ரீதியில் "வெற்றிகர-வெற்றி முறை" ஆலோசகர்களின் ஒருமித்த கருத்தாகும். இக் கருத்தாக்கமானது எவ்வித ஆய்வுக்கும் உட்படுத்தப்படாது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாகும். எங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஏற்படும் துன்ப துயரங்கள், சோதனை வேதனைகளை நினைத்து நினைத்து வருந்தி தளர்ச்சியுறுவது எப்போதும் எமது முன்னேற்றத்தினை பாதிப்பதாக அமைந்து விடுகிறது. இந் நிலையில் வெற்றி என்பது எட்டப்பட முடியாததொரு கற்பனை எண்ணக் கருவாக அமைந்து விடுகிறது. இந்த நிலையிலேதான் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் ஒருங்கே அமைந்த உறுதியான உள்ளத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

"வெற்றிகர-வெற்றி முறை" ஆலோசகர் முக்கியத்துவப்படுத்தி எப்போதும் வலியுறுத்தும் கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு அமைந்திருக்கிறது. "வெற்றியடையத் தவறும் அல்லது தோல்வியைத் தழுவிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதையே எப்போதும் நினைவு படுத்தி வேதனையின் விளிம்புக்கு சென்று தளர்ச்சியடைந்து வருந்துவதனைக் காட்டிலும் ஏன் இத்தகைய தோல்வி ஏற்பட்டது? என்பது பற்றிச் சிந்திப்பது இனி ஏற்பட இருக்கும் தோல்வியைத் தவிர்ப்பதற்கும் வெற்றிப் பாதையை நோக்கி சரியாக பயணிப்பதற்கும் வழி சமைக்கின்றது." இதிலிருந்து உய்த்துணரக் கூடிய முக்கிய கருத்து யாதெனில் தோல்வியை நினைத்து வேதனை கொண்டு தளர்ச்சியடைவதானது எந்தவொரு பயனையும் தருவதில்லை என்பதுடன் அது ஒரு சூனியப் பிரதேசத்தினுள் பயணிக்கவும் வழிகோலிவிடும் என்பதாகும்.

இதனால் தான் வெற்றி முறை ஆலோசகர்கள் "எண்ணங்களை மேம்படுத்துங்கள்" என அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்கள். எண்ணங்களை மேம்படுத்துதல் என்பது எந்தவொரு நிலைமையிலும் வெற்றியடைவதற்கான சிந்தனையைக் கொண்டிருப்பதனைக் கருதுகின்றது. இதன் மூலம் வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளையும் ஒருவர் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய ஆளுமையைப் பெற்றுக் கொள்ள முடியும். வாழ்க்கையில் ஏற்படுகின்ற சகலவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை, திறமை, நிதானம் என்பவற்றைக் கொண்டிருக்கின்ற ஒருவர் வாழ்க்கைப் பாதையில் வெற்றியுடன் வீறு நடைபோட முடிகின்றது.

"எப்போதும் முதல் தரமாகவே இருங்கள்" என்ற கருத்தும் எப்போதும் வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாந்தர எண்ணங்களால் மூளையை நிரப்பிக் கொள்ளுதல் பயனற்ற தொன்றாகும். சிறியவற்றைச் சிந்திப்பதைப் போலவே பெரியவற்றைச் சிந்திப்பதும் சுலபமானதே. ஒருவன் தனது எண்ணங்களின் விளைவாகவே உருவாகின்றான். அதாவது ஒருவன் ஆழமாக எதைச் சிந்திக்கிறானோ அதுவாகவே அவன் ஆகிவிடுகிறான். எனவே ஒருவன் அவனது அழுத்தமான எண்ணங்களின் அளவுக்கே சிறப்பானவனாகவோ, வெற்றியாளனாகவோ ஆகின்றான்.

கலாநிதி வில்லியம் ஆஸ்லர் (Dr. William Aslar) "ஒரு சந்தர்ப்பத்தில் ஒருநாள் வாழ்க்கை போதுமானது" என்ற கோட்பாட்டினை முன் வைத்துள்ளார். இதன்படி நாளைைய பளுவை நேற்றைய பளுவோடு சேர்த்து இன்று தூக்க முயற்சிக்கும் போது பலசாலியும் தடுமாறுகிறான் என்பதை உய்த்துணர முடியும். அதாவது ஒரே நேரத்தில் மிக அதிகமான பளுவைத் தூக்கிச் செல்ல முயற்சிக்கும் போது அது எங்களுடைய உடலை மாத்திரமன்றி மனதையும் நசுக்கி விடுகின்றது என்பதுடன் வெற்றிக்கான உணர்ச்சி உந்துதல் யாவற்றையும் நொறுக்கி விடுகின்றது. ஆனாலும் நடைமுறை உலகில் பலரும் நாளைய பாரத்தை கற்பனையில் சுமக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதைப் பற்றி அல்லது அதுகுறித்து நான் என்ன செய்யப் போகிறேன் ஒரு வேளை இப்படி நடந்து விட்டால் இத்தனை வேலைகளைச் செய்ய எனக்கு எங்கே நேரம் இருக்கப் போகிறது? என் வாழ்க்கையில் எத்தனை தோல்விகள்? வேதனைகள், துன்பங்கள்....இதையெல்லாம் எப்படி என்னால் தாங்கிக் கொள்ள இயலும்? இனிமேலும், இனிவரும் காலங்களிலும் எனக்கு எத்தனை தோல்விகள், வேதனைகள், துன்பங்கள் வரப் போகிறதோ? அதை எவ்விதம் நான் தாங்கிக் கொள்ள முடியும்? இந்நிலையில் வெற்றி என்பது எப்படிச் சாத்தியமாகும்?.... இவ்விதமாக எத்தனையோ சிந்தனைகள் இந்நிலையில் மேலெழுந்து எங்கள் உணர்வுகளையும், வெற்றிக்கான உந்துதலையும் மழுங்கடித்து விடுவதில் முனைப்புடன் பங்களிப்புச் செய்து கொண்டேயிருக்கும். எனவே தான் நேற்றைய நிகழ்வுகள் பற்றிய மறுபரிசீலனைகளிலும் நாளை பற்றிய எதிரான கற்பனைகளிலும் நேரத்தை விரயம் செய்வதைத் தவிர்த்து இன்றைய பணிகளில் இவர்கள் கவனம் செலுத்துவதே வெற்றிக்கான திசையை துல்லியமாக எடுத்துக் காட்டும்.

வில்லியம் ஆஸ்லர் கருத்துப்படி உங்கள் வாழ்க்கையை தனித்தனி நாட்காளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். நேற்றைய நாட்களை முற்றிலும் மூடிவிடுங்கள். நாளைய தினங்களின் கதவுகளையும் சாத்திவிடுங்கள். இன்று ஒரு நாள் மட்டும் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் வெற்றி கொள்வதற்கு ஒரு நாள் பிரச்சினை மட்டும்தான் இருக்கும். ஒரு நாள் பிரச்சினைகளை எவருமே வெற்றி கொண்டு விடலாம்.

ரோபேட் லூயிஸ் ஸ்டீவன்சன் (Robert Louis Stevenson) கருத்துப்படி "ஒவ்வொருவரும் அவர்களுடைய பாரத்தை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் இரவு வரும் வரை சுமந்தால் போதும். அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அவ்வேலையை ஒருவரால் செய்துவிட முடியும். ஒவ்வொருவரும் இருபத்து நான்கு மணி நேரங்களுக்கு இனிமையாக, பொறுமையாக, அன்பாக, தூய்மையாக வாழ்ந்துவிட முடியும். இங்கே கடந்தகால வேதனைகளுக்கும் தோல்விகளுக்குமான சிந்தனை மூடப்பட்டு விடுகிறது. இதனால் வெற்றியை நோக்-

கிய நகர்வு மிகக் கூர்மை அடைகின்றது.

முடிந்து போன ஒன்றுக்காக அதைப்பற்றி நினைத்து சதா வருந்திக் கொண்டிருத்தல் வெற்றியாளருக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றாக உள்ளடக்கப்படுவதில்லை. இதை வெற்றியாளர்களின் வரலாறுகளின் மூலம் அறிந்து கொள்ள முடியும். கைகள் இரண்டையும் கால்கள் இரண்டையும் யுத்தத்தில் இழந்த ரஷ்யப் போர் வீரன் வாயிலே எழுதுகோல் பொருத்தி "சாவுக்கே சவால்" என்ற நாவலை எழுதி முடித்தான். அதன் பின் அவன் உலகறிந்த நாவலாசிரியன் ஆனான். இங்கே உளவியல் நிபுணர் வில்லியம் ஜேம்ஸ் (William James) சொல்லிய கருத்தை நோக்குதல் பொருத்தப் பாடுடையதாகும். "முடிவெடுத்து ஒரு வேலையைத் தொடங்கிய பிறகு அதன் விளைவு என்னவாக இருக்கும் என்ற கவலையை அடியோடு விட்டொழியுங்கள்"

பெரும் சிந்தனையாளர்களும் சாதனையாளர்களும் இவ்விதமாகத்தான் வெற்றியடைந்துள்ளார்கள். இந்த வழியில் கிடைக்கின்ற பெரும் அமைதியே தெளிந்த சிந்தனைக்கும் ஆரவாரமற்ற ஆற்றலுக்கும் காரணமாகின்றது.

முதலில் தங்களுடைய நாட்களையும், பின்னர் தங்களுடைய பணிகளையும், பிரித்து வெற்றி கண்டிருந்தால் அவர்கள் சாரசரி மனிதர்களாக இருந்திருக்க மாட்டார்கள். இதைச் செய்கின்றவர்கள் எப்போதும் அமைதியின் கம்பீரத்தற்கும் ஒருமைப்பட்ட சிந்தனையின் உறுதிக்கும் சொந்தக்காரர்களாகி இருப்பார்கள். வெற்றியும் தவிர்க்க முடியாமல் அவர்களை வந்தடைந்திருக்கும்.

ஹெலன் கெல்லர் (Helen Keller) கண்பார்வையற்றவள்; செவிப்புலனற்றவள்; வாய் பேச முடியாதவள்; வறுமையிலேயே வாழந்து கொண்டிருந்தவள். ஆனால் தளர்ச்சியற்ற உறுதியான மன நிலையைக் கொண்டிருந்தவள். வெற்றி பெற்றேயாவது என்கின்ற உறுதி பூண்டாள். மற்றவர்களுக்கு உதவுவதில் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்கிற முடிவுக்கு வந்தாள், உலகத்தில் வாழ்ந்த பெண்மணிகளுக்கு சிறந்த முன் உதாரணமாகத் திகழ்ந்தாள். ஹெலன் கெல்லரிடம் இருந்த உடல் ஊனங்கள் மாற்ற முடியாதவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய குறைபாடுகளை வெற்றி கொள்ளுவதற்கான மனஉறுதியினை அவள் பயன்படுத்தினாள். இந்தக் குறைபாடுகளுடனேயே மகத்தான சாதனைகள் புரிய வேண்டும் என அவள் தீர்மானித்தாள்.


சாண்டோ (Shandow) என்பவர் மிகவும் பலவீனமான நோயாளியாகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார். சாண்டோ மனம் சோர்ந்துவிடவில்லை. அவர் விரும்பியது வெற்றி. மன உறுதியுடன் தேகப் பயிற்சி செய்து உடல்



ஜூலியஸ் சீசர் காக்கை வலிப்பு நோயினால் அவதிப்பட்டார். இருந்தும் பல நாடுகளை வென்ற மாவீரராகத் திகழ்ந்தார்.



ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் இளம் பிள்ளை வாதத்தால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார்.



பீதோவன் சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில் தான் உருவாக்கினார்.

வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவர் காலத்தில் மிகவும் பலசாலி என்கிற பெயரையும் பெற்றார். இவரைப் போன்றே சில ஆண்டுகளுக்குப் பிறகு உடல் ஊனமுற்ற பலவீனமான உடலை உடைய ஜோர்ஜ் ஜோவெட் (Jorj Jowed) என்கிற சிறுவன் மனச்சோர்வை விட மனவுறுதியே ஆக்க பூர்வமானது என்கின்ற முடிவுக்கு வந்தான். அவனுடைய முடிவு சரியானதே. தன்னுடைய நிலையை எண்ணி அவன் வருந்தாமலும், மற்றவர்கள் தனக்காக வருத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்காமலும் தன்னுடைய மனதையும் உடலையும் மேலும் வளப்படுத்திக் கொண்டான். என்ன நிகழந்தது? அதிசயம் எதுவும் நிகழவில்லை. 'செயலுக்கு ஏற்ற விளைவுதான் பெறுபேறு என்பதாகும்' என்கிற இயற்கைவிதி செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. பத்து ஆண்டுகளில் ஜார்ஜ் ஜோவெட் உலகத்தின் மிகச் சிறந்த பலசாலி என்கிற பெயரைப் பெற்றான்.

நவீன மருத்துவத்தால் உடலின் பல குறைபாடுகளைப் போக்கிவிட முடியும். இருந்தாலும் மன உறுதி என்பது மிகப்பெரிய அம்சம். பல சந்தர்ப்பங்களில் முதல் முயற்சியில் சிகிச்சை தோற்றுப் போவதுண்டு. அதனால் பலரும் குணம் அடைகின்ற எண்ணத்தை விட்டு விட்டு சோர்வடைந்து விடுகிறார்கள். தோமஸ் அல்வா எடிசன் (Thomas Alva Edison) 1000 தடவைகள் வரை விடா முயற்சியுடனும் மன-

சிரிப்பதனால் மனிதன் நீண்டகாலம் உயிர் வாழ்கிறான்....

மிலெனியம் சாறி பலஸ் ஆதரவில்...



எஸ். கே. தீசனின் கலகலப்பு!

# கலகலப்பு

முழு நீள நகைச்சுவைச் சித்திரம்

**இயக்கம்: எஸ். மதிவாசன் - இசை: எம். பவதாரணி**

**ஒளிப்பதிவு: எஸ். தர்மராஜா**

**கள்ளக்கொப்பி சட்டத்திற்கு விரோதம்**
**கமராக்கொப்பி கண்ணுக்கு கூடாது**

**எனவே திரையில் பாருங்கள்!**
**கலகலப்பு!!**



வுறுதியுடனும் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் தான். அளப்பரிய கண்டு பிடிப்புக்களை இந்த உலகிற்கு தர முடிந்தது. உலகின் தலைசிறந்த விஞ்ஞானியாக வெற்றி பெற முடிந்தது. எடிசன் தன்னுடைய பரிசோதனைகளில் காட்டியதைப் போல, எவரும் தொடர்ந்து முயற்சி செய்வதில் தமது உறுதியைக் காட்ட வேண்டும்.

கடந்தகால மகிழ்ச்சியற்ற விடயங்களை அலட்சியப்படுத்துகின்ற மன இயல்பினை ஏற்படுத்திக் கொள்வது வெற்றிக்கு மிக முக்கிய பங்களிப்புச் செய்யும் காரணியாகும். இவ்வாறு கடந்த காலத் தோல்விகளை ஏற்றுக் கொண்டு அதனை அலட்சியம் செய்யும் மனவியல்பு மேலோங்குமாயின் தேவையற்ற மனச் சோர்வை ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம். கடந்தகால நிகழ்ச்சி நிகழ்ந்து போனவை, கடந்த காலத்தை எத்தனை முறை ஒருவர் நினைவுபடுத்திக் கொண்டாலும் அதை மாற்றியமைத்து விடமுடியாது. ஆகவே கடந்த காலத்தின் மகிழச்சியற்ற நினைவுகளுக்காக ஏன் இப்போது கஷ்டத்தை அனுபவித்து மனச் சோர்வை ஏற்படுத்த வேண்டும். கடந்ககால தோல்விகளால் ஏன் எதிர்காலத்தின் மாபெரும் வெற்றிகளையும் சாதனைகளையும் மழுங்கடித்துக் கொள்ளல் வேண்டும்.?

பீதோவன் (Beethovan) சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில் தான் உருவாக்கினார்.

கவிஞர் மில்டன் (John Milton) 'இழந்த சொர்க்கம்' என்ற காவியத்தை பார்வையற்ற நிலையில்தான் எழுதினார்.

அலெக்சான்டர் போப் (Alexander Pope) என்ற ஆங்கிலக் கவிஞர் உடல் ஊனமுற்றவர். அவரால் நகர முடியாது. ஆங்கில இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனைகளை அவர் படைத்தார்.

ஜுலியஸ் சீசர் (Julius Ceasar) காக்கை வலிப்பு நோயினால் அவதிப்பட்டார். இருந்தும் பல நாடுகளை வென்ற மாவீரராகத் திகழ்ந்தார். காக்கை வலிப்பு வரப் போகிறது என்கிற உணர்ச்சி ஏற்பட்ட உடனேயே, போரை நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லி விட்டு சுயநினைவு இழந்த நிலையில் படுத்து விடுவாராம். சுய நினைவு வந்தவுடன் எதுவுமே நடக்காதது போல தளபதி நிலையில் ஆணைகளைப் பிறப்பிப்பாராம்.

ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் (Franklin Rooswelt) இளம் பிள்ளை வாதத்தால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார்.

ஜோன் பன்யன் (John Banyan) சிறையில் இருந்த போது எழுதிய "யாத்திரிகனின் புறப்பாடு" என்கிற புத்தகம் ஆங்கில இலக்கியத்தில் ஒப்பற்ற படைப்பாகக் கருதப்படுகின்றது.

ரோபேட் லூயி ஸ்டீவன்சன் (Robert Loui Stevenson) ஒரு மணி நேரம் கூட இருமலில் இருந்தும் நெஞ்சுவலியில் இருந்தும் விடுபட்டது இல்லை. கயரோகத்தாலும் காய்ச்சலாலும் எப்போதும் அவதிப்பட்டார். அந்த நிலையிலும் 'புதையல் தீவு' போன்ற அருமையான கதைகளை எழுதி முடித்தார்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் உடல் ஊனமுற்ற நிலையிலும், தங்களின் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு வாழ்க்கைக்கு தங்களைச் சரி செய்து வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் மனச் சோர்வடையவில்லை. கடந்த காலத்தை நினைத்து வருந்தி தளர்ச்சியடைந்து விடவில்லை. அவர்கள் தங்களது எதிர்காலச் சாதனைகளுக்காகவும் அளப்பரிய வெற்றிகளுக்காகவுமே எப்போதும் முழு மூச்சோடு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை நோக்கினால் அந்தவிதக் குறைபாடு எதுவும் இல்லாமல் வாழ்க்கையைப் பற்றி குறை கூறிக் கொண்டிருக்கும் நாம் வெட்கத்தால் தலை குனிய வேண்டியிருக்கும்.

கைகள் இல்லாமல் கால்களால் கார் ஓட்டுகிறவர்கள் இருக்கிறார்கள்.

கால்கள் இல்லாமல் கைகளால் அல்லது செயற்கைக் கால்களால் நகர்ந்து சென்று சுறுசுறுப்பாகக் கடமையாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எவரும் அனுதாபத்தை தேடுகிறவர்கள் அல்ல. தங்கள் குறைபாடுகளை ஈடு செய்ய மிக உயர்ந்த கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டவர்கள் இவர்கள். இவர்களைவிட அதிர்ஷ்டசாலிகளான நாம் இவர்களின் உயர்ந்த கோட்பாடுகளைத் தேடிக் கண்டுபிடித்தால் போதும்.

"நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகவே ஆகிவிடுகின்றோம்" என்ற கோட்பாடு நிரூபிக்கப்பட்டதொன்றாகும். இதன்படி நோக்குவோமாயின் நாம் எமது எதிர்காலத்தின் பெறுமதி மிக்க வெற்றிகளையும் சாதனைகளையும் எண்ணிக் கொண்டு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு பதிலாக இனி எங்களால் எந்தவொரு சாதனையினையும் மேற்கொள்ள முடியாது. வெற்றி என்பது எமக்கு வெகு தொலைவில் இருக்கின்றது. எல்லாமே முடிந்து போய் விட்டது என்பதையே எப்போதும் நினைத்துக் கொண்டு கடந்தகாலத் தோல்விகளுக்காகவே மனம் வருந்திக் கொண்டிருப்போமாயின் வெற்றி என்பது எப்போதும் எங்களுக்கு வெகுதொலைவிலேயே இருக்கும். எனவே வெற்றியாளர் எப்போதும் தளர்வடையா மனநிலையினைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

எமிலி கூ (Emili koo) என்ற அறிஞரின் கருத்து பின்வருமாறு அமைந்துள்ளது. "ஒவ்வொரு நாளும் எல்லா வழிகளிலும் நான் மேலும் மேலும் சிறப்படைந்து வருகிறேன் என்று திரும்பத் திரும்பச் சொல்வதனால் மிகுதியான பயன் கிட்டுகிறது."

எப்போதும் தவிர்க்க முடியாத நிலையில் வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் மாறி, மாறி ஒரு சுழல் சக்கரம் போன்று வந்து வந்து போகிறது. வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள் துன்பங்கள், எத்தனையோ! அத்தனை துன்பங்களையும் தோல்விகளையும் பட்டியல் போடுவது மனச் சுமையை அதிகரிக்கவே செய்யும். அதற்காக நாம் மனச் சுமையை அதிகரித்துக் கொள்ள அனுமதித்தலாகாது. இவ்விதம் மனச்சுமையை அதிகரிக்க அனுமதித்தால் அந்த சுமையே எங்களை வெற்றிப் பாதையில் இருந்து திசை திருப்பி துன்பச் சகதியினுள் அமிழ்த்தி விடும். இவ்விதம் மனச்சுமையை அதிகரித்துக் கொள்ள அனுமதிப்பவர்கள் நிரந்தரமாகவே வெற்றிப் பாதையில் இருந்து முற்றிலும் விலகி துன்பச் சேற்றினுள் அமிழ்ந்து விடுகிறார்கள். எனவே இதனை நீக்கிக் கொள்ள வேண்டியது ஒருவரின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்யும் மிக முக்கிய காரணியாக அமைகின்றது. இதனை நீக்கிக் கொள்வற்கு வெற்றி முறை ஆலோசகர் கலாநிதி எம். ஆர். கொப்மேயர் (DR. M.R.Kopmeyer) பின்வரும் ஆணித்தரமான ஆலோசனைகளை முன் வைக்கிறார்.


* ஒப்புக் கொள்ளுதல் - முதலில் இழப்பு ஏற்பட்டு விட்டது என்பதை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். அதை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது தற்காலிக நிவாரணமாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் அவநம்பிக்கை என்கின்ற மயக்கம் மெல்ல மெல்ல விலகுகின்றபோது யதார்த்தத்தை எதிர்நோக்கத்தான் வேண்டும். நிகழ்ந்துவிட்ட சோகத்தை நம்ப மறுப்பது மனநிலையில் பெரிய தீங்கினை விளைவிக்கக் கூடியது. உங்களுடைய மனநிலை ஆரோக்கியத்தை நீங்கள் கெடுத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் சோகத்தை கெடுத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் சோகத்தை வெளிப்படையாகத் துணிச்சலுடன் எதிர் நோக்க வேண்டும். யதார்த்தத்தை துணிச்சலுடனும் வெளிப்படையாகவும் எதிர் கொள்வது ஆறுதலையும் பலத்தையும் அளிக்கும். நடந்தது நடந்துவிட்டது என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். இந்த முதலடியை நீங்கள் எடுத்து வைத்த பிறகு தான் அமைதிக்கான அடுத்த அடிக்கு நீங்கள் செல்ல முடியும்.

* ஏற்றுக் கொள்ளுங்கள் - சோகமான இழப்பை நீங்கள் ஒப்புக் கொண்ட பிறகு உணர்ச்சி பூர்வமான ஆறுதலைப் பெற, அந்த இழப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற மனநிலையினை நீங்கள் அடைந்து விடுகிறீர்கள். தவிர்க்க முடியாததை ஏற்றுக் கொள்ளுவது மனித சமுதாயத்தின் மிக


பெரியசாதனை ஆகும். நிகழ்ச்சியின் மீது அல்லது நிகழ்ச்சிகளின் மீது நமக்குக் கட்டுப்பாடு இல்லை என்பதை உணர்கின்ற போது ஏற்றுக் கொள்ளுவதன் மூலம் அதன் விளைவுகளின் மீது ஒரு கோட்பாட்டினை நாம் கொண்டு வந்து விடுகிறோம்.

அடக்கத்தோடும் பணிவோடும் ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு அதன் விளைவுகளை சந்திக்கின்ற அச்சக்தி உங்களிடம் தோன்ற ஆரம்பிக்கிறது.

எதையும் தாங்குகின்ற வலிமை நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. மனப் பூர்வமாக துரதிஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற போது, வேறு எந்த சக்தியையும் விட மிகப்பெரிய மனது சோர்ந்து விட ஆரம்பிக்கிறது. தவிர்க்க முடியாததை எதிர்த்துப் போரிடுவதிலும் மனத்தளவில் சோர்ந்து போய் தளர்வடைவதிலும் பயனில்லை. இதை அறிந்திருப்பவர்களே வெற்றியாளர்களாகத் திகழ்கிறார்கள். இத்தகைய வெற்றியாளர்களுக்கான நடைமுறை எடுத்துக் காட்டுகளாக பின்வருவோர் திகழ்கின்றனர்.









- தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா - இவர் கறுப்பு மலர் என்று அழைக்கப்படுகிறார். பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த பின்னர் - தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானார்.

- பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் - பல்வகைப்பட்ட இன்னல்களின் மத்தியில் கொண்ட கொள்கையில் இருந்து தளராது இயங்கியதன் மூலம் பலஸ்தீனத்தின் விடுதலைத் தேவதையானவர்.

- மியன்மாரின் ஜனநாயக சார்புத் தலைவி ஆங்சாங் சூகி - கடந்த 19 மாதகாலமாக மியன்மார் இராணுவத்தினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு 6/5/02 அன்று விடுதலை செய்யப்பட்டார். 1989 - 1995 வரையும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இக்காலப் பகுதியில் தான் (1991) இவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசும் கிடைத்தது. தனது கொள்கைக்காக தனது உயிர்க் கணவரின் மரணச் சடங்கிற்கு கூட அவர் சமூகமளிக்கவில்லை.

- கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் கஸ்ரோ - தம்மின விடுதலைக்காய் பல்வேறு தோல்விகள், துயரங்கள் மத்தியில் சளைக்காமல் போராடி கியூபாவின் புரட்சித் தலைவராகத் திகழ்கிறார்.

- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் - சிங்களப் பேரினவாதத்தினால் ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலைக்காய் கிளர்ந்தெழுந்தவர். தொடக்க காலங்களில் குறைந்த வலுவோடு சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்தவர். சொல்லொணா இழப்புகளுக்கும், துயரங்களுக்கு மத்தியில் தளராத துணிவோடு போராடி தமிழினத்தின் ஒரே தலைவராக வெற்றி கண்டிருப்பவர்.

- அனுசரித்து செயற்படுதல் - ஒப்புக் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல் இரண்டும் அனுசரித்துப் போவதற்கு பாதை வகுக்கின்றன. மூன்றாவது நிலையை நாம் அடைவதே மனத்தை தொடர்ந்து செயற்படும் அமைதி நிலைக்கு இட்டுச் செல்லும். நேர்ந்துவிட்ட துரதிஷ்ட சூழ்நிலையில், விளைவுகளுக்கேற்ப அனுசரித்து நடப்பவர்களே தொடர்ந்து முன்னேறுபவர்களாய் இருக்கிறார்கள்.

- செயற்பாட்டை மேற்கொள்ளல் - சோக நிகழ்ச்சியின் விளைவுகளைச் சமாளிக்க உடனடியாக நீங்கள் செயற்பாட்டை மேற்கொள்ளுதல் அவசியம். விதி அடைத்துவிட்ட கதவைப் பற்றிக் கவலைப்படாமல் நம்பிக்கை திறந்து வைத்திருக்கும் கதவை நாடிச் செல்பவர்கள் வெற்றியை அண்மிக்கிறார்கள். தேடுங்கள் கண்டு கொள்வீர்கள். விதி ஒரு கதவை மூடுகின்ற போது நம்பிக்கை இன்னொரு கதவைத் திறந்து வைக்கிறது என்பது தான் வாழ்க்கையின் நியதி.

முடிவாக இவையாவற்றையும் தொகுத்து நோக்கும் போது வெற்றியாளர்கள், சாதனையாளர்கள் என்று இனங் காணப்பட்டவர்களும், இனங் காணப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் அவர்களின் பின்னணியினை நோக்கும் போது எத்தகைய தோல்விகளையும், துன்பங்களையும் அவலங்களையும், துரதிஷ்டங்களையும் சந்தித்த போதும் அவற்றால் மனம் சோர்ந்து தலையில் கைவைத்து மூலையில் உட்கார்ந்து விடவில்லை. மாறாக தமது இலக்கை நோக்கி முனைப்புடன் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். நகர்ந்திருக்கிறார்கள். ஆனால் தலையில் கைவைத்து தமது தோல்விகளை நினைத்து வருந்த மூலையில் உட்கார்ந்தவர்கள் முன்னேறியதுமில்லை, வெற்றி அடையவும் இல்லை.

# மீண்ட வாழ்வு

அந்த ஒரு நாள் எவருக்கும் வரக்கூடாது. ஆனால் எனக்கு வந்துவிட்டது; உயிர் போகும் நிலையில் இருந்த வாழ்வும் மீட்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த நினைவு மாத்திரம் என் இருதயத்தில் இருந்து மீட்கப்படவில்லை. அந்த மறக்க முடியாத அனுபவத்தை மீட்டுப் பார்ப்போம் என்று பேனையை எடுத்தேன்.

இன்று


அப்போது ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு. திகதி தான் மறந்து போயிற்று. தைமாதம் என்பது மனத்தில் பதிந்துவிட்ட ஒன்று. நான் வவுனியாக் கச்சேரியில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். எனது சொந்த இடம் திக்கம் என்ற பகுதியாகும். போர் ஆரம்பித்து விட்ட காலம். போர் விமானங்கள் இடையிடையே மக்களின் உயிரைக் குடித்த காலம் அது! இத்தாலிய மார்செட்டி விமானங்கள் ஒருபுறம், சீனச் சகடை விமானங்கள் மறுபுறம் என தமிழ்ப் பிரதேசம் எங்கும் குண்டு மழை பொழிந்து கொண்டிருந்தது.

வவுனியாவில் இருந்து தாய் ஊராம் திக்கம் என்ற இடத்துக்கு போயே தீரவேண்டும் என்ற தீர்மானத்துடன் முதலில் கொடிகாமம் நோக்கிப் புறப்பட்டேன். ஆனால் பஸ் கிடைக்கவில்லை. கிளிநொச்சிக்குப் போகும் பஸ் கிடைத்தது. அதன் ரிக்கற் ஐநூறு என அறிவிக்கப்பட்டது. இருப்பினும் போய்ச்சேர வேண்டும் என்பதற்காக அந்த பஸ்ஸினையே எனது கடைசிக் கட்டக் கதி என அதில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். ஓமந்தை ஊடாகக் கிளிநொச்சி வரை பல்வேறு இராணுவத் தடைகளையும் தாண்டி பஸ் ஓடியது; இறுதி முடிவாகக் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு அருகாக நின்று கொண்டது. கிளிநொச்சியை பஸ் அடைந்து போது பிற்பகல் 6:00 மணி. ஒரு தெரிந்த தேநீர்க் கடையில் இரவைக் கழிக்கலாம் என எண்ணிய போது, எண்ணியது கைகூடியது. ஆனாலும் இரவு விழுந்த செல் ஒன்று தேனீர்க் கடைக்கு ஒரு மைல் தொலைவில் உள்ள வயல்வெளியில் விழுந்து வெடித்தது. அதன் பின்பு அன்றைய இரவு நித்திரை இன்றியே கழிந்தது.

அந்தப் பொழுது, அன்று அதிகாலையில் நிச்சயம் இன்றி விடிந்து பரந்தது. நானும் எழுந்தேன்; இயற்கைக் கடன் முடித்தேன்; சாப்பிட்டேன்; கொடிகாமம் நோக்கி புறப்படத் தயாரானேன். ஆனாலும் வாகனம் எதுவும் வரவில்லை. ஆனையிறவு ஊடாக எதுவித சேவையும் நடைபெறாது என்றும் பூநகரி மட்டுமே சேவை என்றும் கிளிநொச்சி பஸ் நிலையத்தில் பேசிக் கொண்டார்கள். பேச்சு சில நிமிட நேரத்தில் வாகனச் சாரதிகளால் உறுதி செய்யப்பட்டது. கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து பூநகரி நோக்கிச் செல்வதற்கு ஒரு தட்டிவான் தயாரான போதும் எட்டுப் பேர் மாத்திரமே அவ்விடத்தில் சேர்ந்தமையால் பிரயாணம் தடைப்பட்டது. இந்த இடத்தினை நிரப்புவதற்கு ஐம்பது அரிசி மூட்டைகள் தயாராகிக் கொண்டிருந்தன.

நான், எனது அலுவலகப் பையினைத் தட்டிவானில் வைத்துவிட்டு நிற்கையிலே சவரம் செய்துவிட்டு வரலாமே என்ற உணர்வு ஏற்படப் பக்கத்தில் உள்ள சலூனுக்குச் சென்றேன். எனது அலுவலை அவ்விடத்தில் நிறைவேற்றி விட்டு மீண்டும் தட்டி வானில் வந்து ஏறிக் குந்திக் கொண்டேன். மழைத் தூறல் வேறு. நான் குந்தியிருந்து கொடுகியது ஒரு மந்திக் குரங்கு கொடுகியதற்குச் சமானமானது. தட்டிவான் புறப்பட்டுப் போகும் நிலையின் ஆரம்பம் முடிவடைந்தது. இன்னும் பத்து நிமிடங்களில் தட்டிவான் புறப்படவே செய்யும்.

எமக்கு முன்னால் புகையிலை ஏற்றிய லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது. அது கிளிநொச்சித் தபால் நிலையத்தைத் தாண்டி செல்ல விதி விட்டு வைக்கவில்லை. எங்கிருந்தோ வந்த சீனச் சகடை விமானம் எறிந்த குண்டொன்று அந்த லொறியில் விழுந்து தெறித்தது. லொறி சின்னா பின்னமாகியது. ஒருவரின் தலை துண்டிக்கப்-பட்டு றோட்டில் விழுந்து கிடந்தது. அட! தமிழனுக்கு இப்படியும் ஒரு முடிவா என உள்மனம் கவலையை உள்வாங்கி முடிவதற்கு முன் எமக்கும் ஒரு கேடு நடக்கும் என நான் ஒரு போதும் நினைக்கவில்லை. நான் வெளியே நின்று வானத்தைப் பார்த்தேன். அதனை நம்பவே முடியவில்லை. மின்னாமல் முழங்-காமல் வந்த சீனச் சகடை விமானம், ஆடாது அசையாது நாங்கள் பிரயாணம் செய்யவிருந்த தட்டிவான் மீது விழக் கூடியதாக ஒரு குண்டைப் போட்டு விட்டுச் சென்றது.




Narani Pugalenthy



அலுவலகத்தில் ஒருவர் கூறினார்; "உங்கடை உயிர்தப்பியதே போதும் எனப் போங்கோ; இங்கு தப்பியது என எதுவும் இல்லை"

"ஐயோ குண்டு வருகிறது. என நான் போட்ட சத்தத்தில் தட்டிவானில் இருந்து பலரும் புறப்பட்டு ஓடலாயினர். நான் முதலில் ஓட்டம் பிடித்தேன். அந்தோ எங்கிருந்தோ வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று எனது முதுகைப் பதம் பார்த்தது. முதுகு வலி எடுத்தது. இருந்தாலும் அதனையும் பொறுத்துக் கொண்டு ஓடோடிச் சென்று, குப்புறப் படுத்து காதை மூடிக்கொண்டேன். ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை செய்தபோது விமானக் குண்டு வீச்சுக்குத் தப்புவது எப்படி எனப் புலிகள் தந்த கட்டுரையை நானே பிரசுரித்தேன். அந்தக் கட்டுரை இப்போது எனக்குக் கை கொடுத்தது. கட்டுரையில் சொல்லப்பட்டனவற்றை நானே நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது தட்டிவான் மீது குண்டுவிழவும் சரியாக இருந்தது. தட்டிவான் மீது விழுந்த குண்டில் தட்டிவான் எரிந்து சாம்பலானது. அரிசி மூட்டைகள் சிதறி எறியப்பட்டன. அந்தோ பரிதாபம். கிளிநொச்சி பஸ் ஸ்டாண்டில் டீசல் விற்பனை செய்த மனிதர்கள் ஒரு கண நேரத்தில் இந்த உலகையே விட்டுச் சென்றார்கள். அவர்களின் தொகை பத்துக்கு மேல்! அந்த மனிதர்கள் இந்த உலகத்திற்கு வந்ததே அவலப்பட்டு அழியத்தானா? எரிந்து சாம்பராகத் தானா? சில நிமிட நேரங்களுக்கு முன்பு எனக்குச் சவரம் செய்து விட்டானே ஒரு மனிதன்! அதோ விழுந்த குண்டால் இறைவனடி சென்று விட்டான்.

எங்கும் புகை மண்டலம். நான் மரத்தடியில் படுத்துக் கொண்டே நோட்டம் விட்டேன். டீசல் எரிந்து கொண்டிருந்து. எல்லாமே இறந்துபோன வியாபாரிகள் விற்பனைக்காக வைத்திருந்த டீசலே என்பது புரிந்தது. அந்தச் சுற்று வட்டாரத்திலே. எங்கும் பகல் இருளாக இருந்தது. நான் குப்புறமாகப் படுத்திருந்தது கிளிநொச்சிக் கச்சேரியின் உட்புறம் என்று இப்போது தான் எனது புலனுக்குத் தெரிந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் விமானம் அகன்று விட்டது. நானும் எழுந்து கிழக்குப் பக்கமாக ஓடினேன். எனது நிலை கண்டு இரங்கிய ஒரு வீட்டுக்காரி மூன்று போத்தல் தண்ணீர் தந்ததும் அதனை நான் களைப்பினால் குடித்துத் தீர்த்ததும், நான் உண்மையில் ஒரு மாடாக மாறிவிட்டேனா என்று துன்பத்திலும் கூட நான் நினைத்துச் சிரித்ததும் இப்போதும் கூட ஞாபகம் வருகின்றது.

இப்போது தான் உண்மையிலேயே எனக்குத் திடீர் ஞாபகம் வந்தது. அது என்ன?

ஆமாம்... நான் தட்டிவானை விட்டுச் சென்ற போது அதற்குள் தான் எனது அலுவலகப் பை இருந்தது. அதற்குள் கச்சேரியில் நான் கடனாக எடுத்த பணம் இருந்தது. அதன் தொகை இருபதாயிரம். அந்தப் பை எப்படிப் போயிருக்கும்! யாராவது எடுத்திருப்பார்களா? தருவார்களா? எனக் கிளிநொச்சி பஸ் நிலையப் பக்கமாக ஓடினேன். நூற்றுக்கு மேற்பட்ட துவிச் சக்கர வண்டிகள் ஒரு சில்லு எரிந்த நிலையில் காணப்பட்டன. இந்நிலையில் விடுப்புப் பார்க்க ஓடி வந்த பலருக்கும் விடுதலைப் புலிகள் எச்சரிக்கை அடிகள் அடிப்பதையும் காண முடிந்தது. தப்பிய பொருட்கள் விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் இருப்பதாக ஒருவர் கூறினார். உடனே நானும் அங்கு ஓடினேன். விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் ஒருவர் கூறினார்; "உங்கடை உயிர்தப்பியதே போதும் எனப் போங்கோ; இங்கு தப்பியது என எதுவும் இல்லை"

ஏமாற்றத்துடன் அவ்விடம் இருந்து திரும்பினேன். அப்போதுதான் எனது ஆத்ம நண்பர் சீவரத்தினம், சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

வா வா என அழைத்த நண்பர் சீவரத்தினம் சைக்கிளில் முதன்நாள் நான் இருந்த ஹோட்டலுக்குக் கொண்டு சென்று சேர்த்தார். நான் வந்த கோலத்தையும் நமக்கு நடந்த அவலத்தையும் கண்டு அங்கு பணியாற்றிய சிப்பந்திகள் உள்ளூரக் கவலை அடைந்தனர். அண்ணே ஏதும் சாப்பிடுவோமா? எனக் கேட்டார் சாப்பாடு போடுபவர். நான் பட்ட கஷ்டம் அவரை வாட்டி இருக்க வேண்டும்? சாப்பாட்டை எடுத்து வைத்துத் தலைவாழை இலை இட்டார். அதில் போட்டார் சாப்பாடு. அந்தச் சாப்பாடு தான் நான் வாழ்க்கையில் ருசியாகச் சாப்பிட்ட சாப்பாடு. ஏனெனில் எனது காசு யாவும் எரிந்து விட்ட நிலையினில் எனக்காக அனுதாபப்பட்டு ஹோட்டல் முதலாளி போடும் ஒரு சாப்பாடு இது!

சாப்பிட்டு முடிந்தது; இலையை எறிந்து விட்டு கைகளை அலம்பிய பின்பு மீண்டும் சாப்பாட்டு மேசையை அடைந்தேன் தண்ணீர் குடிப்பதற்காக. எனக்காக அனுதாபப்பட்டுச் சாப்பாடு போட்டார்களே என நான் நினைத்திருந்தது, எவ்வளவு தப்பெனத் தெரிந்தது. ஒரு சிறிய கோப்பையில் "பில்" (Bill) ஒன்றிருந்தது. அதில் 40ரூபா எழுதப்பட்டிருந்தது.

நாற்பது ரூபாவுக்கு வழி இல்லாத நிலையில் எனது நண்பர் சீவரத்தினமே இந்தக் காசைக் கட்டினார் பெருமையுடன் மீண்டும் ஊர் போவதற்கு ரூபா ஆயிரம் தந்து உதவினார்.

அந்தக் காசின் உதவியுடன் ஒரு மோட்டார் சைக்கிளில் பூநகரியை அடுத்த நாள் சென்றடைந்தேன். நான் போவதற்கு முன்பு ஒரு பிரேதப் பெட்டி பூநகரியிற்கு வந்திருந்தது. ஒரு வயதான அம்மா மருமகனே என அழுதது மனதினை வாட்டி வதைத்தது.

விமானக்குண்டினால் மரணம் அடைந்த அந்த மனிதர் கம்பர் மலையைச் சேர்ந்தவர். எமது தட்டி வானுக்குக் குண்டு விழ முன்பு லொறி ஒன்றில் குண்டு விழுந்ததாக எழுதினேன் அல்லவா? அன்று தலையின்றி உயிர் பிரிந்த அந்த அப்பாவி மனிதனுடைய உடலே அது என அறிந்து நானும் அழுதேன்.

நான் திக்கம் செல்ல மேலும் ஒரு மணி நேரம் ஆயிற்று.

யாவும் உண்மை!



# காதலர் தினம்

எஸ். சந்திரபோஸ்

வரலாறு: கி.பி. 270 பெப்ரவரி மாதம் 14ஆம் நாள் கிரேக்க நாட்டின் ரோமாபுரியில் 'வலெண்டையின்' என்ற கிறிஸ்தவப் பாதிரியார், ரோமானிய சக்கரவர்த்தியான இரண்டாம் கிளாடி என்பவன் கட்டளைக்கமைய கல்லால் அடித்துச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனை பெற்றநாளே இன்று உலகெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினமாகும்.

அதாவது உலகெங்கும் இன்று இன்பகரமாக இளைஞர்கள் கொண்டாடும் காதலர்தினம் ஒரு துன்பியல் வரலாறாகும்

கொடூரமாகவும் கோமாளித்தனமாகவும் ஆட்சிபுரிந்த ரோமானிய சக்கரவர்த்தி இரண்டாம் கிளாடி இட்ட முட்டாள் தனமான கட்டளைகளால் அவனை விட்டு பல இராணுவ வீரர்கள் விலகத் தொடங்கினர். புதிதாகவும் இராணுவத்தில் சேரவும் மக்கள் யாரும் முன்வரவில்லை. மன்னனின் அமைச்சர்களோ, அவனது பரிவாரங்களோ படைக்கு வீரர்களைச் சேர்த்துக் கொள்ளவோ ஆக்கபூர்வமான யோசனைகளைக் கூறவில்லை இதனால், ஆத்திரமுற்றிருந்தான் இரண்டாம் கிளாடி.

ஒரு நாள் தனது அந்தரங்க நாயகியுடன் மகிழ்வோடு இருந்த நள்ளிரவில் மன்னன் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது.

திருமணமானவர்கள் தத்தம் அன்பு மனைவியவர்களை விட்டுவர மனமில்லாமலும் திருமணமாகாதவர்கள் தத்தமது காதலிகளை விட்டு வரமுடியாமலும் இருப்பதனாலேயே தனது இராணுவத்தில் வந்து சேரத் தயங்குகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் குடும்ப வாழ்க்கை என்று ஒன்று இல்லாது விட்டால் இவர்கள் வாழ்வை வெறுத்து இராணுவத்தில் வந்து இணைந்து கொள்வார்கள். போரிலும் முர்க்கத்தனமாகப் போரிடுவார்கள். வெற்றிகள் எளிதில் கிட்டும் என்றதொரு முட்டாள்தனமான எண்ணம் தோன்றியது. உடனே நள்ளிரவு என்றும் பாராது தனது அந்தரங்க அமைச்சரை அழைத்து "ரோமாபுரி நாட்டில் இனியாரும் திருமணம் செய்யக்கூடாது. ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும். இவ்வரச கட்டளையை மீறுபவர்கள் எவராயினும் கைதுசெய்யப்பட்டு இருட்டறையில் அடைக்கப்பட்டு பிறிதோர் தினத்தில் கல்லால் அடித்துச் சித்திரவதை செய்து தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்படுவார்கள்" என்ற அறிவிப்பை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கும்படி பணித்தான். அரசகட்டளையை மீறமுடியாத அமைச்சர் அதனை நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இருமனங்கள் இணைவதனை மன்னன் அறுத்தெறியத் துணிந்தபோது திருமணங்கள் கனவாகிப்போன சோகத்தில் உரோமாபுரி சோகக் கண்ணீரில் மிதந்தது.

இதனை எதிர்த்து கிறிஸ்தவப் பாதிரியார் வலெண்டையின் அரச கட்டளையையும் மீறி திருமணங்கள் செய்து வைத்தார். இச்செய்தி அரசனுக்கு எட்டவே; பாதிரியார் வலெண்டையின் இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதேவேளை வலெண்டையின் பாதிரியாரின் கதையின் இன்னுமொரு வடிவமும் உண்டு. அதன் பிரகாரம் சிறையில் இருந்த காலத்தில் சிறைக்காவலன் மகளான பார்வையற்ற அஸ்ரோரியஸ்சுக்கும் பாதிரியார் வலெண்டையினுக்கும் காதல் மலர்ந்தது. இதனை அறிந்த அரசன் அஸ்ரோரி-யஸ்சை வீட்டுக்காவலில் வைத்தார்.

வலெண்டையினின் காதலால் கண்கிடைத்தது போல் மகிழ்ந்த அஸ்ரோரியஸ்சின் கனவுகள் சிதைந்ததில் அவள் கலங்கினாள். ஆனால் வலெண்டையினின் மரணதண்டனை மாற்றம் பெறவில்லை. ஒரு காகித அட்டையில் அஸ்ரோரியஸ்சுக்குப் பாதிரியார் ஒரு கவிதை வரைந்து வைத்து விட்டு மரண தண்டனையை ஏற்கத் தயாரானார்.


பாதிரியார் வலெண்டையின் கல்லால் அடிக்கப் பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு தலை துண டிக்கப்பட்ட அதேநேரத்தில் அரசரின் அத்தனை கட்டுக்காவல்களையும் மீறி வலெ ண்டையின் வரைந்த கவிதையைத் தாங்கிய காகித அட்டை அஸ்ரோரியஸ்சிடம் வந்து சேர்ந்தது. அக்கவிதையை அவளது தோழிகள் வாசிக்க அஸ்ரோரியஸ் கண்களில் இருந்து கண்ணீர் மழை பொழிந்தது. கவிதை வரிகள் இவை.

வழி இருந்தும்
வழியில்லாமல் - மன்னன்
பழி தாங்கிப் போகிறேன்
விழி இழந்து - பார்க்க
வழி இழந்து, நீ மன
வலி தாங்காது கதறும்
ஒலி கேட்டும் உன்னை மீட்க
வழி தெரியாமல் மக்களுக்காய்
பலியாடாகப் போகிறேன் - நீ
ஒளியாய் வாழு! பிறருக்கு
வழியாய் இரு! சந்தோச
ஒளி உன் கண்களிலே மின்னும்
-உன்னுடைய வலெண்டைன்

# மரணம் வரை....

அன்பு என்பது அழகானது
யாருமதைத் தொலைத்திடாத வரை
நினைவு என்பது அழகானது
அதை நினைனக்காத வரை
காதல் என்பது தெய்வீகமானது
யாரையும் காதலிக்காத வரை
நட்பு புனிதமானது
நமது துன்பத்தில்
நழுவும் நண்பர்களைக்
காணாத வரை
பிரிவு என்பதும் கொடுமையானது
யாவரையும் பிரியாத வரை
சொந்தம் சுகந்தமானது
எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றமாகாத வரை
நிலவும் அழகானது
அமாவாசை
இல்லாத வரை
சூரியனும் அழகானது
இருட்டு வராத வரை
மேகமும் அழகானது
மழை வராத வரை
நெருப்பும்
விசுவாசமானது
வீட்டை எரிக்காத வரை
வாழ்க்கையும் கூட நிரந்தரமானது
மரணம் வரும் வரை...

*சுப்பிரமணியம் சுகதினி*
*இலங்கை*



# இனியும் கொடிய இருள் வேண்டாம்

புயலால் சிதைந்த எம் தேசத்தில்
புன்னகை தன்னை மறந்து நின்றோம்
உறவுகள் எல்லாம் பிரிந்து நின்றோம்.
உரிமைகள் யாவும் இழந்து நின்றோம்.
இரவுகள் தோறும் விழித்து எழுந்தோம்
இதயம் துடிக்க ஏங்கி நின்றோம்.
விடிவொன்று வருமா? என எண்ணி
விழியினில் நீரைச் சுமந்து நின்றோம்.

மெல்லெனத் தென்றல் வீசக்கண்டு
மேனி சிலிர்த்தது மெய்மறந்து.
கனவல்ல இதுவும் நிஜமென்றே
உவகை கொண்டது உள்ளமுந்தான்
உறவுகள் மீண்டும் சேரக்கண்டு
உதட்டில் புன்னகை பூத்ததின்று
நிலவும் வானும் உள்ளவரை
நிஜமாய்த் தென்றல் தினமும் வீசிடவே
மலரும் பொழுதுகள் யாவும் இனி
மகிழ்வாய் ஈழமண் செழித்திடவே!
இறைவா! உன்னிடம் வேண்டுகிறேன்
இனியும் கொடிய இருள் வேண்டாம்.

- புங்கை எம். எம். குமார்
மானிப்பாய்



# குறுக்கு எழுத்துப் போட்டி இல. 04

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| | | 2 | 3 | | | | |
| | | | | | | | 4 |
| 5 | | | | | | | |
| | | | 6 | | | | 7 |
| | | 8 | | | 9 | | |
| | | | 10 | | | | |
| | 11 | | 12 | | 13 | | |

### இடமிருந்து வலம்

1. பீஷ்மர்
3. வாழ்த்து (வல-இட)
4. கூர்மை (வல-இட)
5. குந்தி மைந்தர்களில் மூத்தவன்
6. கழனி
8. ஆண்மான்
9. பத்தாவது திதி
10. ஒரு வகைச் செடி (வல-இட)
11. கிணற்றில் நீர் இறைக்க உதவுவது (வல-இட)
12. தாறுமாறு

### மேலிருந்து கீழ்

1. வீமனின் மகன்
2. முடி (கீழ்-மேல்)
3. கூர்மம் (கீழ்-மேல்)
4. முனை (கீழ்-மேல்)
7. நேர அளவு
8. மது
11. திரவத் திவலை (கீழ்-மேல்)
12. துரோணரால் வஞ்சிக்கப்பட்டவன் (கீழ்-மேல்)
13. மாதர் தலைமயிர் (கீழ்-மேல்)

குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் ஏப்பிரல் 1, 2003 இற்கு முன்பாக உலகத்தமிழோசை முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். சரியான பதில்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.

குறுக்கெழுத்துப் போட்டி "உலகத் தமிழோசை" சஞ்சிகையின் மேலேயுள்ள பெட்டியில் மட்டுமே நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

முதல் பரிசு **Can$50.00** - "யோகாஸ்" கனடா
இரண்டாவது பரிசு **Can$40.00** - "நிரு ஐரோப்பா லிமிட்டட்" இங்கிலாந்து
மூன்றாம் பரிசு **Can$30.00** - "ரகு என்டர்பிரைசஸ்" கொழும்பு, இலங்கை
ஆகியோரின் ஆதரவில் வழங்கப்படுகின்றன.

உலகத்தமிழோசை, யோகாஸ், நிரு ஐரோப்பா லிமிட்டட், ரகு என்டர்பிரைசஸ், பிறட் மாஸ்ரர் பேக்கறி நிறுவனத்தினர், உறவினர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் முடிவே இறுதியானது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | த் | 2 தா | கி | ப் | | டி | 3 கோ |
| ம | | ர் | | | 4 உ | | மே |
| ர | | | | றி | 5 த | | த |
| 6 ச | ம | நி | லை | | று | யி | 7 க |
| ம் | | | ல் | 8 க | | | ம் |
| | 9 பூ | | 10 எ | ண் | 11 ண | ம் | |
| ய் | | ணி | | டி | | | 12 கை |
| 11 நெ | ய் | 12 த | ல் | | ம் | ர | 13 ஈ |


## போட்டி 03இல் வெற்றிபெற்றவர்கள்

1. இ. இராஜேஸ்வரன், மட்டக்களப்பு, இலங்கை
2. எம். ரமணன், ரொறன்ரோ, கனடா
3. பி. பரந்தாமன், யாழ்ப்பாணம், இலங்கை

### வாசகர்களின் கவனத்திற்கு

உலகத் தமிழோசைக்கு உங்கள் ஆக்கங்கள் (அரசியல், விஞ்ஞானம், ஆன்மீகம், விளையாட்டு, இலக்கியம், கலை பண்பாடு) எதிர்பார்க்கப் படுகின்றன. இலக்கியம் தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் 600 சொற்களுக்குள்ளானதாக இருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை எழுதி அனுப்புபவர்கள் தாளின் ஒரு பக்கத்தில் போதிய இடைவெளியுடன் அடித்தல், திருத்தலின்றி எழுதி அனுப்புங்கள். ஆக்கங்கள் தமிழோசைக்கென எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். தெளிவு, இட நோக்குகளுக்காக ஆக்கங்களை திருத்துவதற்கு ஆசிரியருக்கு உரிமை உள்ளது.

# TO GET THE BEST DEAL IN TOWN...





பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள்

# பீற்றர் ஜோசப்

Tel: 416-757-7707 Fax: 416-757-7709

# "தமிழர் சங்கமம்"

பீற்றர் ஜோசப் அன்ட் அசோசியேட்ஸ்

## அகதிநிலைக் கோரிக்கைகள், மேன்முறையீடுகள், கருணை மனு

**ஸ்பொன்சர்**

குடும்ப அங்கத்தவர்
உறவினர்
தத்தெடுத்தல்
குறூப் ஸ்பொன்சர்
Inland Sponsor

**விசா முறைகள்**

INDEPENDENT IMMIGRANT
INVESTORS VISA
STUDENT VISA
SKILLED WORKERS
VISITOR VISA
LIVE IN CARE GIVER

# TRAFFIC TICKETS - PETER JOSEPH

DETENTION REVIEWS
BAIL HEARINGS
CRIMINAL MATTERS
FAMILY MATTERS
WORK PLACE? E.I.? O.W.?
CAR ACCIDENT INJURY CLAIMS



அனைத்துச் சேவைகளும்
ஒரே இடத்தில்.
முதலில் அழையுங்கள்



email: peterjoseph@bellnet.com

www.callpeterjoseph.com

2425 Eglinton Ave. East, # 212., Scarborough, ON. M1K 5G8

குலம் சண்முகம்

# சிட்னி மலர்

2003, புதிய ஆண்டு தொடங்கியதுமே அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர்கள் விழா எடுத்தனர். புத்தாண்டு விழா அல்ல! ! மூன்றாவது தமிழ் எழுத்தாளர் விழா. இது 'பறவை' என்ற நாவலுக்காக இலங்கை சாகித்திய இலக்கியப் பரிசு பெற்ற பிரபல எழுத்தாளர் லெ. முருகபூபதியினால் 2001இல் மெல்பேர்ணில் தொடக்கி வைக்கப்பட்டது. இரண்டாவது விழா கடந்த வருடம் சிட்னியில் நடைபெற்றது. உண்மையில் வாசகர்களும் தமிழ் மொழி, இலக்கிய கலாசார ஆர்வலர்களுமே பெரும்பாலும் பங்குபற்றுகின்ற இந்த விழா ஏனோ எழுத்தாளர் விழா என்றே அழைக்கப்படுகிறது. கலையும் இலக்கியமும் இனத்தின் கண்கள் என்ற கருத்தை மையமாகக் கொண்டே இந்த விழா நடத்தப்படுகின்றது.


இவற்றின் முடிவுகள் எப்படி அமைந்தாலும் ஒரு விடயம் நன்கு தெரிகிறது. எமது விடைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அளிப்பதை விட மேலும் பல கேள்விகளையே தோற்றுவிக்கின்றன. எங்களை நாம் அடிக்கடி கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றோம். யதார்த்தத்தை தரிசிக்க எமக்கு இவை அரிய சந்தர்ப்பங்கள்.

முதலாம் நாளில் பலர் கட்டுரைகள் சமர்ப்பித்து அவை தொடர்பான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர். இங்கு புலம்பெயர் சூழலில் பெற்றோர் பிள்ளைகள் உறவு, பெண்களின் நிலை, ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள், ஓவியம் போன்ற பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன. மாலையில் சில கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அடுத்த நாள் நிகழ்வுகள் திறந்த வெளியில் கவி பாடி, கூழ் குடிக்கும் நிகழ்வாக அமைந்தது. கவிஞர் அம்பி ஒரு தடவை சொன்னது போல் கூழுக்குக் கவிபாடும், ஒன்று கூடல் இது.

லியோனி, சாலமன் பாப்பையா ஆகியோரின் பட்டி மன்றங்களின் தாக்கமோ தெரியவில்லை, இப்பொழுதெல்லாம் இங்கே அதிகளவில் விவாத அரங்குகள் நடைபெறுகின்றன. அவுஸ்திரேலிய மேடைகளில் இயற்றமிழ் நிகழ்வுகள் அரிதாகவே இருப்பதுண்டு. இசை, நடனம், நாடகம் என்பவற்றுக்குக் குறைவேயில்லை இது பற்றி யாழ். கம்பன் கழக முன்னாள் தலைவர் திரு. நந்தகுமார் அவர்கள் ஒரு மேடையிலே சாடியிருந்தார். அரங்கிலே ஒருவர் தமிழிலே பேசுவதை எம் இளஞ் சந்ததியினர் ஒரு அவைக்காற்றுக் கலையாக, சுவையான நிகழ்வாகக் கண்டு கேட்டு ரசிக்கும் சூழல் இல்லாத நிலையில் அவர்களைப் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்ற வைத்தல் விழலுக்கிறைத்த நீரென்றார்.

இதனாலோ என்னவோ மெல்பேர்ணில் இரண்டு பட்டி மன்றங்கள் நடைபெற்றன. செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதில் விஞ்சி நிற்பவன் கர்ணனா? கும்பகர்ணனா? என்று வாதாடினார்கள். புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் தமிழ் கற்பது அவசியமா? அவசியமில்லையா? என்பது அடுத்த தலைப்பு. சிட்னியில் விவாதத்திற்கு எடுத்த தலைப்புக்கள் சற்று வித்தியாசமானவை. புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் தமது மரபு முறைகளையும் பண்பாட்டினையும் தொடர்வது சாத்தியமா? சாத்தியமில்லையா? இன்னுமொன்று, புலம்பெயர் சூழலில் வாழ்கின்ற எம் இளஞ் சிறார்களின் தமிழ் அறிவு தமிழ் திரைப்படங்களினால் மெருகூட்டப்படுகிறதா? மெருகூட்டப்படவில்லையா? இவற்றின் முடிவுகள் எப்படி அமைந்தாலும் ஒரு விடயம் நன்கு தெரிகிறது. எமது விடைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அளிப்பதை விட மேலும் பல கேள்விகளையே தோற்றுவிக்கின்றன. எங்களை நாம் அடிக்கடி கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றோம். யதார்த்தத்தை தரிசிக்க எமக்கு இவை அரிய சந்தர்ப்பங்கள்.

சில வீடுகளில் பெற்றோர் இலங்கை கிரிக்கட் அணியினருக்கு ஆதரவாகவும் பிள்ளைகள் அவுஸ்திரேலிய அணியினருக்கு ஆதரவாகவும் பந்தயமே போட்டனர். இதற்கு மாறாகவும் சில இடங்களில் இருந்திருக்கலாம். இலங்கையில் தமிழ் சிங்கள உறவுகள் தற்போது நடைபெறும் அரசு புலிகள் பேச்சு வார்த்தைகளின் மூலம் ஆரோக்கியமடைதல், பாடசாலை விடுமுறை காரணமாக பிள்ளைகள் வீட்டிலே இருத்தல் என்பன இலங்கை கிரிக்கட் அணியினர் பற்றி எல்லோரும் பெரிதாக அலட்டிக்கொள்ள வழிவகுத்தன. இங்கே நடந்து கொண்டிருக்கும் தொடர் ஆட்டங்களில் பல தோல்விகளை இலங்கை அணி சந்தித்தது. எனினும் அவுஸ்திரேலியாவை வென்ற மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வீரர்கள் ஒலிம்பிக் விளையாட்டரங்கில் (இல. தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற Homebush என்ற சிறுநகர் இந்த அரங்கிலிருந்து பந்தெறி தூரத்தில்தான் அமைந்துள்ளது) ரசிகர்களைச் சந்தித்தனர். கை குலுக்கல், கையெழுத்திடல், கையசைத்தல், கைப்பாசை காட்டல் என்று தூள் கிளப்பினர். பல மைல் தூர இடங்களிலிருந்து பெரியவர்களும் பிள்ளைகளும் அங்கே சென்று அவர்களைக் கண்டு கொண்டனர். அத்தபத்துவைப் பிள்ளைகளுக்குப் பிடிக்கும் என்று தாய்மாரும் சென்று அவருடன் ஆர்வத்துடன் கதைத்தனராம். வீரர்கள் சென்று ரசிகர்களுடன் சாதாரணமாக கதைத்து சிரித்தார்களாம். ஆனால் நிகழ்வினை ஒழுங்கு செய்தவர்களோ, தாங்களே எடுப்பான துடுப்பாட்டக்காரர்களைப் போன்று சற்று அசாதாரணமாக நடந்து கொண்டதாக சிலர் கவலைப்பட்டனர். முரளியைப் பார்க்கச் சென்ற பலர் முன்னே நின்ற சில முத்தைய்யாக்களையே பார்த்து விட்டுத் திரும்பியதாக தகவல்.



குலம் சண்முகம் - ஸ்கொட்லாந்தில் முதுமானிப் பட்டம் பெற்றவர். தற்போது அவுஸ்திரேலியாவில் ஆசிரியராகவும் நூலகராவும் பணிபுரிகிறார்.

"நீங்கள் தூங்கும் போதும்
நாங்கள் விழித்திருக்கிறோம்"




உலகின் முதலாவது 24 மணி நேரத் தனித் தமிழ் ஒலிபரப்பு

CTBC

416.429.2822
Fax: 416.429.2899
www.ctbc.com

ஓம் சாயிராம்

# ஜெயசாயி நகை மாளிகை




Head Office:
3601 Lawrence Ave. East, Units 14&12, Scarborough, ON, Canada

**Tel: 416.431.1536,**
**Fax: 416.431.7712**

Branch
2580 Sheppard Ave., Unit 45, Newin Centre, Mississauga, Canada

**Tel: 905.270.1558,**
**Fax: 905.270.1553**

எமது புதிய கிளை யாழ். நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது
www.jayasaji.com